சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்

திருக்கோயில்கள்

தலவரலாறு



திருவெற்றியூர்

ஸ்ரீ பாகம்பிரியாள்

34-1

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்

திருக்கோயில்கள் ஸ்தல வரலாறு

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர்

மாண்புமிகு. **KR. பெரியகருப்பன்** B.Com., B.L., அவர்கள்

தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை ஆட்சித்துறை

செயலாளர்

திருமிகு. **து.ராஜேந்திரன்** இ.ஆ.ப., அவர்கள்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர்

திருமிகு. **த.பிச்சாண்டி** இ.ஆ.ப., அவர்கள்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை இணை ஆணையர்

திருமிகு. **தி.சுவாமிநாதன்** பி.ஏ., பி.எல்., அவர்கள்

வெளியீடு

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்

சிவகங்கை

சிவகங்கை

சமஸ்தானம் தேவஸ்தானம்

திருக்கோயில்கள்

ஸ்தல வரலாறு

ஆசிரியர்

பல்லவராயன்

ராஜாமணி குமரேசன் எம்.காம்., பி.எட்.,

பட்டமங்கலம்.

வெளியீடு :

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்

சிவகங்கை

சிவகங்கை மாவட்டம்.

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் திருக்கோயில்கள் ஸ்தல வரலாறு

ஆசிரியர் : பல்லவராயன் ராஜாமணி குமரேசன் எம்.காம், பி.எட்,

உரிமை : சிவகங்கை தேவஸ்தானம்

பக்கம் : VIII + 99

முதல் பதிப்பு : செப்டம்பர் 2003, 3000 பிரதிகள்

இரண்டாம் பதிப்பு : ஜூன் 2007, 3000 பிரதிகள்

அச்சாக்கம் : பாபு, ஆப்செட் பிரிண்டர்ஸ்
சிவகங்கை

வெளியீடு : சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்,
சிவகங்கை.

முன் அட்டை : அருள்மிகு பாகம்பிரியாள்–திருவெற்றியூர்.

பின் அட்டை : அருள்மிகு கண்ணுடையநாயகி அம்மன்
–நாட்டரசன்கோட்டை.

விலை : ரூ.40/ –



மேதகு ராணி

D.S.K. மதுராந்தகி நாச்சியார்

பரம்பரை அறங்காவலர்

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்

வாழ்த்துரை

மேதகு சிவகங்கை ராணி சாகிபா
D.S.K.மதுராந்தகி நாச்சியார்
பரம்பரை அறங்காவலர்
சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்

வரலாற்றுச்சிறப்புமிக்க சமஸ்தானங்களில் முக்கிய இடம் பெறுவது சிவகங்கை சமஸ்தானம். சிவகங்கை மன்னர்கள் தெய்வீகத்தையும் தேசியத்தையும் இருகண்களாக பாவித்து ஆட்சி செலுத்தினர்.

தேசி (இராமேஸ்வரம்), முதல் காசி வரை ஆலயங்கள் நிர்வகித்தும், கட்டளைகள் மூலம் நித்ய வழிபாடுகள், விஷேச விழாக்களில் பங்குகொண்டும், சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் ஆன்மீகம் மூலம் கலை, பண்பாடு, மரபுகளை மாண்புடன் பராமரித்து வருகிறது.

ஐந்து மாவட்டங்களில் அமைந்துள்ள ஆலயங்கள்—அதன் எண்ணிறந்த உபதிருக்கோயில்கள் ஆகியவற்றுக்கு பாரம்பரியமாக நிர்வாகம் நடைபெற படித்தர, ஊழிய நிலங்கள், மாணிபங்கள் வழங்கியும், பாவலர்களுக்கும், வேதபாராயணத்திற்கும், கிராமதானங்கள், நிவந்தங்கள் விடுத்தும், மூவேந்தர்களின் விருப்பத்தை பூர்த்திசெய்யும் வழியில்—மாமன்னர்கள் செய்த அறங்களை இன்றும் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் நிறுவனம் மூலம் சிவகங்கை அரசமரபினர் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து தர்மம் காத்து வருவது அறிந்த உண்மை.

ஆலயங்களின் முக்கியத்துவம் அண்மைக்காலத்தில் பண்பாடு காக்க அவசியமானது என்பது கருதி திருக்கோயில்களை தெரிந்துகொள்ளவும், அருமை அறியவும், ஆற்றுப்படுத்த வேண்டிய அவசியம் கருதியும், சிவகங்கை சமஸ்தானம் திருக்கோயில்களின் வரலாறு தொகுக்க வேண்டிய அவசியம் கருதி சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பணியாளர் பல்லவராயன் ராஜாமணி குமரேசன் இத்தலவரலாற்று நூலை தொகுத்து வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூல் எல்லோருக்கும் கிடைக்கப்பெற்று ஆலய வழிபாடு மற்றும் வளர்ச்சியில் ஆக்கமும், ஊக்கமும் பெற வாழ்த்துகிறேன்.

(ஒப்பம்)

D.S.K.மதுராந்தகி நாச்சியார்.

அணிந்துரை

பா.இளங்கோ பி.காம்., பி.எல்.,
தேவஸ்தான மேலாளர்
சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்

"சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் திருக்கோயில்கள்" ஸ்தல வரலாற்று நூல் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் மேதகு இராணி D.S.K.மதுராந்தகி நாச்சியார் அவர்கள் ஆணைப்படி முதன்முதலாக தேவஸ்தான பணியாளர் மூலம் வெளிவருவது மிக்கமகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

"மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை"

என்பார் திருமூலர். ஆலயங்கள் பல நூற்றாண்டு காலமாக ஆன்மநேயர்களுக்கு அருள்செய்து இன்றும்–எப்போதும் நிரந்தரமாக அருள்நல்கும் நிறுவனங்கள். அவற்றை நாம் காணும் கண்களால் கட்டுமான பொருள்களைக்கொண்டு காலத்தை அளவிட்டும், காணாத ஞானக்கண்களால் அவற்றின் அருளும் நிலையை உணர்ந்தும், ஸ்தலவரலாறுகள் புராண செய்திகளைக்கொண்டு தொகுக்கப்படுகிறது.

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் நிறுவனத்தில் 108 திருக்கோயில்கள் மற்றும் அதன் உபகோயில்கள், 22 கட்டளைகள் ஆகியவற்றிற்கு முழுமையான ஸ்தலவரலாற்றுச்செய்தி நூலாக வெளியிட வேண்டும் என்ற முயற்சியில் தேவஸ்தான பணியாளர் பல்லவராயன் ராஜாமணி குமரேசனை பணித்தபோது

"ஐந்து வயது மகள் கோலமிட்டால் அதை
அழகில்லை என்றழிக்கும் தாயுமுண்டோ"

என்று கவிமணியின் பாடலை தெரிவித்தபடி ஏற்று தலவரலாற்று நூலை தொகுத்தளித்துள்ளார்.

இந்நூல் திருத்தலங்களில் உள்ளார்ந்த செய்திகளையும், அதன் ஆன்மீக ஆற்றலையும் வெளிக்காட்டும் சாதனமாக உள்ளது. அன்பர்கள் அனைவருக்கும் இந்நூல் கிடைக்கப்பெற்று ஆன்மீக எழுச்சியில் பங்கு கொண்டு அனைவரும் பயன் பெறவாழ்த்துக்கள்.

(ஒம்) **பா.இளங்கோ** பி.காம்., பி.எல்.,

ஆசிரியர் உரை

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட் டுடையார் அவர் தலைவர்
அன்னவர்க்கே சரண் நாங்களே"

என்பார் கவிச்சக்கரவர்த்தி கம்ப நாட்டாள்வார். இது அரச நெறி. எல்லையற்ற இயற்கை – ஒன்றுக்கொன்று ஆற்றல் சமன்பாடு– அதன் இயக்கங்களில் இனிமை – பேரின்பமாகிறது; ஒவ்வொரு உயிரும் பரிணாம வளர்ச்சியில் மேன்மை அடைவது அத்யாவசியம். மேன்மைக்கு வழிகாண்கிறது. அன்பு, அறிவு, அனுபவம்.

"இயக்கர் கின்னரர் எமனொடு வருணர் இயங்கு தீ வளி ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலி வானரர் நாகர் வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்
அயற்பொன் றின்றி நின்திருவடியதனை அர்ச்சித்தார் பெறும் ஆரருள் கண்டு
திகைப்பொன் றின்றி நின் திருவடி அடைந்தேன் செழும் பொழிற்
திருப்புங்கூர் உளானே"!

\- சுந்தரர்

மானிட இனம் மட்டுமின்றி மற்றைய உயிர்த் தொகுதிகள் கூட இறைமை என்பதை உணர்ந்து உயர்வடைந்துள்ளன என்பது அருளாளர் கண்ட உண்மை. என்பதால், மண்பதை காக்கும் மாண்புடைய அரசர் பெருமக்கள், உலகம் அன்பு, அறம், மானம், வீரம் பொருள், பெருமை, பேரின்பம் அடையவும், நிலைப்பாடுடைய செயலாக–கோயில்கள் உண்டாக்கி மக்களுக்கு வேண்டியவையும் அன்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு கற்பித்து வாழச்செய்தனர். "கோயில் தழுவிய குடி" என்பதை பட்டினப்பாலை இவ்வாறு இயம்புகிறது.

காடு கொன்று நாடு ஆக்கி
குளம் தொட்டு வளம் பெறுக்கி
பிறங்குநிலை மாடத்து உறந்தை போக்கி
கோயிலொடு குடி நிறீகி
வாயிலொடு புழை அமைத்து
ஞாயில் தொறும் புறை நிறீகி
பொருவேம் எனப்பெயர் கொடுத்து
ஒருவேம் என புறக்கொடாது
திருநிலையாகிய பெருமன் எயில்

–(பட்டினப்பாலை 283–291)

திருக்கோயில்கள் காலவெள்ளத்தை கடந்தவை. சிறு கோயில்களாக இருந்தாலும் மக்கள் மனத்தில் ஏற்றம் பெற்றவை. கலைநயம்மிக்கவை அவை வரலாற்றின் பதிவறை, நீதிமன்றங்களாக, மருத்துவ மனையாக ஆதுளர் சாலையாக, ஆவணக் காப்பகமாக அமைந்தவை. "மாயன் நாமம் ஒன்றும் ஓராயிரமாம் உள்குவார்க்கு உம்பர் ஊரே" - நம்மாழ்வார் அருளுவது போல ஒவ்வொரு கோயிலும் ஆயிரம் ஆயிரமாக பெருமை கொண்டவை. ஒவ்வொன்றும் தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாய் கூட்டியது போல.

சிவகங்கை அரசர் பெருமக்கள் வழிவழியாக ஆலயங்களின் அவசியம் கருதியே தம் வாழ்வையும் கருதாது, நிலையாக வழிவழியாக செயல்பட உறுதி செய்து, பரம்பரை அறங்காவலர்களாக பணி செய்து வருகிறார்கள்.

"செற்ற தெவ்வர் நின்வழி நடப்ப வியன்கண் முதுபொழில்
மண்டிலம் முற்றி
அரசியல் பிழையாது அறநெறி காட்டி
பெரியோர் சென்ற அவ்வழிப்பிரியாது"- *மதுரை காஞ்சியில்*

வழிகாட்டியபடி திருக்கோயில்கள் விளங்கச்செய்தனர்.

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் திருக்கோயில்கள் வரலாறு அன்பர்களுக்கு ஆற்றுப்படையாக அமைய வேண்டும் என்பது கருதி வரலாறு எழுத ஆணையிட்ட சிவகங்கை அரசி மேதகு **D.S.K.**மதுராந்தகிநாச்சியார் சமூகத்திற்கு எனது உளமார்ந்த நன்றியை காணிக்கையாக்குகிறேன். சிவகங்கை தேவஸ்தான மேலாளர் அவர்களுக்கும், தேவஸ்தான சிரஸ்தார் அவர்கள் என் உடன் பணியாற்றும் தேவஸ்தான அலுவலர்கள், என் கெழுதகை நண்பர்கள் திரு.பொ.சங்கரசுப்பிரமணியன், எழுத்தாளர் பாவைசந்திரன், எழுத்தாளர் நாகராஜன் அவர்களுக்கும், மருத்துவ மாமணி **P.**முருகராஜ் **M.S.,** (காரைக்குடி) அவர்களுக்கும் "பாபு ஆப்செட் பிரிண்டர்ஸ்" சிவகங்கை அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு திருத்தலமும் தனித்தனி வரலாற்றைக்கொண்டு தலபுராணம் கொண்டவை. அவற்றை அளித்த அருளாளர்கள் போற்றுதர்க்குரியவர்கள். அவர் தம் அடிச்சுவட்டில் படைத்த இந்நூலுக்கு ஆக்கம் தர, திருக்கோயில்களின் வளர்ச்சியில் பங்கு கொள்ள, பணிவுடன் வேண்டுகிறேன்.

பல்லவராயன் ராஜாமணி குமரேசன்
தேவஸ்தானம் பணியாளர்.

பொருளடக்கம்:

திருக்கோயில் பொது பூஜை அட்டவணை:

காலை 6.00 முதல் 6.30 திருவனந்தல் / விஷ்வரூபதரிசனம்

காலை 8–00 முதல் 9–00 விளாபூஜை

காலை 9.00 முதல் 9.30 காலசந்தி

பகல் 12.00 முதல் 1.00 உச்சிக்காலம்

மாலை 5.00 முதல் 5.30 சாயரட்சை

இரவு 8.00 முதல் 8.30 அர்த்தசாமம் / பள்ளியறை

தகவல்

அபிஷேக ஆராதனை உபயங்கள் விபரங்களுக்கு:

1. தேவஸ்தான மேலாளர் அவர்கள்,
   தலைமை அலுவலகம்,
   சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்,சிவகங்கை.
2. தேவஸ்தான கண்காணிப்பாளர்,
   சரக அலுவலகம்,
   / சம்பந்தப்பட்ட சரகங்கள்.
3. கோயில்மணியம் / கோவில் கர்ணம்/ ஸ்தானிகம்
   சம்பந்தப்பட்ட திருக்கோவில்கள்
4. இணையதளம்:
   WWW.KALAYARKOIL SWARNA KALEESWARAR TEMPLE .COM



உ

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சகாயம்

குருவணக்கம்

இந்திரனாய் சசிவண்ணன் தன்னை யாக்கி
எழும்சிவ கங்கைதன்னை கௌரிக்காக்கி
மந்திரத்தின் உட்பொருளாய் வயங்கி ராஜ
மதிவர்க்கம் மகிழ்ந்து கானத்
தந்திரங்கள் செய்த சிவமௌன யோகி
சக்திதரு சாத்தப்ப ஞானி வாழி!
புந்தியிலே எழுந்தருள்க; போற்றி போற்றி
புனித! தவராஜ! வாழி; வாழி!!

இறைவணக்கம்

பூரணத்தானை புனிதமுரு சிவகங்கை யதனின்
பொழில் அரண்மனை வாழ் கௌரி
காரணத்தானை மதுர நாயகிதன் கையதனால்
பிரதிட்டை செய் வெள்ளை
வாரணத்தானை வளர்அரசு நலம் திகழ
வந்தான் தன்னை வளனோங்கு
நாரணத்தான் மருகோனை நல்லோர் ஏத்தும்
ராஜவி நாயகனைநாடி வாழ்வோம்.

-ஆசிரியர்

சிவகங்கை சரக திருக்கோவில்கள்

1. சிவகங்கை:ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் திருக்கோயில்

சிவகங்கை ராஜதானியின் தலைநகராகவும், இன்று சிவகங்கை மாவட்டத்தின் தலைநகராகவும் திகழும் சிவகங்கை நகரில் நடு நாயகமாக கோயில் கொண்டுள்ளது. – இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில். இராஜகுலத்தின் அரசு முறை தெய்வமாக இராமநாதபுரம் சேதுபதிகளின் அரசு தெய்வமாக விளங்கிய ஸ்ரீ இராஜராஜேஸ்வரிக்கு சிவகங்கை அரசு உருவான போது ராஜா சசிவர்ணரால் பிடிமண் கொண்டு வரப்பட்டு சாத்தப்பஞானியாரால் கௌரி பஞ்சாட்சர மந்திர பிரதிஷ்டை செய்யப்பெற்றது. மன்னர் அவர்கள் "முத்து விஜய ரகுநாத கௌரி வல்லபா" என்ற மகுடத்துடன் அழைக்கப்பட்டார் அத்தகு அடைமொழியுடன் இராஜாங்கம் தொடர்கிறது. இவர் கி.பி.1730 முதல் 1750 வரை ஆட்சி செய்த பெருந்தகை.

சாத்தப்பஞானியார் அவர்களின் தவக்குடிலாக விளங்கிய வெள்ளை நாவலடி ஊற்றில் சிவகங்கை திருக்குளம் ஏற்படுத்தினார். தன் தலைநகரை சிவகங்கை எனவும் அழைத்தனர். இதற்கு முன்பாக இச்சிற்றூர் குளந்தாபுரி என அழைக்கப்பட்டது. மன்னர் சசிவர்ணர் இராணி அகிலாண்டேஸ்வரிநாச்சியார் அதன் பின்னர் வந்த மன்னர் பெருமக்கள் தன்குடும்ப தெய்வமாக போற்றி வழிபட்டனர்.

இராணி வேலுநாச்சியார் அவர்கள் மைசூர் ஹைதர் அலி மன்னர் அவர்களிடம் அரசியல் தஞ்சம் புகுந்து சிவகங்கையை மீட்டபோது மன்னர் ஹைதர் அலி, இராணி வேலுநாச்சியாரின் வீரத்தை மெச்சி ஸ்ரீ சிருங்கேரி சாரதா பிடாதிபதியின் பூரண ஆசியுடன் "உலோக திருமேனிகொண்ட ஸ்ரீ இராஜராஜேஸ்வரி விக்கிரம் பிரதிஷ்டை ஏற்பாடு செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. அது மூலமாக ஸ்ரீ சிருங்கேரி திருமட அறிவுரையின்படி வைதீக முறைப்படியும் தற்போது ஆகம முறைப்படியும் ஸ்ரீ சக்கர பிரதிஷ்டையுடன் பூஜைகள் நடந்து வருகின்றன.

ராஜகுடும்பத்தின் சொந்தக் கோயிலாக இருந்ததை மேதகு மன்னர் கார்த்திகேயர் பொதுமக்கள் வழிபாட்டுக்கு உட்படுத்தியும் சிவகங்கை தேவஸ்தான நிர்வாகத்தில் பூஜை திட்டங்கள் ஏற்படுத்தி நித்திய பூஜைகள் நடைபெற்று வருகின்றன. வெள்ளிக்கிழமைகளில் விஷேச பூஜைகள் நடைபெறுகிறது. மைசூர் தசரா விழாப்போல விஷேசமாக கலை வளர்க்கும் விழாவாக நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறுகிறது.

சித்தர் பெருமான் பூரண ஆசியுடனும், ஸ்ரீ சாரதாபீடத்தின் அறிவுரையுடனும் விளங்கும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கருணை வடிவமாக அருளாட்சி செய்தும்.

"ஊடுருவ பார்வை செய்யும் உண்மையுள்ளோர் கண்ட பொருளாக" பேசும் தெய்வமாக விளங்கி வருவது. மன்னர் துரைசிங்க ராஜா சிறு குழந்தையுடன் பேசுவதுபோல இத்தெய்வத்துடன் பேசி வாழ்ந்தார் என்பது வரலாறு.

ஆன்ம வெளிப்பாடுடனும், ஆர்வத்துடனும் அருள் தாகத்துடனும் தியாக உணர்வுடனும் உருவாகிய தெய்வநிலை என்பதால் – என்றும் சித்து பரிணமிக்கும் என்பது நிரந்தர உண்மை.

மகுடகாளி : இவ்வாலயத்தில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சன்னதி முன்புறம் வடக்கு நோக்கி தனித்தளியில் ஓவியமாக வீற்றிருக்கும் அன்னை உக்கிரமானவள். மன்னர்களின் மணிமகுடத்தை காக்கும் தேவதை. எண்கரத்துடன் அசுரவதம் செய்யும் அருட்கோலம். அரச வாழ்வென்பது நியமத்துடனும், நியாயத்துடனும் வீரத்துடனும் விவேகத்துடனும் வாழவேண்டியது என்பதற்கு இணங்க – இவள் பார்வை அறக்கருணையும், மறக்கருணையும் கொண்டு விளங்குகிறது.

சிவகங்கை அரண்மனை கன்னி மூலையிலும் மற்றும் சிவகங்கை திருக்குளம் வடக்கிலும் இயற்கையாகவே தரும முனீஸ்வரர் திருக்கோயில்கள் உள்ளன. மற்ற திருக்கோயில்கள் போலன்றி முனிகணங்கள் இயற்கையாகவே கோவில் கொண்டவை.

மன்னர் சசிவர்ணர்:

இக்கோவிலில் மன்னர் சசிவர்ணர் பெரிய உடையாத்தேவர் சிலாவிக்கிரகம் அன்னையை அஞ்சலி செய்த வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

இராஜவிநாயகர் இத்திருக்கோயிலில் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி உலோக விக்கிரகத்துடன் விநாயகர் அஷ்டபுய விநாயகர் வள்ளி, தெய்வானை, உடனுறை சுப்பிரமணியர் ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் மகாலெட்சுமி சிறுவிக்கிரகங்கள், ஸ்ரீசக்கரம், சிவசிதம்பரசக்கரம், வழிபடப்படுகின்றன. இருப்பினும் இதுவரை விநாயகபெருமான் விக்கிரம் அமையாத நிலையில் இராணி மேதகு டி.எஸ்.கே.மதுராந்தகி நாச்சியார் அவர்களால் 6.2.2003ம் நாள் வெண்மை கல்லால் செய்யப்பட்ட விநாயகர் விக்கிரகம் தனி விமானத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் மிக சிறப்பாக நடைபெற்றது.

இத்திருக்கோயில் சாகித்திய கர்த்தா பாபநாசம்சிவன் அவர்களால் சாகித்தியமும், சிவகங்கை அருட்கவி குசெ.இராமசாமி அவர்களால் "உன்னைச் சரண் அடைந்தேன்" என்ற நூலும் வெளியிடப்பட்டுள்ளது. இத்திருக்கோவிலின் காலை, மாலை காலங்களில் ஆகம முறைப்படி நித்திய பூஜைகள் நடைபெறுகின்றன. இத்திருக்கோயில் கும்பாபிஷேசம் 6.2.2003ம் நாள் சிறப்பாக நடைபெற்றது. இத்திருக்கோவிலில் தேசிய பறவையான மயில் கூட்டம் கூட்டமாக, நடனமாடுவது கண்கொள்ளாகாட்சி ஆகும். மயில் பராமரிப்புக்கு என்றே சிவகங்கை தேவஸ்தானம் தனித்திட்டம் வகுத்துள்ளது.

2. சிவகங்கை : பெரிய நாயகி அம்பாள் உடனுறை சசிவர்ணேஸ்வரர் திருக்கோயில்

சிவகங்கை அரண்மனையின் கிழக்கே தற்போது உள்ள பேருந்து நிலையம் அருகே உள்ள திருக்கோயில். கி.பி. 1751ல் மன்னர் முத்துவடுகநாதர் தந்தையாரும் முதல் மன்னருமான சிவகங்கை சசிவர்ண பெரிய உடையாத் தேவர் 1750ல் மறைந்ததும் பள்ளிப்படை கோயிலாக, கற்றளியாக கட்டப்பெற்றது. அன்னை ராணி அகிலாண்டேஸ்வரி நினைவாக பெரிய நாயகிகோயிலாகப் பெயர்விளங்குகிறது. இது மரபு.

மன்னர் முத்து வடுகநாதர் காலத்தில் சிவகங்கை அரசுக்கு அனுமக்கொடியும் கருடக்கொடியும் அரசு சின்னங்களாக இருந்தது, இவர்காலத்து செப்பேட்டால் விளங்கும் 1750–1760 காலங்களிலேயே தீண்டாமை என்றும் தீய நோய் பின்பற்றப்படாமல் ஆதிதிராவிடரும் ஆலயவழிபாட்டில் பங்குகொண்டனர்.

இக்கோயில் எழுந்தருளியுள்ள துர்க்கை தெற்குநோக்கி தனிக்கோட்டத்திலிருந்து கொண்டு வேண்டுவன வேண்டியாங்கு வேண்டியவருக்கு ஈந்து அருள்பாலிக்கிறார். நித்திய விஷேச வழிபாடுகளுடன் ஆட்டவிசேஷங்கள் சிறப்பாக நடைபெருகின்றன. இத்தலத்தில் துர்க்கையை வழிபடுவோர்க்கு மாங்கல்யபலன், விரைவில் திருமணம், உயர்கல்வி நிச்சயம் கிடைக்கப்பெறுகிறது. மகாகும்பாபிஷேக நாள்: 8.4.1988. சிவகங்கை திருக்குளம் அனுமார்கோவில் சிறந்து விளங்குகின்றன.

இத்திருக்கோயிலுக்கு வடக்கில் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி ரெங்கநாச்சியார் நினைவு நடுநிலைப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக திகழ்கிறது.

3. சிவகங்கை : அருள்மிகு விசாலாட்சி சமேத விஸ்வநாதசுவாமி திருக்கோயில்

சிவகங்கை அரண்மனையின் வடக்கே அமைந்துள்ள இந்த ஆலயம் ஆதியில் திருமுருகன் திருக்கோயிலாக இருந்தது. சிவகங்கையைச் சேர்ந்த லெட்சுமி அம்மாள் என்னும் அந்தனமாது காசியாத்திரை சென்று வழிபட்டபோது கிடைத்த லிங்க மூர்த்தியை இத்திருக்கோயிலில் பிரதிட்டை செய்தார்.

மன்னர் மேதகு **போதகுருசாமி தேவர்** அவர்கள் **கி.பி.1848–1863ல்** அம்மையாரின் அருட்பணிக்கு பொருள் உதவி செய்தும் அம்மன் கோயிலையும் எழுப்பி சுவாமிக்கு விஸ்வநாதர் எனவும் அம்பிகைக்கு விசாலாட்சி என்றும் பெயரிட்டு வழிபட்டார் அதன் பிறகு ராணி காத்தம்மைநாச்சியார் அவர்கள் **(1864–1877)** சுவாமி கோயில் மண்டபங்களை எழுப்பினார்கள் சிவப்பிரதிஷ்டை செய்த அந்தணமாதின் ஞாபகமாக இத்திருக்கோயில் பாப்பாத்தி அம்மாள் கோயில் என அழைக்கப்படுகிறது.

இத்திருத்தலத்து செவ்வேள் பரமனுக்கே திருவிழாக்கள்

நடைபெறுகின்றன. நித்திய, விஷேச வழிபாடுகளுடன் கந்த சஷ்டி விழா, பங்குனி உத்திர விழா சிறப்பாக நடைபெற்றும், பங்குனி உத்திரதேர் திருவிழா சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

இத்திருக்கோயிலுக்கு 22.4.1999ம் நாள் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. பொதுமக்கள் விரும்பி பங்கேற்கும் திருக்கோயிலாகவும் வேண்டுவன அருளும் தலமாகவும் விளங்குகிறது.

அய்யப்ப பக்தர்களால் ஸ்ரீ ஐயப்பனுக்கு தனிச்சன்னதியும் துர்க்கை அம்மனுக்கு தனிச்சன்னதியும் உள்ளது.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல் வாரிக்
கொளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

4. வாணியங்குடி: அருள்மிகு மருதப்ப ஐயனார்கோவில் திருக்கோவில்:

சிவகங்கையிலிருந்து மானாமதுரைச்சாலையில் 2கி.மீட்டர் தொலைவில் உள்ள வாணியங்குடியில் அமைந்திருக்கும் சாஸ்தா திருக்கோவில் சிவகங்கை இராஜபிரதிநிதிகளான மாமருதுசகோதரர்களால் சிறப்பாக பூசிக்கப்பட்ட திருக்கோவில் பக்தர்களால் பெரிதும் விரும்பப்படும் திருத்தலம் இங்கு வேண்டிய வரங்கள் வேண்டிய வண்ணம் கிடைக்கப்பெறுகின்றன. என்பது உண்மை. இத்திருக்கோவிலுக்கு பலபகுதிகளிலும் குலதெய்வமாக போற்றும் பக்தர்கள் உள்ளனர். நீண்ட காலங்களுக்குப்பிறகு இதன் குடமுழுக்கு விழா 26–7–2003 சிறப்பாக நடைபெற்றது.

5. கோவானூர்: அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

அமைவிடம்: சிவகங்கை – மதுரைச்சாலையில் சிவகங்கையிலிருந்து 8கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

சிறந்த சுப்பிரமணியஸ்தலமாகவும், குருமுனியால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தலமாகவும், சித்தர் குலாம் சூழ்ந்த திருத்தலமாகவும், நிலவும் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் சுவாமி தன் தாய் தந்தையருடன் காட்சிதரும் திருக்கோயில்.

புராணம்: குருமுனியாய், குறுமுனியாய், அவதரித்த அகத்திய மாமுனி தமிழ்க்கடவுளாம் முருகப் பெருமாளிடம் தமிழ் கற்றவர்.

"வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்திய மாமுனி இடைக்காடர் கீரனும்
வகுத்த பாவினில் பொருட்கோல மாய்வரு முருகோனே"–திருப்புகழ்

அகத்தியர் செய்த அருட்பாக்களில் எல்லாம் முருகப்பெருமான் அதன் பொருட்சுவையாக உள்ளார். – என்பது திருப்புகழ். "என்றும் உள தென்தமிழ் இயம்பி இசை கொண்ட" அகத்தியர் வரலாறு சவிச்சக்கரவர்த்தி கம்பனால் இராம காதையில் அகத்தியப்படலத்தில்

சுவைபடச் சொல்லப்பட்டுள்ளது. உலோபா முத்திரை கணவனான குறுமுனி சிறந்த ஸ்ரீவித்யா உபாசகர். தொல்காப்பியர், அதங்கோட்டாசான், துரோபிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரனார், கழாரம்பன், அபிநயன், காக்கைப்பாடினியார், நற்றந்தன், வாமணன் என்ற பன்னிரு மாணவர்களுடன் இலக்கணம் செய்த பெருந்தகை. இவர் பெயரால் அகஸ்திய சம்ஹிதை ஆயுர்வேத பாஷ்யம் என்ற மருத்துவ, வாகடநூல்களும் தோன்றின.

தமிழ் முனிவர் திருப்பூவண நாதரை தரிசித்து கானப்பேரூர் திருத்தலம் சென்ற போது, இங்கு தன் வழிபடு தமிழ்கடவுளை பூஜைசெய்ய நீர் ஊற்று பெருக்கி, தன் கமண்டலத்தில் வைத்தும் சிவநெறிப்படி குருபரனுக்கு பூஜைசெய்து கமண்டல நீரால் அர்க்கியம், பாத்தியம், ஆசமனியம் – பஞ்ச உபச்சாரங்களுடன் பூஜை செய்தார் பூஜைத்தீர்த்தம் தாவரம் ஒன்றில் தேங்கி பூ நீராகபெருகியது. இந்த புனித மருத்துவ நீரை சேகரிக்க சித்தர்கள் இத்திருத்தலத்திற்கு வருவதாக ஐதீகம்.

இங்கு தவமுனிவரால் ஞானப் பிரதிஷ்டை செய்யப்பட்ட வள்ளிதேவயானை உடனுறை சுப்பிரமணியகடவுள் மூலமூர்த்தியாக பாண்டிய மன்னனால் பிரதிஷ்டை செய்யப்பட்டு திருக்கோயிலாக எழுந்தது.

பழைய திருப்பணிகள் நவாப்ஆட்சியில் மதவெறியர்களால் தகர்க்கப்பட்டது. இதனை நவாப்புக்கு முருகன் உணர்த்தியபின் நவாப் தன் ஆட்களை கண்டித்ததாக செய்தி. ஜீரணமடைந்த இத்திருக்கோயில் புதிய கட்டமைபுடன் கும்பாபிஷேகம் செய்யப்படவுள்ளது.

செந்திலாதிபனாக திருத்தோற்றம் கொண்ட இத்திருத்தலத்து முருகப்பெருமான் கோயிலில், கோயில் முன்பு மயில் மண்டபமும் கோபுரவாசலில் வடபுறம் இடும்பன் சன்னதியும் கோயிலுக்கு இடதுபுறம் காசிவிசுவநாதர் விசாலாட்சியும் உள்ளனர் விநாயகர் திருக்கோயில் உள்ளது.

கோயில் முன்புறம் குண்டுமணி அம்மன் என்ற சக்திவாய்ந்த அம்மன் திருக்கோயில் உள்ளது.

இத்திருத்தலம் ஒவ்வொரு பௌர்ணமியும் விஷேசமானது.

விழிக்குத்துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணைவடிவேலும் செங்கோடன் மயூரமுமே

– கந்தர் அலங்காரம்.

ஆயிர கோடி காமர் அழகெல்லாம் திரண்டொன் றாகி
மேயின வெனினும் செவ்வேள் விமலமாந் சரணந் தன்னில்
தூயனல் லெழிளுக் காற்றாதென்றிடி னினைய தொல்லோன்
மாயிறு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்

– கந்த புராணம்

அருட்த்தாகம் :

சித்தர்கள் சூழும் செழும்பதியாம் கோவானூரில் வீரப்பன் சேர்வைக்காரர் என்பவருக்கு மகனாகபிறந்த சாத்தப்பன், இளவயதிலேயே அருள்தாகம் பிடித்து அலைந்தான். காட்டில் திரிந்த அந்த தவச்செல்வன் அவ்வழிவந்த தாகம் மிகுந்த தபோதனர்களைக்கண்டு தண்ணீர் கொடுத்து உதவினான். தவராஜர் தாயுமானவர் தம் அடியார்கள்–மௌனகுரு வழிவந்த அம்மாதவர்கள் மனமகிழ்வுடன் உபதேசித்தனர் அச்சிறுவனுக்கு. அச்சிறுவன் தான் சாத்தப்ப ஞானியாக, ராஜரிஷியாக, சிவகங்கை அரசு அமைய அருள்செய்த ஞானி. பிறந்த மண் – மாண்புடையது.

6. சோழபுரம் : அருள்மிகு அறம் வளர்த்த நாயகி அம்பாள் சமேத அருள் மொழி நாதர் திருக்கோயில்.

இருப்பிடம் : சிவகங்கை – திருப்பத்தூர் பெருவழித்தடத்தில் சிவகங்கையிலிருந்து 10 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

அமைப்பு : ராஜகோபுரம், குடவறை, திருமதில், பிரகாரம், திண்ணை மண்டபங்களுடன் இருபுறமும் திருமாளிகைப் பத்திகள்–கிழக்குநோக்கி சுவாமி கருவறை, அர்த்தமண்டம், சுவாமிக்கு இடதுபுறம்–கிழக்குநோக்கிய இறைவியின் கருவறை, அர்த்தமண்டபம் இவைகளை உள்ளடக்கிய மகாமண்டபம், கொடிமரம், சுற்று திருமாளிகை பத்திகள், உள்பிரகாரம் கூடியதாக–கற்றளியாக கம்பீரமாக காட்சி தரும் அழகுக்கோயில்.

இறைவனும் இறைவியும் துவாரபாலகர், துவாரசக்திகள் காவலுடன் அருள் செய்யும் காட்சி மனதிற்கு மகிழ்ச்சி தருவன.

புராணம்: மகாபாரத காலத்தில் அர்ச்சுணன் தீர்த்த யாத்திரையின் போது இத்தலத்தில் வழிபாடு செய்ததால் இது விஜயபுரம் எனப்பட்டது.

உறையூர் சோழன் விக்கிரமன் கானப்பேரூர் தரிசனம் செய்தான். வரகுண பாண்டிய மன்னனுக்கு தன் மகளைத் திருமணம் செய்து கொடுத்தான். ஊமைப் பெண்ணாக இருந்த சோழன் திருமகளை பேசவைத்தாள் அறம்வளர்த்த அன்னை. அதன் நினைவாக சோழபுரத்தில் தன் முன்னோர்கள் பெயரால் சிறு கோயில்கட்டி வழிபட்டான்.

கந்தவனப் பொய்கை: கோயில் திருக்குளம் கந்தவனப் பொய்கை என்று அழைக்கப்படுகிறது. பொய்கை என்பது தானாக தோன்றியது என்பதாகும். பிரதானி தாண்டவராயப்பிள்ளையால் “திரியம்பகத் தீர்த்தம்” சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

திருப்பணிகள் : சோழபுரத்து மூதாட்டி ஒருத்தி அறம் வளர்த்த நாயகியின் அருட்திறத்தை வியந்து ஆச்சியிடம் தெரிவிக்கிறான். அதனைக் கேட்ட ஒக்கூர் எ.வெள்ளையன் செட்டியார் துணைவி– கொடுத்து வைத்த அந்த ஆச்சி மகப்பேறு அடைய அன்னையை வேண்டுகிறார். பிரார்த்தனை

நிறைவேறிற்று. இத்திருக்கோயிலை அவர்கள் கற்றளியாக கட்டினார்கள். மேலும் அண்ணாமலைச்செட்டியார், ஆதப்பசெட்டியார் அவர்களால் ராஜகோபுரமும் மதில் சுவரும் கட்டப்பெற்றது.

வீரவரலாறு : சிவகங்கை அரசு நிலைகொண்ட காலம் முதல் இப்பகுதிகள் முக்கியத்தும் அதிகம் பெற்றன. மருதுபாண்டியர்களை தூக்கிலிட்டு ஜெனரல் அக்னியூ, படமாத்தூர் உடையன் கௌரி வல்லபத்தேவரை அறந்தாங்கியிலிருந்து அழைத்து வந்து இங்கு பட்டம் சூட்டினான். இது "அக்னியூவின் பிரகடனம்" என ஆங்கில வரலாற்றில் இடம் பெறுகிறது.

அரச பீடம் : இத்திருக்கோயிலிலேயே சிவகங்கை அரசர்கள் முடிசூட்டிக்கொள்வது மரபு. சுவாமி மகாமண்டபம் இடதுபுரம் கருங்கல் பீடம் அழகுப்பொழிவுடன் உள்ளது. அறம் வளர்க்க உறுதி கொண்ட அரசவர்க்கம் அறம்வளர்த்த நாயகியின் கருணையோடு முடி சூட்டிக்கொள்வது உகந்தது தானே!.

அபிஷேகச்சிறப்பு : அறம்வளர்த்த நாயகிக்கு பால் அபிஷேகம் சிறப்பு உடையது. பால் அபிஷேகம் செய்து தன் மனக்குறைகளை அன்னையிடம் தெரிவித்தால் நம் இதயத்தில் பால்வார்க்கும் இந்த அன்னை என்பது கண்கண்ட உண்மை.

இத்திருக்கோவிலின் உபகோயிலாக பிடாரிகோவில் சிறப்புற்று விளங்குகிறது.

விழாக்கள்: நித்திய பூஜைகள் மற்றும் ஆட்டவிஷேசங்களுடன் ஆனி பிரம்மஉத்ஸவம் 10 நாட்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.குடமுழுக்கு நாள் 10.9.1989

7. பாகனேரி: அருள்மிகு விண்ண வண்ண பெருமாள் திருக்கோவில்

அமைவிடம்: சிவகங்கையிலிருந்து 18 கி.மீட்டர் தொலைவில் பாகனேரி – பாகனேரி – பட்டமங்கலம் – திருபத்தூர் வழித்தடத்தில் அமைந்த பாகனேரியின் ஊரின் மேற்கே அமைந்துள்ள ஆலயம்.

அமைப்பு: பரந்த வெளி – சாளாகாரத்துடன் பெரிய தாரிசுமண்டபம், குடவறை, பிரகாரம், கொடிமரம், பலிபீடம், பெரியதிருவடி, இடதுபுறம் ஆழ்வார்கள், பிரகாரம் கன்னி மூலையில் தாயார் வாயுமூலையில் ஆண்டாள், பரமபத வாயில், சிறியதிருவடி.

தும்பிக்கை ஆழ்வார், துவார பாலகர் – ஜெய, விஜயர் – ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக ஸ்ரீவிண்ணவண்ணப்பெருமாள் சதுர்புஜங்களுடன் நின்றதிருக்கோலத்தில் காட்சிதருகிறார். பாஞ்சராத்திர ஆகமக்கோயில். மண்ணிலும், விண்ணிலும், மாகாபலிசக்கரவத்தியின் சிரசிலும் திருவடிபதித்த பெருமாள்–விண்ணின் வண்ணத்தையுடையவன்.

கார்வண்ணன், காயாம்பூவண்ணன், கடல்வண்ணன், நீலமேகன், சியாமளன், பச்சைமாமலைபோல் மேனியன், வெள்ளியான்,கரியான், மணிநிறவண்ணன்–திருமாலுக்கு அடியார்சூட்டி அர்ச்சித்த திருநாமங்கள்.

"மையோ மரகதமோ மலைமுகிலோ மறிகடலோ
ஐயோ இவன் வடிவென்பது அழியாஅழகுடையான்"–
என்பார் கம்பநாடாள்வார். மேலும்

"ஓம் என்னும் ஓர் எழுத்து அதன் உள்ளிருந்து ஒளிரும்
இராம வன் அறிவினுக்கு அறிவுமாயினான்
தாம மூவுலகும் தழுவி சார்ந்தலான்
தூமமும் கனலும் போற் தொடர்ந்த தோற்றத்தான்"

என ஸ்ரீராமன் வடிவை அறிவுடன் சேர்த்து ஆனந்திப்பார் கவிசக்கரவர்த்தி.

ஓம் என்னும் ஒரு எழுத்து. – அது பிரணவம். அதன் உள்ளிருந்து ஒளிர்வது "ராம" என்னும் தாரகம். அதன் உட்பொருள்– "அறிவினுக்கு அறிவு"– ஆம்! அறிவினைத் தூண்டும் அறிவொளி. அதுவே காயத்ரி. அடுக்கிய மூவுலகு – வியாக்கிருதிகள் – தழுவிச் சார்தல் உலக வாழ்வு – பூரண சரணாகதி.

எங்கும் பரந்த வெளி, நிறமற்ற நீள்வானம், தனக்கென நிறமில்லா தண்ணீர், தான் சார்ந்த நிறம் பெறுகிறது. கடந்தும் உள்ளும் நிறைந்த கடவுள், எல்லாம் இயக்கும் இயவுள். அன்பர் வேண்டும் அருள் உருவில் வரவல்லவன்.– உருவாகவும், அருவுருவாகவும், உருவமற்றனாகவும் உள்ளான் என்பது போலவே அவன் நிறத்தையும் உவமை யாக்கினர் சான்றோர். தூமமும் கனலும் போற் தொடர்ந்த தோற்றத்தான் என்று விளங்குகிறார். செந்தீ–தொடர்ந்து அதன் கரிய புகை இடையில் செம்மை நிறமாக, பொன் நிறமாக, பச்சைநிறமாக, நீலநிறமாக, காரிருள் நிறமாக திகழும் தன்மை– இத்தகையன் இவ்வண்ணத்தன் என்று எழுதிக்காட்ட ஒன்னா இயற்கை. விண்ணவண்ணப்பெருமாள்– வியன் வடிவு கொண்டு நம்மை காத்தருள்கிறது.

ஆடிவேள்: இத்திருக்கோயில் நித்யபூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆடி முதல் வெள்ளியில் இங்கே கோலாகலம். ஆமாம்! ஆடிக்கு மாப்பிள்ளை வருகிறார். இத்திருத்தலத்தின் அருள்மிகு கருணா கடாட்சி சமேத நீலகண்டீஸ்வரர் திருக்கோயில் திருநிறைச் செல்வன் திருமுருகன் மாமியார் மகாலெட்சுமி வீட்டுக்கு வருகிறார். ஏகப்பட்ட ராஜஉபச்சாரம் வள்ளிதேவயானை சமேத முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் அருள்மிகு பெருமாள் திருமுன்பு நடைபெறுகின்றன. மயில் மீதிருந்து தேவியர்களுடன் மாமனார் வீட்டிலிருந்து அருள்காட்சி தருவது கண்கொள்ளாக்காட்சி. அன்பர்கள் அனைவருக்கும் நகரத்தார்களால் அன்னதானம் விமரிசையாக நடைபெறுகிறது. அன்று இருந்து மறு நாள் சனிக்கிழமை தான் மருமகன் தன் வீட்டுக்கு வருகிறார். அம்மையார்களுடன் தான்!!. கும்பாபிஷேக நாள் 3–11–2006.

8. நாட்டரசன்கோட்டை :அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோவில்

பாட்டரசன் கம்பன் புகழ் மணக்கும் நாட்டரசன்கோட்டை சித்து விளங்கும் தெய்வத்திருத்தலம் – சக்தி தலம். வாட்டமெல்லாம் போக்கி வாழ்வளிக்கும் மாதரசி கண்ணுடையாள் அருளாட்சி செய்யும் மாண்புடைய தலம்.

வரலாறு: நாட்டரசன்கோட்டையை அடுத்த பிரண்டைக்குளம் என்னும் சிறுகிராமத்திலிருந்து நாட்டரசன்கோட்டைக்கு பால் கொண்டு வரும் யாதவ குலத்தவர் காலை தட்டிவிடுவது ஒரு கல்லின் வழக்கம். ஒரு நாள் ஆத்திரத்துடன் மண்வெட்டியால் அக்கல்லை தோண்டும் போது பீரிட்ட குருதிவெள்ளம் ஞானக்கண்ணுடையோருக்கு கண்ணுடையாளாக காட்சி அளித்தது. அக்கண்ணுடையாளை மலையரசன் தன் மகளாக பாவித்து காவல்காத்தும், அக்கண்ணுடையாளுக்கு மகிபாலன் மூலஸ்தானம் ஏற்படுத்தி அருட்கோவிலாக காட்சியளித்ததாக மரபு. கண்ணுடையாள் பிரண்டகுளத்தை நோக்கிதிரும்பிபார்த்த இடம் ஞாயமாகுளமாக களியாட்டத்தின் போது பலிபீடமாக தற்போதும் காட்சியளிக்கிறது.

ஊரின் நடுநாயகமாக அன்னை எழில் கண்ணுடையாளின் வானுயர்ந்த கோபுரம் வனப்புடன் காட்சிதருகிறது. வடக்கு நோக்கிய சன்னிதி – வேதாளக் கொடிப்புடைய விமலை. அய்யையாக அருள்கோலத்தில் எண்கரத்துடன் சண்டனை அடக்கிய திருவுருவம்.

"பைம்பொற் சிலம்பணிந்து பாடகக் கால் மேல்தூக்கிச்
செம்பொற் கலையுடுத்தி சேல்விழிக்கு மையெழுதி
அம்பொற் பணிபூண்டு அறுகோண வீதியிலே
கம்பத்தின் மேலிருந்து என் கண்ணம்மா கண்குளிற பாரேனோ"

என்று உள்ளம் உருகி இறைஞ்சுவது அழுகுணிச்சித்தர். இத்தலத்தில் தீர்த்ததொட்டிக்கு கீழே அடங்கியுள்ளதாக ஐதீகம். அன்னை கண்ணுடையாள் பெருமை அளப்பெரியது. சிற்றிலக்கியங்களில் சிறந்த "கண்ணுடையம்பள்ளு" என்ற செந்தமிழ் காவியம் வரகவி முத்துவிநாயகம் என்ற முத்துக்குட்டி புலவரால் பாடப்பெற்றது–ஆயிரம் கண்ணுடைய அழகி–போற்றுதற்கரிய இந்திர சக்தி;

"திருமாது இசை நாமகள் புவிமகள் செயமாது இவளாமென
வரிசை செய் சிவகாரணி நாரணி திரிபுரை ஜெகன்மாதா –"

"நாலாகிய சுருதிக் கண்ணுடையவள் ஞானோதைய பரிதிக்கண்ணுடையவள்
நாவானர் சொல் நளினக்கண்ணுடையவள் நலநீர்வாழ்
சேலால் உயர், கருணைக்கண்ணுடையவள் சீதேவி என் அருமை
கண்ணுடையவள்"

"வியன் அன்புடையோருக்கும் மனதினில் மிக நம்பின பேருக்கும்
இனிய சொல்
விளையுந் தமிழ் வாணர்க்கும் அனுதினம் அருள்கூர்ந்து
பயனும்தரு தானக் கண்ணுடையவள் பணிகின்ற மெய்ஞ்ஞானக்
கண்ணுடையவள்"

என வேண்டுநர்க்கு வேண்டுவன நல்கும் அருள் தாயாக, குலதெய்வமாக கொழுவீற்றிப்பாள்.

கற்றளியாக, கவின் பெரு வனப்புடன் கருவறை அர்த்தமண்டபம்,

மகாமண்டபம், உள்பிரகாரம் அரசகோபுரம், சொக்கட்டான் மண்டபம் தெப்பக்குளத்துடன் காட்சிதரும் இந்த ஆலயம் கரிகால் சோழனின் மதிமந்திரியின் வம்சாவழியும் ஆலய மிராசு ஊர்கணக்குமான மகிபாலன் வம்சத்தாலும், கனகவிசய ரெகுநாத சேதுபதியாலும், சிவகங்கை அரசாலும், நகரத்தார்களாலும் காலஇடைவெளிகளில் விரிவுபடுத்தி திருப்பணி செய்யப் பெற்றது.

இத்திருக்கோவில் சிறந்த பிரார்த்தனை திருத்தலம் – வேண்டுதல் வேண்டியவாறு அன்னையை ஆராதித்து பேறுபெறும் சிறந்த தலம்

நித்திய பூஜைகள் :

பாரசைவர்களாகிய உவச்சர் குலத்தினரால் பூஜை செய்யப்படுகிறது. பிரம்மோற்ஸவம், சிவாச்சாரியார்கள், ஸ்ரீவைணவபட்டாச்சாரியார்கள் முன்னிலையில் அகமப்படி கொடியேற்றம் செய்து காப்புக்கட்டப்படுகிறது. வைகாசி பிரமோற்ஸவம், ஆடி முளைப்பாரிதிருவிழா 10 நாட்கள், ஐப்பசி கோலாட்ட திருவிழா 10 நாட்கள், தை மாத தைலக்காப்பு உற்சவம் 10 நாட்கள், மற்றும் ஆட்டவிசேஷங்கள் நடைபெறுகின்றன. மஹாகும்பாபிஷேக நாள் 1.5.1989, 22–4–2005.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை விசேஷமான முழு களியாட்ட திருவிழா 48 நாட்களுக்கு கோலாகலமாக காண்போர் வியக்கும் வகையில் பாரம்பரிய முறைப்படி நடைபெறும். களியாட்ட வீடுகள் இரண்டிலும் அன்னை ஓவியவடிவில் காட்சிதருகிறாள். களியாட்ட கண்ணுடைய நாயகி 8 கரத்துடன் அமர்ந்த கோலத்தில் வெள்ளிரதத்தில் வைகாசி சுவாதியில் வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். இத்திருவிழாவில் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வழிபட்டு செல்கிறார்கள்.

கோயில் உடையாள் குலம் உடையாள் பொன்னின்
கோபுர வாசல் வளமுடையாள்
தாயினும் நல்லவள் கண்ணுடையாள் ஏழு
தாரணி காணி உடையாளடி–
கோதண்ட மாமலர் வாளியடி அண்ட
கூடம் இவள் பாத தூளியடி
மூதண்ட பத்திர காளியடி அம்மன்
மூவர்க்கும் தான் முதலாளியடி
கண்டு கண்டுள்ளம் களிகூர்ந்து தேவி
கண்ணுள்ள நாச்சியார் காரணத்தை
அண்ட முனிவர் நவநாத சித்தர்கள்
ஆரறிவாரடி தோழிப்பெண்கள்

கண்நோய் தீர்த்தல், நெஞ்சு வலி, வயிற்றில் கட்டிகள், வயிற்றுவலி போன்ற தீராத வியாதிகள் தீர பக்தர்கள் கண்மலர், உருண்டைகள், உருவாரங்களை–காணிக்கை ஆக்குகிறார்கள் சிறந்த பிரார்த்தனை திருத்தலம். கண்ணொளி வழங்கும் கண்ணாத்தாள் ஊனக்கண்ணுக்கும், ஞானக்கண்ணுக்கும் ஒளி கொடுப்பவள்.

9. அருள்மிகு கரிகால சோழீஸ்வரர் திருக்கோவில் :

அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோவிலுக்கு தென்புறம் உள்ள சிவாலயம் மூலவர் கரிகால சோழீஸ்வரர், இறைவி சிவகாமி அம்பாள் – கிழக்கு நோக்கிய திருக்கோவில்.

"வெய்ய சாபம் கடம்ப வனத்தில்
விடும்படிக் கொரு வெள்ளானை பூஜை
செய்ய வேதிருக் கானைவனந் தேடிச்
செல்லும் மார்க்கத்தில் தீர்த்தமும் உண்டாய்த்
துய்ய தோர் சிவ லிங்கம் கரிகால
சோழன் கண்டு இவர் சோழீச் தென்று
வையை நாட்டில் பிரதிஷ்டை செய்த
வடகலை வேள்வி நாடெங்கள் நாடே" (கண்ணுடையம்மன்பள்ளு)

கரிகால சோழனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தி பிற்காலத்தில் நகரத்தார் திருப்பணி சிறந்த முறையில் செய்து விழாக்கள் நடைபெற்று வருகின்றன. அன்மையில் கிழக்கு ராஜகோபுரம் புதிதாக நிர்மானித்து குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளன.

கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், உள்பிரகாரம் திருமதில் தெற்கு கோபுரம் திருமாளிகை பத்தி, கிழக்கு ராஜகோபுரம், உள்ளிட்ட கற்றளி. திருக்குளம் வீரகண்டான் ஊரணி கோவில் வடக்கே உள்ளது. அருமைமிக்க வேலைப்பாடமைந்த வெள்ளிவாகனங்களின் தோற்றம் கண்கொள்ளா காட்சிதரும். இத்திருக்கோவிலுடன் சேர்ந்த "மஞ்சனத்தி விநாயகர்" மிக்க பிரசித்தி பெற்றவர். இவரிடம் வேண்டுவது வீண்ஆகாது. இத்திருதலத்திற்கு கிழக்கே ஊர்காவலர் கோவில், அருள்மிகு கருப்பர் கோயில்கள் காவல் தெய்வங்களாக எழுந்தருளியுள்ளன. நித்திய வழிபாடுகள், ஆட்ட விசேஷங்கள், ஆருத்ரா தெரிசன விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. மஹாகும்பாபிஷேக நாள் 26.8.2002.

10. அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோவில்:

அருள்மிகுகண்ணுடையம்மன் திருநந்தவனத்திற்கு கிழக்கே அமைந்துள்ளது. நடுவில் வீரகண்டான் ஊரணி தெற்கே அருள்மிகு சோழீஸ்வரர் திருக்கோவில்.

கருங்கல் கற்றளியால் அமைந்த திருக்கோவில் இவ்வூர் நகரத்தார்களின் திருப்பணி – கண்டோர் வியக்க தங்க கருட வாகனத்தில் அருள்மிகு வெங்கடாசலபதி பெருமாள் காட்சி தருவது கண்கொள்ளாகாட்சி. வைகுண்ட ஏகாதசி விழா சிறப்பாக நடைபெறும் நவராத்திரி மற்றும் ஆட்டவிஷேசங்கள் சிறப்புடையவை. பெருந்திருவிழா சிறப்பாக நடைபெற உள்ளது. கும்பாபிஷேக நாள்: 3.7.1996

பெரிய பிரகாரம் : அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோவில், அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோவில், அருள்மிகு கரிகால சோழீஸ்வரர் திருக்கோவில், அருள்மிகு மஞ்சனத்தி விநாயகர் திருக்கோவில், அருள்மிகு கருப்பர் திருக்கோவில், அருள்மிகு ஸ்ரீராமர் திருக்கோவில்,

அருள்மிகு ஊர் காவலன் திருக்கோவில் – இவை அனைத்தும் ஊரின் நடுவே அமைந்து, ஒரே பிரகாரமாக இருப்பதால் இது பெரிய பிரகாரம் என்று அழைக்கப்படுகிறது. திருவண்ணாமலை கிரிவலம் வருவது போல் வைகாசி திருவிழாவில் காலையும், மாலையும் பலமுறை பெரிய பிரகாரம் வந்து "ஒரு சந்தி" விரதம் இருப்பது கோயில் மரபு, பெரிய பிரகாரம் வந்து பிறகு கண்ணுடையம்மன் கோயில் வெளிமதில் ஸ்தல மரமான மாமரப்பிரகாரம் 2வது முறையாக வந்து பிறகு உள்பிரகாரத்துடன் முடிவடையும். ஆடவர், மகளிர் அணி அணியாக பிரகாரம் வருவது பக்தியும் கலை நயமிக்கதாக உள்ளது.

கவியரசு கம்பன் : கம்பன் மரபினரே கண்ணுடையாளுக்கு பூஜை செய்யும் உவச்சர் மரபினர் – நாட்டரசன்கோட்டையிலிருந்து கிழக்கே 2 கி.மீட்டர் தொலைவில் கம்பன் சமாதியுள்ளது. இந்த ஊரில் பிறந்த குழந்தைகளுக்கு கம்பன் மண் கரைத்து கொடுப்பது பண்டைய வழக்கம் இன்று கம்பர் விழா நாட்டரசன்கோட்டையிலும் காரைக்குடியிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

11. பனங்குடி : அருள்மிகு பெரிய நாயகி அம்மன் திருக்கோவில்

சிவகங்கை – நாட்டரசன்கோட்டை – பாகனேரி வழித்தடத்தில் சிவகங்கையிலிருந்து 16கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

அருள்மிகு பெரிய நாயகி அம்மன் திருக்கோவில் கற்றளியாக வடக்கு நோக்கிய சன்னதி, சண்டனை அடக்கி காட்சி தரும் திருக்கோலம்.

பொதுவாக சாக்த தந்திரங்களிலும், தேவி மகாத்மியம் ஆகியவற்றிலும் குறிப்பிடப்படும் தேவியின் திருவுருவங்கள் பிரதானமானவை.

மகாதுர்க்கை : மதுகைடப வதம் செய்வதற்காக மகாவிஷ்ணுவின் யோகமாயையாக இருந்து மகா விஷ்ணு மூலமாக அசுர வதம் செய்வது அரூபமானநிலை – விஷ்ணு மாயை.

மகா லெட்சுமி : மகிஷாசூரனை வதம் செய்வதன் பொருட்டு அனைத்துத் தேவர்களின் சக்திகள்–ஆயுதங்கள் ஆகியவற்றின் அம்சங்கள் ஒன்று திரண்டு ஒரு பேருருவுடன் பெண்மையுருக்கொண்டு மகிஷாசூரனை வரம் செய்தது 18 கரங்களுடன் கூடிய பெருவடிவம்.

மகா சரஸ்வதி : சண்டன், முண்டன், சும்பன், நிசும்பன், ரக்த பீஜன் ஆகிய அசுர கணங்களை அழிக்க கங்கைக் கரையில் அன்னத்தில் ஆரோகனித்து பெண்மை உருவுடன் அவ்வப்போது அனேக சக்திகளை உருவாக்கி அச்சக்திகள் மூலமாக அசுரர்களை நிர்மூலமாக்கிய திருவுருவம்.

பொதுவாக எண் கரங்களுடன் வலது காலை பீடத்தில் ஊன்றியும் இடது காலை அசுரனை மிதித்து அடக்கிய திருவுருவம் – இத்திருவுருவமே தென்னகத் திருக்கோயில்களில் "காளியின்" திருவுருவமாக காட்சிதருகிறது.

அமர்ந்த திருக்கோலத்தில் கதிர்மகுடமும் நாற்கரங்களில் உடுக்கை, சூலம், பாசம், பாணபாத்திரம் கொண்டு வலது திருவடி சம்மன ஆசனத்திலும் இடது திருவடி முயலகனை அடக்கியும், அருட்செய்யும் மகேஸ்வரி வடிவம் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன.

அமர்ந்த கோலத்தில் சுவாலாகேசம் தாங்கிய கிரீடமும் நான்கு

திருக்கரங்களில் கத்தி, அங்குசம், பாசம், வரதம் அல்லது பாணபாத்திரம் தாங்கி வலது திருவடி சம்மனஆசனத்திலும், இடது திருவடி பத்திரஆசணமாகவும் அசுரனை அடக்கி அருள்செய்யும் மகாமாரியான சீதளாதேவி திருவடிவங்களும் தென்னக கோயில்களில் மூலத்திருமேனியாக பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. இத்தோற்றங்கள் பல்வேறு யுகங்களில் பல்வேறு மன்வந்திர காலங்களில் அவ்வப்போது தோன்றிய திருவுருவங்கள். மேற்கண்ட தேவியின் திருவுருவங்கள் காலகிரமங்களில் வரிசையாக தோன்றியவை. சிவாலயங்களில் அம்பிகை திருவுருவங்கள் பிற்காலங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக தெரிகிறது. பொதுவாக நின்ற திருக்கோலத்தில் கிரீடம், உபயதிருக்கரங்களில் வலது திருக்கரம் தாமரை அல்லது நீலோத்பவம் அல்லது கடகமுத்திரைக்கொண்டும் இடது கரம், இடது தொடையில் பொருந்த தொங்க விட்டும் இடது திருவடி ஊருபங்க நிலையில் சாய்ந்தும் உள்ளதாகவும் சில சிவாலயங்களில் கிரீடம், நான்கு திருக்கரங்களில் அங்குசம் அல்லது ஜபமாலை, பாசம் அபய வரத முத்திரைகொண்டு நின்ற திருக்கோலத்தில் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. கோஷ்டங்களில் விஷ்னுதுர்க்கையாக நின்ற திருக்கோலத்தில் சங்கம், சக்கரம் அபய வரத முத்திரை கொண்டு எருமை தலையில் நின்ற திருக்கோலத்தில் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன.

வீணாகானம் செய்யும் வாணியாகிய பிரம்ம பத்தினி, மகாவிஷ்னுவின் பத்தினியாகிய செந்தாமரைச்செல்வி, லெட்சுமி, ருத்திரனின் நாயகியான கலையூர்த்தி ஏறிய ருத்ராணி – வடிவங்கள் வேறுபாடுடையவை.

இவ்வன்னமே பனங்குடி பெரிய நாயகி அம்பாள் போற்றுதற்குரிய சப்த மாதர்களின் வடிவமான பிரம்மி (பிரம்ம சக்தி) மகேஸ்வரி (மகேஸ்வர சக்தி) கௌமாரி (குமார சக்தி) வைஷ்ணவி (மகாவிஷ்னுவின் சக்தி) வராகி (வராக மூர்த்தியின் சக்தி) மாகேந்திரி (இந்திர சக்தி) சாமுண்டி (சிவ சக்தி) என்ற எழுவர் வடிவங்களில் சிவசக்தி வடிவம்.

பனங்குடி நாட்டார், நகரத்தார் பெருமக்களால் போற்றி சிறப்பிக்கப்படும் அன்னை பெரிய நாயகியின் வரலாற்றில் செவிவழி செய்தி.

கன்னார் ஆசாரி ஒருவருக்கு வானிலிருந்து வானொலி எழுந்தது ஒரு கல்லின் மூலம் அடையாளம் காட்டுவேன்–அந்த இடத்தில் என்னை பிரதிஷ்டை செய்! என ஒலித்தப்படி ஒரு கல் உருவாட்டி என்ற கிராமத்திலிருந்து வழிகாட்டி பனங்குடியில் வந்து விழுந்தது. கல் விழுந்த இடத்தில் ஒரு ஆலயம் எழுப்பப்பட்டது. உருவாட்டி பெரிய நாயகியின் பெயரே பனங்குடி அன்னைக்கும் சூட்டப்பட்டது.

இத்தலத்தில் கன்னார் ஆசாரி இனத்தவரே பரம்பரை பூஜகர்களாக இருந்து வருகின்றனர். நித்திய பூஜைகளுடன் ஆனி பெருவிழா தேரோட்டத்துடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மன்னர் மானியங்களுடனும் பூஜை திட்டங்களுடன் சிறப்பாக வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இவ்வூரில் வாழும் கிறிஸ்த்தவ சமூகத்தினரும் அன்னையின் விழாக்களில் ஈடுபாடுடன் பங்கேற்பது பெருமைக்குரியது. சமய வேறுபாடற்ற நிலையில் இவ்விரு சமய விழாக்களும் நடைபெறுகின்றன. நித்திய விழாக்களுடன் ஆனி பிரம்மோற்ஸவம் சிறப்பாக நடைபெறுகிறது. மகாகும்பாபிஷேக நாள் 10.4.1998.

12. பாகனேரி : அருள்மிகு புல்வநாயகி அம்மன் திருக்கோவில்:

சிவகங்கையிலிருந்து சுமார் 18 கி.மீட்டர் தொலைவில் சிவகங்கை பாகனேரி – பட்டமங்கலம் திருப்பத்தூர் வழித்தடத்தில் உள்ளது. தேசிகமும், தெய்வீகமும் ஒரு சேர விளங்கும் பாகனேரி, நாட்டார் நகரத்தார் குடிகளால் ஏற்றம் பெற்றது. ஊரின் கிழக்கு திசையில் கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் அருள் செய்யும் வடிவம் புல் வயல் வெளியில் இருப்பவளோ அல்லது புல்லர்களை சாடும் நாயகியோ. அல்லது மகாலெட்சுமியின் நாத்தினாராக – பில்வ நிலையமாக உள்ளவளோ இல்லை அனைத்துமோ என்று வியக்கும் வண்ணம், வீரத்தின் விளை நிலமாக, பயிர் விளை நிலமாக, லெட்சுமி கொழுவீற்றிருக்கும் அறநிலையமாக, கல்வி நிலையமாக அனைத்து சமூகத்தினரும் வாழ்வதற்கு, குலதெய்வமாக, இஷ்டதெய்வமாக காட்சி தருகிறாள். வேதாளம் முன்நிற்க கிழக்கு நோக்கி அருள்செய்யும் அன்னை அற்புதமானவள்.

மன்னர் மானியம் பெற்றும், காளிதேவிக்கு பூஜை செய்யும் பார சைவர்களாகிய உவச்சர் குலத்தவரால் பூஜை செய்யப்பட்டு வரும் திருக்கோயில்.

இத்தலத்து விநாயகர் “காய்ச்சின கால கணபதி” மதுரை கோட்டையிலிருந்து பட்டமங்கலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயகர் பிறகு பாகனேரியில் பிரதிஷ்டை செய்யப்பட்டது வீர வரலாற்று செய்தியாகும்.

தீராத வல்வழக்குத் தேறக் களவுக் கன்னம்
பேரான எல்லைப் பிசகு முதல் – ஆராய்ந்து
சுத்தன் அசுத்தன் என்று சோதனையாய் நமக்கு மழு
வைத்தோதக் கற்பித்த வல்லமைகள் – அத்தனையும்
தென்பாகை நாட்டில் சிறந்த புல்வாய் மாதென்றே
அன்பாகச் சொல்ல அவதரித்தாள்

– மிதிலைப்பட்டி குழந்தைக் கவிராயர்
சிவகங்கை அவைக்களப்புலவர்

அறம்பாடும் முத்தப்ப அய்யாவாள் பாடல் பெற்றவூர்
தீராதவழக்கெல்லாம் தீரும்ஊர் தென்பாகை – பாகனேரி.

அன்னை புல்வ நாயகியின் திருக்கோயிலுக்கு அருகருகே அரசமரத்தடியில் நடுகற்கள் உள்ளன.

நித்திய பூஜைகளுடன் ஆட்டவிஷேசங்கள் ஆனிப் பிரம்மோற்ஸவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மஹாகும்பாபிஷேக நாள் 15.7.1994.

13. பாகனேரி : அருள்மிகு நீலகண்டீஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் : பாகனேரி அருள்மிகு புல்வநாயகி அம்மன் திருக்கோயிலுக்கு தென்புறம் அமைந்துள்ளது.

அமைப்பு : கோவில் ஊரணி எதிரே ஐந்து நிலை அரசகோபுரம், அலங்கார மண்டபம், உள்பிரகாரம், கொடிமரம், பலிபீடம், நந்தி உள்ளடக்கிய கல்கார மண்டபம். நந்திக்கு வலது புறம் நவக்கிரகங்கள், பைரவர், பள்ளியறை, தெற்குநோக்கிய அம்பிகை கற்றளி. மகாமண்டபம், அர்த்தமண்டம், கருவறை பிரகாரசுற்றில் கன்னிமூலையில் விநாயகர், மகாலெட்சுமி, வாயுமூலையில் வள்ளி தேவானையுடன் சுப்பிரமணியர் சண்டேசர்– தேவகோட்டங்களில் தெற்கே ஆலமர்செல்வன், லிங்கோத்பவர், பிரம்மா, அருள்செய்கிறார்கள்.

மூலவர்: ஸ்ரீ நீலகண்டீஸ்வரர். – லிங்க திருமேனி சதுரஆவுடையார்

இறைவி: அருள்மிகு கருணாகடாக்ஷி – நின்ற திருக்கோலம் இருகரங்களுடன் தெற்கு நோக்கி அருள்செய்பவள்.

சிறப்புச் சிற்பம் :

இத்திருக்கோயிலின் சண்டேஸ்வரர் விசேஷமானவர். நான்கு திருக்கரங்களுடன் திருவாரூர் அருள்மிகு தியாகராசர் திருக்கோயிலில் உள்ள சண்டேஸ்வரராக காட்சி அளிப்பவர். இவரின் எதிர்புறம் கற்பகிரக வெளிச்சுற்றில் வியாளவரிக்கு கீழாக பசுவதீஸ்வரர் படிமம் சிறப்புடையது. பசு தன் மடியின் அமிர்தத்தால் லிங்க திருமேனிக்கு அபிஷேகம் செய்யும் நிலை. அதன் கீழே பசுவும் ரிஷபமும் “இளமன நாகு தழுவிய ஏராக – அருகே விநாயகருடன் காட்சி தரும்படி அமைத்த சிற்பியின் செய்திறன் வியக்கதக்கது.

கல்லெழுத்து:

இத்திருத்தலம் கருவறை தெற்கு மற்றும் மேற்கு வெளிச்சுவற்றில் அதிஷ்ட்டானம், வேதியல், கம்பு, குமுதம் வரிமானத்தில் 11ம் நூற்றாண்டு நெட்டுஎழுத்துக்கள், வட்டெழுத்துக்கள் உள்ளன. இத்திருத்தலத்தின் இறைவன் “தேவதேவ கரம்முடைய நாயனார் எனக்குறிப்பிடப்படும் வில்வன காங்கேயன் எனவும் நிவர்த்தங்களில் எல்லை குறிப்பிட்ட கல்வெட்டுக்களும், ஸ்ரீ மாறதேவன் சுந்தரபாண்டியன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. அர்த்தமண்டபம் கோஷ்டபஞ்சரத்தில் மகாநாசிமுழுதும் பெண் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையையும் அர்த்தமண்டவத்தையும் பிரிக்கும் அந்தராலயம் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது.

கற்பகிரகம், அர்த்தமண்டபம் தவிர மகாமண்டபம் முதலியன பிற்காலத்தில் நகரத்தார்கள் உபயதிருப்பணி செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் நித்திய பூஜைகளுடன் பிரதோஷம், கார்த்திகை முதலான ஆட்டவிஷேசங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. குடமுழுக்கு நாள் 2.6.1991, 3–11–2006.

14. திருக்கோட்டியூர் சரக திருக்கோவில்கள்

திருக்கோட்டியூர்:அருள்மிகு சௌமியநாராயண பெருமாள் திருக்கோவில்

இருப்பிடம் : திருப்பத்தூர் வட்டம் சிவகங்கை – திருப்பத்தூர் பெருவழிச்சாலையில் திருப்பத்தூரிலிருந்து 10கி.மீ தென்மேற்கே உள்ளது.

அமைப்பு: திருப்பாற்கடல், திருவீதி, ராஜகோபுரம் கூடிய கிழக்கு குடவறை வாயில் திருமதில் சூழ்ந்த பிரகாரம், வலது புரம் தேவஸ்தான சரக அலுவலகம் உள்ளே ஏகாதசி மண்டபம். வடக்கு நோக்கி எம்பெருமானார். திருக்கோட்டியூர் நம்பிகள் கருவறை, அர்த்தமண்டபம் கூடிய சன்னதிகள். திருமதில் பிரகாரம் தெற்கு குடவறைவாயில், சற்றுமேலாக எம்பெருமானாரும் மகாமந்திரமும் அஷ்டாங்க விமான காட்சியும் பெற்றும் வடக்கில் பரமபத வாயில் இருபுறம் காட்சி தரும் நரசிம்ம அவதாரம் தரிசித்து திரும்ப உள் வருகிறோம். கம்பத்தடி மண்டபத்தில் பூரண சரணாகதியுடன் உட்புகுகிறோம். எதிரே நந்தி, வடக்கு வாசல் செல்வி, சனத்குமாரர்கள் கந்த கணேசர்களுடன் சுயம்பு சதாசிவமும் விமான தரிசனமும் பிரகாரத்தின் கல்யாணவிநாயகரும் அசுரனை அடக்கி ஆளும் ஆஞ்சனேயர் காட்சிதர கைக்கில வாயில் வழியாக பிரவேசிக்கிறோம். ஆழ்வார்கள் தரிசனத்துடன், நர்த்தன கிருஷ்ணர் அருள்செய்ய இரண்டாம் பிரகாரத்தில் மனவாள மாமுனிகள், பிள்ளை லோகாச்சாரியார் சுவாமிகள் ஆசியுடன் தாயார் சன்னதி, லெட்சுமி நரசிம்மர் சன்னதி, வணங்கி உட்பிரகாரம் ஆண்டாள், இராமர்சன்னதி, விச்வக்சேனர், வேள்விச்சாலை கடந்து திரும்ப கீழ்தளத்தில் நர்த்தன கண்ணன், அதன்மேலாக அருள்மிகு ஊரக மெல்லனையான் சயனதோற்றம் ஸ்ரீ பூமிநீளா சமேத ஸ்ரீ சௌமியநாராயணன் சன்னதி அதன் பிரகாரம். அதன் மேலாக அருள்மிகு உபய நாச்சியார்களுடன் உபேந்திர நாராயணர் நின்ற திருக்கோலத்திலும் அதன் மேலாக அமர்ந்த கோலத்தில் உபய நாச்சியார்களுடன் பரமபத நாதர் அருள்செய்ய ஆச்சார்ய தரிசனத்துடன் திரும்ப தாயாரின் சன்னிதானத்து வருகிறோம்.

சிறப்பு : இத்திருத்தலம் ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தின் புருஷசூக்தத்தில் விளங்கியபடி பரமபதம், அந்தர் யாமித்துவம், வியூக அவதாரம், விபவ அவதாரம், ஆகிய திருமேனிகளை அர்ச்சைதிருமேனிகளாகக்கொண்டு கூத்தாடியும், கிடந்தும் நின்றும், இருந்தும் ஆச்சார்ய வைபவத்துடன் அஷ்டாங்கதிவ்யவிமானத்தில் சிறந்து விளங்குகிறது. கருவறையில் கதம்பமுனி, காசிராஜன், மதுகைடபர், இந்திரன் ஆகியோர்களுடன் பெருமாள் காட்சி தருகிறார்.

வரலாறு : ஹிரண்ய வதம் நிகழும் பொருட்டு அசுரன் உட்புகாத கதம்ப மகரிஷியின் ஆச்சிரம பகுதியில் தேவரும் மூவரும் கோஷ்டியாக அசுரவதத்திற்கு இயைந்த அவதாரம் இறைவன் மேற்கொள்ள ஆலோசித்த திவ்யதேசம்.

அருளிச்செயல் : இத்திவ்ய தேசம் திருப்பல்லாண்டில் பெரியாழ்வார், பெரிய திருமொழியில் திருமங்கை ஆழ்வார், இரண்டாம் திருவந்தாதியில் பூதத்தாழ்வார், நன்முகன் திருவந்தாதியில் திருமழிசை பிரான் ஆழ்வார், மூன்றாம் திருவந்தாதியில் பேயாழ்வார் ஆகிய பெருந்தகைகளால் திவ்ய பிரபந்த பாடல் பெறுகிறது. பராசர பட்டரால் "கோஷ்டிதவம்" செய்யப்படுகிறது.

108 திவ்யதேசங்களில் முதன்மையானது. நரசிம்ம அவதாரம் தோன்ற காரணமாயின் 3ம்–4ம் அவதாரத்திற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது. காசி அரசன்–புதன்மகன் புரூரவஷ் சக்கரவர்த்தியால் அஷ்டாங்க திவ்ய விமானம் கட்டப்பட்டது. இதன் மண்டபங்கள் பிற்கால பாண்டியர்கள், வானதிராயர்கள், தஞ்சை நாயக்கர்களால் கட்டப்பட்டவை. ஏகாதசி மண்டபம் நகரத்தார்களால் கட்டப்பட்டது.

ஆச்சார்ய பிரவாபம் : ஸ்ரீ ராமானுசப் பெருந்தகை திருக்கோட்டியூர் நம்பிகளிடத்தில் 18 முறை வருகை தந்து, திருமந்திர உபதேசம் பெற்று மனித இனம் உய்யும் பொருட்டு உயர்ந்த கோபுரத்தின் நின்று மக்கள் அனைவருக்கும் உபதேசம் செய்த திவ்யதேசம். செல்வநம்பிகள் வாழந்த திருத்தலம், பாண்டியன் அவையில் பரத்துவ நிர்ணயம் செய்யப்பெற்ற திருத்தலம்.

ஆண்டாள் இத்திருத்தல கண்ணனையே ஆய்ப்பாடிக் கண்ணனாக, தான் கோபியராக, இந்த ஊரே ஆய்ப்பாடியாக பாடி பரவிய தலம். கூரேசர், முதலியாண்டான் திருமலை ஆழ்வார் முதலான ஆச்சார்ய அருளாளர்கள் திருவருளை அனுபவித்த திவ்ய தேசம்.

அக்ரத; ப்ரயயௌ ராம: ஸீதா மத்யே ஸுமத்யமா
ப்ருஷ்ட தஸ்த்து தனுஷ் பாணி லக்ஷ்மணோனுஜகாமஹ:
ஆரண்யம் சர்க்கம்–11

ஸ்ரீமத் ராமாயணத்தின் மகாவாக்கியமான இம்மந்திரம் பிரணவத்தின் கூறான அ.உ.ம.என்பதைப்பெற்றும், வனத்திற்கு போகும் போது லெட்சுமணர் முன்னும், சீதாதேவி நடுவிலும், ஸ்ரீராமர் பின்னும், சென்றார்கள் எனவும், மகாமுனிவர்களுக்கு அருள்செய்த பின்பு வனப்பகுதியில் செல்லும் போது, ஸ்ரீராமர் முன்னும், சீதாதேவி நடுவிலும், ஆயுதபாணியான லெட்சுமணன் "முன்னும் பின்னும்," பார்த்துக்கொண்டே சென்றார்கள் என்பதையும் தெரிவிக்கிறது. இதன் தாத்பரியம் ஸ்ரீராமனான பிரணவம் முன்னும் லெட்சுமிகரமான நாராயணபதம் நடுவிலும் லெட்சுமண வடிவான கைங்கர்ய பதம்–நமக–என்பது அடியார்களை காக்கும் நிலையில் முன்னும் பின்னும் பயின்று வரும் என்பது திருமந்திர ரகஸ்யாத்தம் என பெரியோர்கள் வியாக்கியானம் செய்வார்கள். ஆச்சாரியாரை முதன்மையாக கொண்டு லெட்சுமி கடாச்சத்தின் மூலம் பகவானை சரணடைய வேண்டும் என்பதும் பகவான், தாயார் லெட்சுமி, ஆச்சாரியார் என்ற குருபரம்பரை சித்தாந்தம் இத்திருக்கோவிலில்

பாரம்பரியமாக பெரியோர்களால் அனுஷ்டிக்கப்படுகிறது. திருமந்திர ரகசியார்த்ததுடன், உபயமந்திரம், சரமசுலோக ரகசியங்கள் அருளப்பெற்ற திவ்யதேசம். திருக்கோட்டியூர் நம்பிகள் வம்சாவழியினரால் திருமந்திரம் அருளப்பெற்று வருகிறது.

கல்லெழுத்து : "கேரளசிங்க வள நாட்டில் தேவதானம் திருக்கோட்டியூர் பெரியகோயில் நாயனார் ஸ்ரீ சொக்கநாராயணப் பெருமாள்" கல்லெழுத்துக்கள் 4ம் நூற்றாண்டு முதல் 12ம் நூற்றாண்டுவரை, இப்பகுதியில் நிவந்தங்கள், மானிபங்கள், கிராம தானங்கள், நந்தா விளக்கு எரிய நன்கொடைகள் செய்த நிலை காணமுடிகிறது.

விழாக்கள் : வைகான ஆகமமுறைப்படியும் தென்னாச்சர்ய சம்பிர தாயத்துடன் நித்யபூஜைகள் திருநட்சத்திரங்கள் ஆட்ட விஷேசங்கள், சித்திரைமாத சித்ரா நட்சத்திர தேர்த்திருவிழா பிரமோற்ஸவம், ஆடி பூர ஆண்டாள் திருத்தேர் விழா பிரம்மோற்ஸவம், ஆவணி மாத ஜேஸ்டா பிஷேகம், மார்கழி பகல்பத்து இராபத்து உத்ஸவங்கள், மாசி பௌர்ணமி தெப்பத்திருவிழா, பங்குனி உத்திர ஊஞ்சல் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

இங்கு பக்தர்கள் விளக்கேற்றியும், பிரார்த்தனைகள் செய்தும் லெட்சகணக்கில் மாசி தெப்பத்திருவிழாவில் கலந்து கொண்டும் இப்பகுதிமக்கள் தேர்உத்ஸவங்களில் கலந்து கொண்டும் தாங்கள் வேண்டும் பேறுகளை மிக விரைவில் பெறுகிறார் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

உபகோயில்கள் : இத்திருக்கோயிலின் உபகோயிலாக அருள்மிகு வடக்கு வாசல் செல்வி அம்மன் திருக்கோயில் உள்ளது. பிரதான திருகோயிலின் வடகிழக்கில், வடக்குநோக்கி அமர்ந்த சிம்மவாகினியான அம்பிகை எண்கரத்துடன் காட்சி தருபவள். இந்த அன்னைக்கு சித்திரை பிரம்மோற்ஸவம் நடைபெற்ற பின்னரே பெருமாளுக்கு பிரம்மோற்ஸவம் நடைபெறுகிறது. கும்பாபிஷேக நாள் 23-6-2004.

ஸ்ரீ பெருமாள் கோயிலின் தென்மேற்கே அருள்மிகு மஞ்சனிக்கூத்த ஐயனார்கோயில் என அழைக்கப்படும் முத்தையாகோயில் உள்ளது. பூரணா புஷ்கலாசமேதரான மஞ்சனிக்கூத்த ஐயனார் கருப்பர், சோணையா முதலானவர் காட்சி தரும் இக்கோயில், இப்பகுதி மக்களால் குலதெய்வமாக வழிபடப்படுகிறது. கும்பாபிஷேக நாள் 11-6-2003. கோயில் வடமேற்கு மூலையில் அருள்மிகு சொக்க ஆஞ்சநேயர் திருக்கோயில்- சிவகங்கை ராணி காத்தம்மை நாச்சியாரால் எழுப்பப்பட்டது. கோட்டை தெற்குவாசல் ஆஞ்சனேயர், தானிப்பட்டி செல்வவிநாயகர், வயிரம்பட்டி தண்ணீர் ஐயனார் மற்றும் முனீஸ்வரர், விநாயகர் கோயில்கள், இதன் உபகோயில்கள். கல்லுப்பட்டி கிராமத்தில் இதன் உபகோயிலாக வினைதீர்த்த விநாயகர் மற்றும் அதன் உபகோயில்களும் உள்ளன. பெரியகோவில் குடமுழுக்கு நாள் 11.2.1993, 27-6-2004.

15. வெளியாத்தூர் : அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்

திருக்கோட்டியூர் – கண்டரமாணிக்கம் சாலையில் பட்டமங்கலத்திலிருந்து 2 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

இறைவன் : அருள்மிகு கைலாச நாதர்

இறைவி : அருள்மிகு இளநீர் அம்பிகை

கற்றளி – இத்திருத்தலம் காராளர்கள் வாழ்ந்து சிறக்கும் திருத்தலம். இத்திருத்தலத்தில் பழங்காலம் முதல் சிவன், பெருமாள், கொற்றவை வழிபாடு உயர்த்தோங்கி இருந்தது. சிறந்த பண்பாடு குடிகொண்ட இத்திருதலத்தின் வடமேற்கே சுயம்பு கரும்பீசர் மங்களம்பிகை திருக்கோயில் – சிவகங்கை மன்னர்களால் நயினார் பாப்பான் ஏந்தல் என்ற கிராமம் ஸ்தானிகர்களுக்கு சர்வ சுதந்திர மானிபமாக விடப்பட்டு பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இப்பகுதிகளில் காராளர்கள் வாழ்ந்து சிறந்தனர் என்பதற்கு சான்றாக சுடுமண் சிற்பங்கள், முதுமக்கள் தாழிகள், அவர்கள் பயன்படுத்திய ஐம்படைத்தாழிகள் சின்னங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

திருக்குளத்துடன் கூடிய நந்தவனம் கற்றளி மகாகும்பாபிஷேகம் செய்வதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இத்தலத்தில் ஒற்றை சனீஸ்வரர் சன்னதியும் உண்டு. அமைதியான வழிபாட்டுக்கு உகந்த திருத்தலம்.

16. முறையூர் : அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில்

சீர்சேந்த மங்கலம் என்று அழைக்கப்பட்ட முறையூர் ஐந்து(மங்கல) நிலை நாட்டின் தலையாய ஊர். முதன்மையான ஊர் முறையூர் எனலாயிற்று.

பொன்னன் விசயாலயன் என்ற வன்னிய அரசன் ஒருகாலத்தே இப்பகுதியை ஆட்சிபுரிந்தான். அவனது வழிபடு தெய்வமான மதுரை மீனாட்சி சுந்தரேசனை இங்கிருந்து குதிரைமேல் சென்று அன்றாடம் வழிபட்டு வருவது வழக்கமாயிருந்தது. வயோதிகம் காரணமாக அவ்வழக்கம் தடைபடும் நிலையில் மன்னன் மனம் ஏக்கம் கொண்டது. ஆலவாய் அண்ணலும், அங்கயற்கண்ணியும் மதுரைம்பதிபோல ஆலயம் அமைக்க மன்னனுக்கு அருள் செய்தனர். மன்னனும் தன் மனக்கோயில் கொண்ட மதுரை சொக்கனுக்கு தன் சொந்த மண்ணிலும் கோயில் எழுப்பினான். குடிகொண்ட தெய்வங்கள் எந்நாளும் நீங்காது தன் குடிமக்களையும் காக்க வேண்டினான்.

அற்புத வேலைபாடு அமைந்த கற்றளி – சுவாமி சுந்தரேஸ்வரனாம் சொக்கனுக்கு கருவறை, அர்த்த மண்டபம் சுற்றுப் பிரகாரத்துடன் கற்றளி துவாரபாலகர்களை கடந்து வெளியே வந்தால் அன்னை மீனாட்சிக்கு கருவறை, அர்த்த மண்டபம், சுவாமிக்கு எதிராக நீண்ட மகாமண்டபம் பள்ளியறை, பைரவர், கம்பத்தடி, பலிபீடம் உள்பட பரந்து விரிந்த நிலை, இவற்றை உள்ளடக்கி ஒரு பிரகாரம், மதில்சுவர் தாண்டி மகாகாளர் காவலுடன் ஒரு பிரகாரம், எதிரே படிக்கட்டுகளுடன் கூடிய தெப்பக்குளம், கரைக்கடந்து தேர்தளத்துடன் கூடிய பெரிய பிரகாரம் உள்ளது. இத்துடன் இணைந்த பிடாரி திருக்கோயில் உபகோயிலாக பரிணமிக்கிறது.

இவ்வூர் முற்காலத்தே பாசறையுடன் கூடிய பள்ளிப்படை ஊர். நிரந்தர படையுடன் கூடிய நிலைக்களம். இப்பகுதி மக்களால் இஷ்ட தெய்வமாக கொண்டாடப்படும் ஊர், நித்திய பூஜையுடன் ஆட்ட விஷேசங்களும் நடைபெறுகின்றன. ஆனி மாதம் பிரம்மோற்ஸவம் சிறப்பாக நடைபெறுகிறது. சிவாச்சாரியார்களால் பூஜை செய்யப்பட்டு வருகிறது. மஹாகும்பாபிஷேகம் நாள்: 10.11.1995.

குடவறைக்கு இடதுபுறம் அருள்மிகு திருவேங்கடமுடையார் பெருமாள் திருக்கோவில் உள்ளது.

17. மு.சூரக்குடி : அருள்மிகு செகுட்டய்யனார் திருக்கோவில்

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" – என்பது அவ்வைத்தமிழ். ஆதியில் குடியிருக்க அனைத்து வசதிகளும் நிறைந்த நீர்நிலைகளை, ஆற்றுப்படுகைகளை நாடினான் ஆதிமனிதன். பரிணாம வளர்ச்சி – உடல் உயிர்–மன வளர்ச்சிக்கினங்க நதி நாகரிகங்கள் மேன்மை அடைந்தன. மனிதன் மாமனிதனாக – தெய்வமாக ஏற்றம் பெறும் நிலையை எய்த வேண்டியே பயிற்சி சாலையாக ஆலயத்தை அமைத்தான். கூட்டத்திற்காக முதிர்ச்சி அடைந்த கோயில்கள் புதுக்கினான், கற்க வேண்டிய கலைகள் அனைத்தும் ஒரே ஒரு கடவுள் வழியாக காட்சிதரும் வகையில், மந்திரம் சோதிடம், வானியல், கட்டிடக்கலை, இசை, நடனம், மருத்துவக்கலை, தர்க்கம், நியாயம், மீமாம்சை போன்ற நெறிகளெல்லாம் ஒரே ஸ்தலத்தில் நிலைகொள்ளும் வகையில் அவனது தொலைநோக்கு பார்வையிருந்தது. மொழியின் முதிர்ச்சியும் – அகத்தின் ஆழ்ந்த குறிக்கோளும் மந்திரமாயிற்று. மந்திரங்களுக்கு தக்கபடி மூர்த்திபேதம் ஏற்பட்டது. பல்வகையான கட்டளைகளுக்கு இணங்க வெவ்வேறு தெய்வ நிலைகளும் தத்துவங்களும் ஏற்பட்டன. வாழும் மண்ணுக்குத் தக்கபடி இயற்கை வழிபாட்டுடன் மண்ணையும், விண்ணையும் இணைக்கும் வகையில் புதவடை, அதிஷ்டானம், கண்டம், குமுதம், பட்டிசம், வியாளம், கபோதகம், பண்டியல், ஸ்தூபி, அகாரை, மகாநாசி, ஸ்தூபி, பர்யந்தம் கட்டுமானம் உள்ளடக்கினான். மனிதனின் உடல், உள்ளம் செம்மையுடன் வாழ்வதற்கு தக்க செயல்பாடுகளை ஆலயத்திலிருந்து அன்றாடம் தெரிந்து கொள்ளவும் பண்படவும் நிரந்தரமாக அமைத்துக் கொண்டான்.

ஆன்மா–லயப்பட்டது, ஆலயமாயிற்று. தனக்கு மட்டுமின்றி தாரணிக்கும் நன்மை அடையும் நிலையில் சக்தி வெளிப்பட்டது. தன்னை அறியாது தலைவனுக்கு ஆட்படும் ஐக்கிய உணர்ச்சி ஏற்பட்டது. அது அருவமாக அருஉருவமாக உருவமாக இயற்கை வெளிப்பாடாக அமைந்தது. உள்ளார்ந்த உணர்வு இல்லாதாரும், உயர்ந்த பயிற்சி இல்லாதாரும் கூட "ஆமாம்! ஏதோ ஒரு இனம் புரியாத சக்தி இருக்கத்தான் செய்கிறது." – என்று ஒப்புக்கொள்ளும் வகையில் – சக்தி வெளிப்படையாக விளங்குகின்றது.

"சுவாமி வள்ளிக்கொடி முத்தையன்" என்று அழைக்கப்படும் அருள்மிகு செகுட்டய்யனார்–மூலவர் மகரிஷி வடிவமாக காட்சிதருகிறார்.

அவரை யாரும் தொடமுடியாது. வனப்பிரதேசம் போன்ற அடர்ந்த கொடிகளால், இயற்கையாக பின்னிப் பினைந்துள்ளது. ஆங்காங்கே சிறு ஒற்றையடிப்பாதை–அதன் முடிவில் வீரர்கள்–ஒருபுறம் பெரியகருப்பர் மற்றொருபாதையில் சின்னக்கருப்பர்–இதேபோல் அனேகம் 53 மகாவீரர்களின் மண்சிலா விக்கிரகங்கள் மத்தியில் ஆட்சி செய்யும் ஐயன் – மகாசக்தி வாய்ந்தவர் அனைத்து ஐஸ்வர்யமும், பொன் முதலாம் அணிகலன்கள் அனைத்தும் ஆனந்தமாக அணிந்து காட்சிதருகிறார். வெளியே யானைகள், குதிரைகள், பூதகணங்கள் புடைசூழ்ந்து நிற்கின்றன. எதிரே தெப்பக்குளத்தில் காவல் தேவதைகள் உள்ளன. மகா அமைதி குடிகொண்ட சூழ்நிலை – சங்கம், சேகண்டி முழங்குகின்றது. ஐயனுக்கு தீபாராதனை காட்டப்படுகிறது. கதிர் ஒளி கூட புகாநிலையில் வெளிப்படும் தீப ஒளியில் அய்யனின் அருள் பிரபாகம்–இனமறியாத புளகாங்கீதம் புத்துணர்ச்சி – அனுபூதியில் மட்டுமே தெரியும்.

அங்கே பூரண சரணாகதித்துவம் – ஐயனிடம் மறைவுக்கு இடமில்லை. தவறு செய்பவர்களுக்கு இடமில்லை – சமாதானத்துக்கு முறை கேட்கப்படுகிறது. தனக்கு ஏற்பட்ட சோதனைகள் ஏமாற்றங்கள், பழிகளுக்கு பரிகாரம் கிடைக்கிறது. ஐயனிடம் சென்று வீண்போனதில்லை –ஆம் இது நீதிமன்றம் கட்டணம் இல்லை – வழக்கறிஞர் இல்லை – காலதாமதம் இல்லை – நீதி உடன் கிடைக்கிறது.

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்தின் நீதிமன்ற கோயில், இக்கோயிலுக்கு பூஜை செய்யும் முத்தரையர் வகுப்பினர் கட்டாயம் காதுவளர்க்க வேண்டும் ஆண் என்ன! பெண் என்ன? ஐயன் அருளாட்சியில் ஒன்றே – சமஸ்தானம் மானியம், சிப்பந்திகள் சம்பளம், மாதப்படித்தரம் – நித்திய பூஜைகள் நடைபெறுகின்றன. சிங்கம்புணரி அருள்மிகு சேவுகப்பெருமாள் திருக்கோயிலில் இருந்து சந்தனம், மாலை முரசுக்காளை சகிதம் விருது வரும். வைகாசி திருவிழா முடிந்து அருள்மிகு முத்தயனார் புரவித்திருவிழா – கொண்டாட்டம் தான் – இது முறையூரிலிருந்து மேற்கே 5 கி.மீ. தொலைவிலும் சூரக்குடியிலிருந்து 2.கி.மீ. தொலைவிலும் உள்ளது. கோயில் மற்றும் ஊரணி பரப்பு 7 ஏக்கர் 37 செண்டு.

18. காளாப்பூர் : அருள்மிகு வடக்கு வாசல் செல்லியம்மன் திருக்கோவில்

திருப்பத்தூர் – சிங்கம்புணரி பேருந்து வழித்தடத்தில் சதுர்வேதி மங்கலத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. அன்னை அருள்மிகு வடக்கு வாசல் செல்லி மகாகாளியாக வடக்கு நோக்கி அருள்புரிகிறார்.அழகான கற்றளி – திறந்த வெளிமைதானம் இங்கு மக்கள் பொங்கல் வைத்துவழிபடுகின்றனர். இக்கோவிலுக்கு பூஜை செய்வோர் வேளாளர் வகுப்பினர். நித்திய பூஜைகளுடன் திருவிழா நடைபெற்று வருகிறது. இதன் உபகோவில்கலான அருள்மிகு இலங்கமுடைய ஐயனார் கோவில் மற்றும் அருள்மிகு ஆதிமூல ஐயனார் கோவில் உள்ளது. மஹாகும்பாபிஷேகம் நடைபெற்ற ஆண்டு 30.1.1993.

19. நெற்குப்பை : அருள்மிகு மனமொத்த கண்டீஸ்வரர் திருக்கோயில்

திருப்பத்தூர் – தெக்கூர் – பொன்னமராவதி

பேருந்து வழித்தடத்தில் திருப்பத்தூரிலிருந்து 15 கி.மீட்டர் தொலைவிலும், பொன்னமராவதியிலிருந்து தெற்கே 6கி.மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இறைவன் : அருள்மிகு மனமொத்த கண்டீஸ்வரர்

இறைவி : அருள்மிகு மரகதவல்லி

இறைவனும், அவர் வலது புறம் இறைவியும்–கிழக்கு நோக்கிய சன்னதிகள் கற்றளி, கற்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் முன்புற ஓட்டுக்கொட்டகை. இறைவிக்கு தனியாக கற்பகிரகம், அர்த்தமண்டபம், தனிசுற்று பிரகாரம் கொண்டும், விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், தனித்தனி தளிகளும் உள்ளன. கருவறை வெளிச்சுவர் சேர்ந்து ஸ்ரீ பெருமாளுக்கும் மகாலெட்சுமிக்கும் சன்னதிகள் உள்ளன. நித்திய பூஜைகளுடன் ஆருத்ரா தரிசனம் சுவாமி திருவீதி உலா சிறப்பாக நடைபெறுகிறது.

இக்கோவில் 16ம் நூற்றாண்டை சேர்ந்தது என்பதற்கு உரிய கல்வெட்டுகள் உள்ளன. மேலும் இப்பகுதியை சேர்ந்தவரும் வாராப்பூரை மையமாக கொண்டு படைவானம் திரட்டுவதற்கு உரிமை உள்ளவருமான வெங்கலப்ப நாயக்கரால் போற்றி காக்கப்பட்டவை என்று தெரிகிறது.

இங்கு நாட்டார், நகரத்தார், பெருமக்கள் ஒத்துழைப்புடன் வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. திருநந்தவனம், வாகனக்கொட்டகை, திருக்கோயில் கீழ்புறம் தெப்பக்குளம் அமைந்துள்ளது. கோவில் கிழக்கு வாயிலும் தெற்கு வாயிலும் மதில்சுவர் அமைவுடன் கூடியுள்ளது. மஹாகும்பாபிஷேகம் 24.5.2003. (சுமார் 80 ஆண்டுகளுக்கு பிறகு)

20. பரியாமருதுபட்டி : அருள்மிகு பரியாமருதீஸ்வரர் திருக்கோவில்

பொன்னமராவதி நகரிலிருந்து தெற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. குக்கிராமம், சுவாமி லிங்கத்திருமேனி – கிழக்கு நோக்கிய சன்னிதி கருவறை அர்த்தமண்டபம் மகாமண்டபத்துடன் கூடியது. இறைவி: பார்வதி – துவிபுஜம் நின்ற நிலையில் தெற்கு நோக்கி அருள்பாலிக்கும் திருவுருவம். கருவறை அர்த்தமண்டபத்துடன் தனித்தளி, உள்பிரகாரம், திருமாளிகை பத்தி மேற்தளத்துடன் கூடிய கற்றளி வெளிப்பிரகாரம் மதில்சுவருடன் கூடியது. வெளிப்பிரகாரம் தென்பகுதியில் வானுயர்ந்த மருதமரம்–தலவிருட்சம், மதில்சுவர் தென்வெளிப்பகுதியிலும் மிகப்பெரிய மருதமரம் உள்ளது. கோவிலுக்கு தெற்கே குடிநீர் குளமும், கிழக்கே பெரும் அரச மரமும் பரந்த வெளியும் – திருநந்தவனம், களஞ்சியம் முதலான கட்டிடங்களும் உள்ளன.

சதுர்யுகம் கண்டமூர்த்தி – வரபிரசாதி. குழந்தை வைத்தியர். குழந்தைகளுக்கு ஏற்படும் வியாதிகளுக்கு பிரார்த்தனை திருத்தலம்.

கோவில் மகாமண்டபத்தில் பழைய அம்மன் பரஞ்ஜோதி என வழிபடப்படுகிறார். சாந்தமும் – சக்தியும் விளங்கும் தலம். ஆடி வெள்ளி தை வெள்ளி செவ்வாய் கிழமைகளில் மக்கள் அதிகம் வழிபடுகிறார்கள். வாதாவூர் அடிகளுக்காக திருவிளையாடல் புரிந்த இறைவன், இங்கு வனப்பகுதியில் இருந்த "நரிகளை எல்லாம் பரி(குதிரை)களாக்கி நரியை பரியாக்கியதால்" பரியாமருதுபட்டி என புராண வரலாறு கொண்டது. மஹாகும்பாபிஷேகம் நாள்: 10.2.2000.



திருக்கோஷ்டியூர்
ஸ்ரீ திருமாமகள் தாயார்

21. பரியாமருதுபட்டி : அருள்மிகு சேவுகப்பெருமாள் ஐயனார் கோவில்

திருக்கோயில்கள் பரத கலை, அரசியல், பண்பாடு அன்றாட மக்கள் பழக்க வழக்கங்களை பிரதிபலிப்பன. வானுயர்ந்த கோபுரம், மதில்சுவர்கள், அகழிகள், கோட்டை கொத்தளங்கள், கூடியதாக கோ(அரசன்) இல் (இல்லம்) கோயிலாக அரன் (இறைவன்) மனையாக விளங்கின.

வீரம் ததும்பும் பார்வை, வெற்றிக்களிப்பு, அவலத்தை, அடக்கும் அஞ்சாமை, மீசை முருக்குடன் கம்பீரமாக காட்சிதரும் வீரர்கள், காலாள் படையினர், புயலென பாய்ந்து வரும் புரவிகள், யானைகள், பொதிசுமக்கும் காளைகள், வீரம் செறிந்த ரிஷபங்கள், படைக்கலங்கள், பாசறைகள்.

வெறியூட்டும் எக்காளம், பம்பை, உடுக்கை, ஆடம்பரம், தப்பு, கொம்பு முதலான வாத்திய முழக்கம்–வீரப்படைகள் அணி வகுக்கும் புரவி எடுப்பு விழா எருதுகட்டு, மஞ்சுவிரட்டு என காளையர்கள் காளைகளை கட்டி தழுவி காயம்பட்டு (விழுப்புண்)! குதுகளிக்கும் கிராமிய விழாக்கள் – இதெல்லாம் ஐயனார் வழிபாட்டுடன் தொடர்ந்தவை.

கண்மாய்க்கரையில் – படைசகிதம் அச்சம் தரும் நிலையில் மண்ணுக்கு அதிபதியாக, மடைகாக்கும் தெய்வமாக, மகசூலுக்கு அதிகாரியாக, விளங்கும் ஐயனார் இல்லாத கிராமம் காண்பது அரிது. எத்துனை எத்துனை பெயர்கள்–பாரதியின் பாட்டுப்படி காவலனாக, காதலனாக, சேவகனாக விளங்கும் இத்தெய்வம் பரியாமருதுபட்டியில் சேவுகப்பெருமாள் ஐயனார் என அழைக்கப்படுகிறார்.

ஐயனார் குறித்து புராணங்களில் பூதனாதன் படலம் என்ற பகுதி விஷேசமானது.

"ஓம்பூத நாதாய வித்மஹே பவ நந்தனாய தீமஹி
தந்நோ சாஸ்த்தா பிரசோதயாத்".

என்கிறது. சாஸ்த்தா காயத்தி மந்திரம். சாஸ்த்தா என்பதற்கு கட்டளை செய்பவர் என்பது பொருள்.

நம் சேவுகப்பெருமாள் ஐயனார்–இப்பகுதி நாட்டார், நகரத்தார்களுக்கு மிக நெருக்கமானவர். அன்றாடம் நடைபெறும் நித்திய பூஜைகளுடன் ஆனி மாதத்தில் நடைபெறும் 10 நாள் பிரமோற்ஸவம் திருத்தேர்விழா தீர்த்த விழாவுடன் நிறைவடைகிறது.

திருவிழா இருநேரமும் விநாயகர்–ஐயனார் – பிடாரி அம்மன் உத்ஸவ வாகனங்களில் எழுந்தருளி திருவீதி உலா வருவது சிறப்பு.

மூலவர் ஏகாந்தமாக யோகநிலையில் இருந்தாலும் உத்ஸவர் இருதாரங்களுடன் பூரணை புஷ்கலையுடன் சேர்ந்திருக்கிறார். இத்தலத்தில் முஸ்லீம் பெருமக்களும் கோவில் பக்கத்தில் (வடபுறம்) இருந்து பாத்தியா, ஓதிச்செல்கிறார்கள். இக்கோவில் ஒரு பள்ளிக்கோயிலாக திகழ்திருக்கும் என்பது ஆய்வு. குடமுழுக்கு நாள் 14.6.1998.

22. திருமலை: அருள்மிகு பாகம்பிரியாள் உடனுறை மலைக்கொழுந்தீஸ்வரர் திருக்கோயில்

செந்தமிழ்நாடாம் தென்னகம் சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களால் முழுவதும் ஆட்சிசெய்யப் பெற்றது. அவர்களின் சிறப்பியல்புகள் அவ்வப்போது இப்புண்ணிய பூமியில் தடம்பதித்தவை ஏராளம். இருப்பினும் திருக்கோயில்களே காலப்பெட்டகமாக, வரலாற்று ஏடாக, தடயவியலுக்கு ஆதாரமாக இன்றும் சான்று பகர்கின்றன. சோழவள நாட்டில் பாண்டியனின் கொற்றம் பொன் வேய்ந்தாக தெரியும். பாண்டியன் திருநாட்டில் சோழன் உலாவந்தகாலம், கட்டிடக்கலையால் பரிணமிக்கும். சேரனின் பொற்காலம் செந்தமிழ் காவியமாய் திகழும். வடபுலத்து கலைஞானம் மகத்தான பல்லவரால் வளமை சேர்க்கும்.

பேரரசர்கள் செய்த அருஞ்செயல் எல்லாம் காப்பதற்கு கடைசியாக எழுந்தவன் சிவகங்கை மாமன்னன் காசி முதல் தேசி (ராமேசம்) வரை திருக்கோயில்கள், கட்டளைகள் ஏற்படுத்தி குறைவுபடாது அரசாள அவதரித்தவன் சிவகங்கை மன்னர் பெருமான். அவனது ஆட்சி நிர்வாகத்தில் மலை உண்டு, கடல் உண்டு, ஆறு உண்டு, ஆறும் (ஒழுக்கம்) உண்டு.

சிவகங்கை தேவஸ்தானத்தில் அமைந்த மலைக்கோயில்கள் இரண்டு ஒன்று திருமலை, இரண்டு மருந்துமலை–திருமலை சிறந்த சுற்றுலா தலம். கற்றவர் விரும்பும் திருத்தலம், சாந்தம் தவழும் தலம், வரலாறு தோன்றிய காலம் முதல் – தற்காலம் வரை கல் எழுத்துக்களும் ஓவியங்களும் சமண படுகைகளாய் குகைகளாய் கட்டிடங்களாய் மாட மாளிகைகளாய் இயற்கை வனப்புகளை இதயத்துடன் சங்கமமாக்கி அறிவுடன் ஆனந்திக்கும் அருள் தலம்.

இங்கே கற்கால ஓவியம் உண்டு, குகை உறைவிடம் உண்டு, சமணபடுக்கைகள் உண்டு, தாமிலி எழுத்துக்கள் உண்டு, குடவரைக்கோயில் கட்டிட அமைப்பு உண்டு.

சிவகங்கை – திருப்பத்தூர் பேருந்து வழித்தடத்தில் ஒக்கூரிலிருந்து மேற்கே கீழப்பூங்குடி என்ற கிராமத்திற்கு அருகே விண்ணுயர்ந்த மலை வாருங்கள் வாருங்கள் என வரவேற்க்கும்.

இயற்க்கையான ஏற்றத்துடன் சிற்றுந்து ஏறும் நிலையில் உள்ள மலை. கிழக்கு அடிவாரத்தில் கடம்பவன ஐயனார் காளிகோவில் உள்ளது. குதிரை யானை பூதங்கள் புடைசூழ காவல்படை கடந்து திருமலை ஏறுகிறோம். மலையின் வடக்கே சேங்கை தீர்த்தம் உள்ளது–சிறந்த படிக்கட்டுகள் வழிநடையாக செல்வதற்கு வசதியாக உள்ளது.

கிழக்கு நோக்கிய கருவறை– லிங்க திருமேனி மலைகொழுந்தீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். சதுர வடிவ கருவறை– தேவகோட்டங்களில் தெட்சிணாமூர்த்தி, துர்க்கை அர்த்தமண்டபம் வடபுறம் சண்டேஸ்வரர் மகாமண்டபத்தில் நந்தி பலிபீடம்–துவார கணபதி, தண்டபாணி திருவுருவங்கள்.

அன்னை பாகம்பிரியாளுக்கு தனிகற்றளி. நின்ற திருக்கோலம். துவிகரம். தெற்குநோக்கிய திருமேனி. மண்டபத்தில் வாயில்பக்கம் கருவப்பண்டியர் சிலை கம்பீரமாக உள்ளது.

தரை அமைப்பிலிருந்து தெற்கில் உயர்ந்த குடவரைகோயில் உமா சகித மூர்த்தி. ஒரே இருக்கையில் ஒருபாதம் இருக்கையின் மீதும் மறுபாதம் ஊன்றிய நிலையில் உள்ளது. உத்குடி ஆசன அமைப்பில் சுகாசனத்தில் எழிலார்ந்த இன்பக்கோலம். காண்போரை கருத்தில் ஆழ்த்தும். இங்குள்ள புடைப்பு சிற்பங்கள் முருகன், குறளன், குறளி, சாமரம், வேல், சேவல் கண்ணுக்கு இனியன.

திருமலையின் குன்றின் உச்சி பம்பரமலையில் கற்கால ஓவியங்கள் உள்ளன. தாமிலி முதல் நூற்றாண்டு கல்லெழுத்துக்கள் உள்ளன.

திருமலை பக்தியுடன் சென்று வழிபட்டு பண்பாடுடன் நம் பழமையை வியந்து இன்பம் பெற இனிய தலம். குன்றின் உச்சியில் மால் மருகனுக்கு கோயில் எழுப்பப்பட உள்ளது.

திருமலை கி.மு.1ம் நூற்றாண்டு முதல் 13ம் நூற்றாண்டு வரை உள்ள எழுத்து, ஓவியம், சிற்பம், கட்டிட அமைப்புக்களுக்கு எடுத்துக்காட்டாக காலப்பெட்டகமாக உள்ளது.

இப்பகுதி மக்களுக்கு பக்தியுடன் பரவிடும் தெய்வமாக விளங்குகிறது. திருமலை தலவரலாறும் சிறப்பாக தனித்தநிலையில் திரு.சு.கண்ணன் தொல்லியல் துறை சார்ந்தவரால் எழுதப்பட்டுள்ளது. மஹாகும்பாபிஷேக நாள்:11.9.1992.

23. செம்பனூர் : அருள்மிகு கண்டீஸ்வரர் திருக்கோயில்

கல்லல்–மதகுபட்டி பேருந்து வழித்தடத்தில் கல்லலிருந்து சுமார் 3கி.மீட்டர் தொலைவில் உள்ளது. சுவாமி மூலவர் லிங்கதிருமேனி கண்டீஸ்வரர். அம்மை நித்திய கல்யாணி அம்பாள். மன்னர்களால் நிவர்த்தங்கள் மானியங்கள் விடப்படுள்ளது பொதுமக்களால் உபயங்கள் செய்யப்பட்டும் வருகின்றன. பிரம்மோற்ஸவம் தவிர இதர ஆட்டவிஷேசங்கள் சுவாமி திருவீதி உலா பிரதோஷவழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. செம்பனூர் மாணிக்கம் செட்டியார் வகை அறக்கட்டளை மூலம் உபயவழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

கற்றளியாக கர்ப்ப கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், பிரகாரம், வெளிப்பிரகாரம், திருக்குளம், முனீஸ்வரர், சன்னதி, தெற்கு கிழக்கு குடவரை வாயில்கள் உள்ளன. கும்பாபிஷேக நாள் 22.4.1999, 13–7–2006.



24. ஏரியூர் : அருள்மிகு மலைமருந்தீஸ்வரர் திருக்கோவில்

சிவகங்கை – திருப்பத்தூர் பேருந்து வழித்தடத்தில் திருக்கோட்டியூரில் இருந்து 5கி.மீட்டர் தொலைவில் அரளிக்கோட்டை என்னும் சிற்றூர் அருகே உள்ளது.

கரடுமுரடான சரளைக்கல். பாறைகள் விட்டுவிட்டு செல்லும் கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதி சுமார் 150 அடி உயரத்தில் அமைந்த தொடர்குன்றின் மேல் எழுப்பப்பட்ட கற்றளி – மேற்கு நோக்கிய மூலவர் லிங்க திருமேனி அருள்மிகு மலைமருந்தீஸ்வரர் ஏகானந்தநிலை தனித்தளியில் உள்ளார். திருக்கோயில்களில் அன்னையார் பிற்காலத்தில் தான் பிரதிஸ்டை செய்யப்பட்டது என்பர் ஆய்வாளர்கள். – இத்தலம் தொன்மையுடையது.

ஸ்ரீ ராமதூதர் இலங்கைக்கு சஞ்சீவி மலையை தூக்கி கொண்டு போகும் போது விழுந்த மலைபகுதி என்பர். மூலவரை ஔஷத கிரீஸ்வரர் என்று அழைப்பதும் உண்டு. இங்கு நித்திய பூஜைகளுடன் பங்குனி மாத உத்திர நட்சத்திரத்தில் திருத்தேர் விழா – இறைவன் ஏகாந்த நிலையில் உள்ளதால் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியருக்கு துவஜா ரோகணம் செய்து திருவிழா நடைபெருகிறது. இப்பகுதி மக்கள் சிறப்புடன் பங்கு கொண்டு வழிபட்டு வாழ்கின்றனர்–சிவாச்சாரியார் பூஜைசெய்யும் திருக்கோயில்இராஜமானியம் விடப்பபட்டுள்ளது.

மலை மேற்பகுதி வடபுறம் காவல் தெய்வம் கருப்பர் (ஆயுதம் மட்டும்) வழிபடப்படுகிறார் இத்தல முனீஸ்வரர் மிக சக்தி வாய்ந்தவர்.

மலை அடிவாரத்தில் அன்னை அருள்மிகு அழகிய நாயகி திருக்கோயில் உள்ளது. பண்டாரத்தார் வகுப்பினர் பூஜை செய்கிறார்கள். அன்னைக்கு திருவிழா 10 நாட்கள் மாசி பங்குனி மாதத்தில் நடைபெற்ற பின்பு மலை மேல் அமர்ந்த அய்யனுக்கு திருவிழா நடைபெறுகிறது. மலை அடிவாரத்தில் அமைந்துள்ள சேங்கை என்னும் திருக்குளத்தில் தெப்பதிருவிழா நடைபெற்றுள்ளது.

ஏரியூரின் நடுவில் இக்கோயில்களின் உபகோயில் விநாயகர் திருக்கோவில் உள்ளது. அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக நாள் 19.6.1997.

25. அம்மச்சிபட்டி : அருள்மிகு மனைகோலி அம்மன் திருக்கோயில்

அரளிக்கோட்டையிலிருந்து சுமார் 2.கி.மீட்டர் தொலைவிலுள்ள வனசங்கரி திருக்கோயில் சுற்றிலும் வனம் தற்போது கோயில் தவிர சுற்றுப்பகுதி அனைத்தும் வனத்துறையிடம் உள்ளது. அன்னை மகாசண்டியாக வடக்கு நோக்கி அருள் செய்கிறார். பரிவார தெய்வங்களாக வீரர் கூட்டம் பெரிய கருப்பர், சின்னக்கருப்பர், சோனையன், முனி, பேச்சி புடைசூழ வீற்றுள்ள அம்பிகை இப்பகுதி மக்களின் குலதெய்வம். முத்தரையர் இனத்தவர்கள், கோயில்காவல் முதல் பூஜை, பரிசாரம் (கோயில் கணக்கர் நீங்களாக) பணி செய்து வருகின்றனர். நித்திய பூஜைகள் நடைபெற்று வருகிறது. குடமுழுக்கு நடைபெற்றது. கோயில் துவார பாலகர்களுக்கு அருகே இரண்டு பூதங்கள் காவல்புரிகின்றன. மகாகும்பாபிஷேக நாள் 10.9.2000.

26. வடவன்பட்டி: அருள்மிகு பிரியாவிடை நாயனார் திருக்கோயில் அருள்மிகு சொர்ணவல்லிஅம்பாள் (பொன்னாவிடைச்செல்வி)

ஏரியூரிலிருந்து ஐந்து கி.மீட்டர் தொலைவில் உள்ள சிவஸ்தலம் தொன்மையானது கி.பி.12–13 நூற்றாண்டைச் சேர்ந்தது மூலவர் லிங்கத்திருமேனி அருள்மிகு பிரியாவிடை நாயனார் அம்மை சொர்ணவல்லி என்ற பொன்னாவிடைச்செல்வி. கற்றளி கருவறை அர்த்தமண்டபம், மகாமண்டபம், அம்பாள் கருவறை உள்பிரகாரம் உள்ளடக்கிய குடவறை வாயில் ராஜகோபுரம் கட்டுமானம் இல்லை – அதிஷ்டானம் மட்டும் உள்ளது. காரண ஆகமப்படி பூஜை சிவாச்சாரியார்களால் நடைபெறுகிறது. தேரடிக்கு சற்று மேற்கே முனீஸ்வரரும் உள்ளார்.

திருக்கோயிலின் தென்மேற்கே அருள்மிகு கொப்புடாரி அம்மன் ஆலயம் உள்ளது. கிழக்கு நோக்கிய அம்பிகை பத்திரகாளி ரூபம், பேச்சி, கருப்பர், முன்னோடிகளுடன் வீர வணக்கம் செய்யும் நிலையில் உள்ளது. இந்த அம்பிகைக்கு பிரம்மோற்ஸவம் நடைபெற்ற பின்பு அருள்மிகு பிரியாவிடை நாயனாருக்கு வைகாசி விசாகத்தன்று தேரோட்டம் பிரம்மோற்ஸவம் நடைபெறுகிறது. அருள்மிகு கொப்புடாரி அம்மனுக்கு பார சைவகர்களாகிய உவச்சர் குலத்தினர் பூஜை செய்கின்றனர். குலதெய்வமாக விளங்குகிறது. நடுபட்டியில் கௌரிவிநாயகரும் மாம்பட்டி சோழ விநாயகரும் இதன் உபகோயில்கள். அருள்மிகு கொப்புடாரி அம்மன் மகாகும்பாபிஷேக நாள்: 11.9.1991.

27. அரளிக்கோட்டை : அருள்மிகு சோழீஸ்வரர் திருக்கோயில்

சிவகங்கை – திருப்பத்தூர் பேருந்து வழித்தடத்தில் திருக்கோட்டியூர்க்கு தென்மேற்கே 4 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. சுவாமி சோழீஸ்வரர் அம்மை தம்பிராட்டியார்.

கி.பி.1020ல் சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரன் பாண்டிய பேரரசு முழுவதையும் கைபற்றி சோழ நிருவாகத்தில் கொண்டுவந்தான் அது முதல் கி.பி.1190 வரை சோழ இளவரசர்கள் பாண்டிய மண்டலத்தின் ஆட்சியாளர்களாக திகழ்ந்தனர் என்று வரலாற்றுச் செய்தி. அரளிக்கோட்டையில் அருள் ஆட்சி செய்யும் அருள்வளர் சோழீஸ்வரரும் சோழர் ஆட்சியில் சிறப்புற்றவர். இத்திருக்கோயில் தூண்களில் உள்ள கல்லெழுத்துக்கள் இதனை மெய்ப்பிக்கின்றன.

சிறு கற்றளியாக கருவறை, அர்த்தமண்டபம், சிறுமுன் மண்டபத்துடன் தனியாக மடைப்பள்ளி, திருக்குளம் எதிர்பட காட்சி தரும் திருக்கோயில் நித்திய பூஜைகள் நடைபெறுகின்றன இதர திருவிழாக்கல் இல்லை.

இத்திருத்தலம் முல்லையூர் என ஆதியில் அழைக்கப்பட்டது. பிரதானி தாண்டவராயர், சிவகங்கை மாமன்னன் ஆட்சி சிறப்புற விளங்க வந்த செம்மல் பிறந்த ஊர். மான்விடு தூது என்னும் குழந்தைக்கவிராயரின் காவியம் இவர் புகழ் பரப்பும்.

"ஒருதட்டிலே பொன்னும் ஒரு தட்டிலே
நெல்லும் ஓங்க விற்கும்
கார்தட்டிய பஞ்சகாலத்தி
லே கவிவாணருக்கு
யார்தட்டிலும் தட்டு வறாது
காத்து அன்ன தானந்தந்து
மார்தட்டினான் முல்லைத் தாண்டவ
ராய வரரோதயனே"



28. அருள்மிகு காட்டுநாச்சியம்மன் திருக்கோயில்

திருப்பத்தூர் வட்டம் – திருப்பத்தூர் நாச்சியாபுரம் காரைக்குடி நெடுஞ்சாலையில் நாச்சியாபுரம் கிராமத்திலிருந்து 1.5 கி.மீ தொலைவிலுள்ள வனப்பகுதி.

அன்னை காட்டுநாச்சியம்மன் பெயருக்கு ஏற்றபடி வனதேவதையாகவும், காடுறை செல்வியாகவும், காடுகாள் ஆகவும் வடக்கு நோக்கி எண் கரங்களிலும் ஆயுதமேந்தி அசுர சம்ஹாரம் செய்யும் திருக்கோலம். அச்சம் தரத்தக்கவடிவம்.

கோயில் முன்புறம் காவல் தேவதைகள், கப்பறைக்காளி, கருப்பர், நொண்டி கருப்பர், சோணைக்கருப்பர் பூதங்கள் காட்சி தரும் நிலை.

அறுவர்க்கு இளைய நங்கை
இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு
சூருடைக் கானகம் உகந்த காளி
தாருகன் பேரு ரம் கிழித்த பெண்;

தன்னை நாடிய பக்தர்களுக்கு சதுர்வித புருஷார்த்தங்களையும் தரவல்ல சண்டிகையாக விளங்குகிறார்.

உவச்சர் குலத்தினரால் பூஜை செய்யப்படும் இத்திருக்கோயிலுக்கு பூஜை படித்தர, ஊழிய மானியங்கள் மன்னர் பெருமக்களால் விடப்பட்டுள்ளது. நித்திய பூஜை செய்யப்படுகிறது. கோவில் சேங்கை மிக சுத்தமானது யாரும் உள்ளே இறங்க அஞ்சுவர். நாச்சியாபுரம் வர்த்தகர்கள் மற்றும் ஆலைத்தொழிலாளர்களால் மே மாதம் பூச்சொரிதல் விழா சிறப்பாக நடைபெறுகிறது. வெள்ளி செவ்வாய் கிழமைகளில் மகளிர்களால் அதிகம் வணங்கப்படுகிறது.

இத்திருக்கோயிலுக்கு 26.4.93இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

29. கம்பனூர்: அருள்மிகு கோட்டைவிநாயகர் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்

திருப்பத்தூர் – நாச்சியாபுரம் – காரைக்குடி பேருந்து வழித்தடத்தில் திருப்பதூரிலிருந்து 10 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

இறைவன் : அருள்மிகு சுந்தரேஸ்வரர்

இறைவி : அருள்மிகு மீனாட்சி அம்பாள்

விஷேச மூர்த்தி: அருள்மிகு கோட்டை விநாயகர்

மண்டலாதிபதி பல்லவராயர்கள், வானாதிராயர்கள் பிற்கால பாண்டியர்களின் பிரதிநிதிகளாகவும், தன்னரசுகளாகவும் ஆட்சி புரிந்த காலத்தில் இப்பகுதியில் அழகேசன் என்ற குறுநில மன்னன் ஆண்டுவந்தான். சுமார் 30 கி.மீட்டர் பரப்பில் ஆட்சி செய்த அவனுடைய கோட்டையும் குணதிசை கோட்டைக்காவலாக கோட்டை விநாயகர் எழுந்தருளியுள்ளதாக மரவு வழிச்செய்தி. இன்றும் திருப்பத்தூர் கோட்டையின் காவலராக அருள்மிகு கோட்டைக்கருப்பரும் கோட்டையின் நடுப்பகுதியில் செண்பக விநாயகரும் காட்சி தருவது கண்கூடு. ஆதியில் விநாயகர் மட்டும் உள்ள திருக்கோயில் அம்மை அப்பனுடன் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலாக பரிணமித்தது.

கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் அம்பிகைக்கும், அவ்வாறே; உள்பிரகாரம் திருமாளிகை பத்தி, கிழக்கு தெற்கு குடவரை வாயில்கள், திருமதில், வெளிப்பிரகாரம், திருக்குளம், பரந்த நிலப்பரப்புடன் விளங்கும் – இத்திருக்கோயில் காரண ஆகம முறைப்படி பூஜை செய்யப்படும் முழுமையான திருக்கோயில். சுற்றிலும் மா, மகிலம், தென்னை, புளி, வேம்பு என தீமை செய்யா உயர்த்தொகுதி செழிக்கிறது.

வடக்கே குருநாதர் கோயில் 1903ம் ஆண்டு தொடங்கிய திருப்பணியில் கோயில் ஈசானிய மூலையில் தோண்டும் போது திருநீற்றுச் செம்புடனும் அஸ்தியும் தோன்ற அருவருப்புடன் நோக்கிய அடியார்களுக்கு வெள்ளாடைத்துறவியாக காட்சி தந்த திருவுருதான் குருநாதன். அருள் வெளிப்பட்ட நிலையில் திரும்பவும் ஸ்தாபனம் செய்து பூஜை செய்யப்பட்டு வருகிறது. அருளால் தோன்றிய பிறகு என்ன குறை?

கருவறை, அர்த்த மண்டபம், வெளிச்சுவர்களில் வானதிராயர், பல்லவராயர்கள், கல்லெழுத்துக்கள் உள்ளன. அம்மன் மண்டபம் பிற்கால திருப்பணிகள்! நாச்சியாபுரம், முத்தையா செட்டியார், வைரவன்செட்டியார், மற்றும் இப்பகுதி காரணக்காரர்கள், பொதுமக்களால் திருப்பணி செய்யப்பட்டு உபயவிசேஷவழிபாடுகள் செய்யப்பட்டும் வருகின்றன. நித்திய பூஜைகளுடன் நவராத்திரி விழா சிறப்பாக நாச்சியார்புரம் நகரத்திற்க்கு சென்று அங்குள்ள சுவாமிகளுடன் சேர்ந்து கம்பனூர் மீனாட்சி சுந்தரேஸ்வரர் புரவி ஏறிச் சென்று அம்பு போடுதல் விசேஷமானது. இத்திருக்கோயிலுக்கு கிழக்கே இளைய நாச்சியம்மன் என்ற கிராம தேவதை திருகோயில் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு மன்னர் மானிபங்கள் விடப்பட்டும் உத்ஸவவிக்கிரகங்கள் மன்னர்களால் செய்யப்பட்டும் நித்திய பூஜைகள் விழாக்கள் நடைபெறுகின்றன. மது எடுப்புவிழா சிறப்பாக நடைபெறுகிறது. பெரியகோவில் கும்பாபிஷேக நாள் 5.11.1995.

கம்பனூர் கிராமம் மதுரையை ஆண்ட விஜயரெங்கநாத நாயக்கரால் மகாஜனங்களுக்கு இனாம் கிராமமாக வழங்கிய செய்தி 19.11.1863ம் ஆண்டு இனாம் பைசலில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சிற்றுறாக அனைத்து வளமும்கொண்டு திகழும் இத்திருக்கோயில் அமைதியும் ஆனந்தமும் பெற்று வழிபாட்டுக்கு சிறந்த சாதனம்மாகிறது.

இவ்வூரில் தலைமை அம்பலமாக இருப்பவர் நகரத்தார் வகுப்பைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அனைத்து தரப்பினரும் வேறுபாடு இன்றி வழிபாடு செய்வது இப்பகுதி மக்களின் உள்ளார்ந்த அறிவையும், செறிவையும் புலப்படுத்துகின்றன.

மூர்த்தியாகி தலமாகி முந்நீர்கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத் திறத்திணாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாலும் அறியாமையகற்றி அறிவிப்பானெவன்அப்
போர்ந்த கணபதியைப் புகழ்ந்து சரண மடைகின்றோம்.



<u>30. ஒழுகுமங்கலம்: அருள்மிகு திருமேனி நாதர் சுவாமி திருக்கோயில்</u>

நெற்குப்பை பொன்னமராவதி நெடுஞ்சாலையின் மேற்கே நெற்குப்பையிலிருந்து 6.கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

புராதனமான செம்புரான்கள் திருப்பணி. சுற்றிலும் வயல்வெளிகள்! கிராமத்தின் தென்மேற்கே உள்ளது. சுவாமி திருமேனிநாதர் அம்பாள் சௌந்தர நாயகி – இத்தலத்தில் பைரவர் சன்னதி தெற்கு நோக்கியுள்ளது. மிக விசேஷமானது. இதன் உபகோயிலாக திகழும் அருள்மிகு வடக்கு வாசல் செல்வி அம்மனுக்கு கிராம மக்களால் விழா எடுக்கப்படுகிறது.

உபகோயில்கள் (ஆ.தெக்கூருக்கு வடக்கே 0.5 கி.மீட்டர் அருள்மிகு சர்வலோக நாயகி சமேத சர்வலோகநாதர் திருக்கோயிலும், வஞ்சினிப்பட்டி கிராமத்தில் அருள்மிகு திருமஞ்சனம் உடையவள் சமேத திருமஞ்சன முடையார் திருக்கோயிலும் உள்ளன.

மேற்கண்ட திருக்கோயில்களுக்கு படித்தரம், சம்பளம் வழங்கப்பட்டும் சிப்பந்திகளுக்கும் மிராசாக மானிய நிலங்களும் விடப்பட்டுள்ளன. நித்திய பூஜைகள் நடைபெறுகின்றன.

31. துவார் : அருள்மிகு வள்ளிநாயக சுவாமி திருக்கோயில்

புதுக்கோட்டை மாவட்டம்–பொன்னமராவதி நகரிலிருந்து தென்கிழக்கே பரியாமருதுபட்டி– செவ்வூர் வழித்தடத்தில் 6 கி.மீ தொலைவில் உள்ளது. கண்மாய்க்கரையில் உள்ள பிரம்மாண்டமான ஐயனார் திருக்கோயில். கோயில் முன்புறம் அரச மரத்தடியில் விநாயகர். ராஜகோபுரத்தை கடந்து சென்றால் நீள் சதுர வரவேற்பு மண்டபம் பலிபீடம், யானை, துவார பாலகர்கள், அர்த்தமண்டபம், விநாயகர் கருவறையில் ஐயன் பூரணா புஷ்கலா சமேத வள்ளி நாயகமாக காட்சி தருகிறார். மூலவர் மூன்று ஸ்தானுவாக காட்சி தருகிறார். பக்தர்கள் இத்திருமேனி வடிவு துலக்கப்படாது ஸ்தானுவாக "சுயம்புவாக" உள்ளதால் வள்ளிலிங்கம் என்றே வழக்கில் வழிபட்டு வருகிறார்கள்.

அர்த்த மண்டபத்தின் தெற்கே பிரகாரத்தில் வடக்கு நோக்கி அன்னை பத்ரகாளி மிகக் கொடுமையான தோற்றத்துடன் விளங்குகிறார். பிரகாரத்தின் மேற்கே மகாகாளர்கள் அரிவாள் ஆயுத சகிதம் அணிவகுத்து நிற்பதையும் ஆஞ்சனேயர் இதர பரிவாரங்கள் உள்ளதையும் காணலாம்.

மேற்கு பிரகாரத்தின் தெற்கு நோக்கி சுதை குதிரைகள் முன் நிற்க ஸ்ரீ முத்துக்கருப்பர் முறுக்கிய மீசையும் ஆயுத பாணியாக உயிர் அச்சம் தவிர்க்கும் கருணை பார்வையும், வேகமும்–வீச்சுமாக நிற்கிறார். வரப்பிரசாதி – இவருக்கு கிழக்கே தனித்தளியில் ராஜா, ராணி, இளவரசர் சேனாதிபதிகள் இருக்கிறார்கள் இவர்கள் ஸ்ரீ முத்துக்கருப்பரை தரிசம் செய்ய துவாரம் உண்டு. அரச குடும்பத்தினர் அருள் செய்யும் இவ்வாலயம் அற்புதமானது. கோயில் பூசாரிகளில் ஒருவருக்கு ராஜதெய்வம் அருள்வந்து சிம்மாசனத்திலிருந்து செய்தி சொல்வது வழக்கம்.

இதன் கிழக்கே வடக்கு நோக்கி அன்னை அடைக்கம்மை சிறு குழந்தையை இடுப்பில் இடுக்கி கொண்டு நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். இதன் வரலாறு. இப்பகுதிக்கு நடந்து வந்த வணிகமாது கைகுழந்தையுடன் வரும்போது அடக்கமாகி இத்தெய்வத்துடன் ஐக்கியமாகி உள்ளார். தெய்வ நிலையுடன் காட்சி தந்த அம்மை தன் அடியார்களுக்கு சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு தருகிறார் என்பது கண்டுவரும் உண்மை. அவள் வழிவந்த நகரத்தார்கள் அம்மையை தம்முறைப்படி அடைக்கம்மை அப்பத்தாள் என்றும், அடைக்கம்மை ஆத்தாள் என்றும், அடைக்கம்மை ஆயாள் என்றும், முறை வைத்து குலதெய்வமாக வழிபட்டு வருகிறார்கள். அவளுக்கு பொங்கல், படைப்பு முதலான சிறப்பு வழிபாடுகள் செய்து சிறப்படைகிறார்கள் இதன் எதிரே மதுரை வீரன் வன்னி ஐயனார் தேவிகளுடன் காட்சி தருகிறார்.

இத்திருக்கோயிலுக்கு குலாலர்கள் பூஜை செய்து வருகின்றனர். மன்னர் மானிபம் படித்தரம், பணியாளர் மானியங்கள் விடப்பட்டுள்ளன. கோயில் முன்புறம் படித்துறையுடன் கூடிய தெப்பக்குளம், தென்புறம்

படித்துறையுடன் கூடிய தெப்பக்குளம், நந்தவனம் மற்றும் திருக்கோயிலுக்கு நஞ்சை, புஞ்சைகள், பண்ணை நிலம் உள்ளன. துவாரகாபுரி என்று அழைக்கப்பட்ட இத்துவார்கிராமத்து திருக்கோயிலின் வடபுறம். கண்மாயில் மிகபழமையான சிவன்கோவில் உள்ளது. சுவாமி கைலாச நாதர்–இறைவி சௌந்தர்நாயகி என்ற அகிலாண்டேஸ்வரியும் உடனுறையும் சிவாலயம்! திருக்கோயில் சிறிய மண்டபம் கல் திருப்பணி. பெருமாள் உள்பட சிலாவிக்கிரகங்கள் நிறைந்த திருக்கோயில்! வெளிப்பிரகாரம், நந்தவனம், திருக்குளம் சகிதம் ஆழ்ந்த அமைதி புன்னகையுடன் விளங்குகிறது. திருப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஊரின் நடுவில் இதன் உபகோயிலாக செம்புரான்கல் திருப்பணிகளுடன் விநாயகர் கோவில் உள்ளது.

துவார் அருள்மிகு வள்ளிநாயக சுவாமிக்கு கிழக்கு நோக்கிய ஐந்து நிலை இராஜகோபுரம் புதியதாக கட்டப்பட்டும் புதிய வசதிகள் செய்தும் 26.1.1996ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. நித்திய பூஜை ஆடி வெள்ளிகளில் பொங்கல் படைப்புகள் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெருகின்றன.

32. வேலங்குடி:அருள்மிகு மரகதவள்ளி சமேத ருத்ரபதி நாயனார் திருக்கோயில்

திருப்பத்தூர் வட்டம் கண்டவராயன் பட்டியிலிருந்து 6கி.மீட்டர் தொலைவு–பழமையானதும், 10ம் நூற்றாண்டு கல்வெட்டுகள் பதிக்கப்பெற்றதும், கருவறை, அர்த்தமண்டம், மகாமண்டபம் முதலியன கல்திருப்பணி. ஜீரணமான நிலையில் உள்ளது. கணபதி, கந்தர்களுக்கு தனிக்கோட்டங்களும் நந்தி தேவர்மண்டபமும் உள்ளது.

கோயில் முன்புறம் புராதனமான வேலங்குடி கருப்பரின் பூர்வீக இருப்பிடம் உள்ளது. கோயிலுக்கு வடக்கே 0.5 கி.மீட்டர் தொலைவில் வேலங்குடி கருப்பருக்கு கல்காரமான திருப்பணியுடன் திருக்கோயில் உள்ளது. வலிமையுடையதும். பல்லோராலும் குலதெய்வமாக கொண்டாடப்பெறும் வேலங்குடி கருப்பர் மகிமை அளவிடமுடியாதது.

திருக்கோயிலுக்கும் உபகோயில்களுக்கும் இராஜமானிபங்கள் விடப்பட்டுள்ளன.

33. அருள்மிகு அலங்காரம் கண்ட பெருமாள் திருக்கோயில்

அருள்மிகு ருத்திரபதி நாயனார் திருக்கோயிலுக்கு தென்மேற்கே 1கி.மீட்டர் தொலைவில் உபய நாச்சியார்களுடன் அருள்மிகு அலங்கார கண்ட பெருமாள் பெரியதிருவடி சகிதம் வீற்றிருக்கிறார்.

34. அருள்மிகு ஆவுடைய நாதர் ஆவுடைய நாயகி திருக்கோயில்- கண்டக்காட்டூர் (வையகளத்தூர்.)

செங்கல் சுதைக் கோயில் கிழக்கு நோக்கிய சன்னதி அன்னை தெற்கு நோக்கிய திருவுருவம். சம்பளம் படித்தரம் நித்திய பூஜைகள் நடைபெருகின்றன. கிராமத்தவர்கள் போற்றும் தெய்வமாக காட்சி தருகிறது.

35. சிங்கம்புணரி : அருள்மிகு சேவுகப்பெருமாள் ஐயனார் திருக்கோயில்

திருப்பத்தூர் – திண்டுக்கல் பேருந்து வழித்தடத்தில் உள்ள நகர் சிங்கம்புணரி.

திருக்குளங்களுக்கு மேற்கே ரதங்கள், குதிரைகளை தாங்கிய மகாபூதங்களின் காட்சிகளுடன் ராஜகோபுரத்தை வணங்கி உள்நுழைகிறோம். உட்பிரகாரம் கடந்து பிரவேசிக்க திரும்பவும் வலிமை மிகுந்த குதிரைகளை தாங்கிய மகாகணங்கள் – மேற்கு நோக்கி சூரியரும் சந்திரரும் காட்சி தருகிறார்கள்.

கம்பத்தடியை சரணாகதி செய்து உட்சென்றால் மூன்று சன்னிதிகள் – தனித்தனி கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், தென்புறம் அருள்மிகு அடைக்கலம் காத்தார் சன்னதி வடபுறம் அருள்மிகு சுயம்பிராகேஸ்வரர் சன்னதி. அருவுருவத்திருமேனியாக மூன்று வடிவிலும் உள்ளன.

நடுவே அய்யன் பூரணா புஷ்கலா சமேதனாய் சேவுகப்பெருமாளாக வீற்றிருந்து அருளுகிறார். எதிரே வடக்கு நோக்கிய கருப்பர் சன்னதி ஏகாந்தமாக ஆயுத பாணியாக உள்ளார்.

அர்த்தமண்டபம் வாயில்களுக்கு தெற்கே கொடிமரத்துடன் அன்னை சிங்கம்பிடாரி எட்டுக்கரத்துடன் சிம்ம வாகனம் எதிர் நிற்க மெய்சிலிர்க்க செய்யும் கம்பீர வடிவம்.

பிரகாரத்தின் கன்னிமூல விநாயகரும், அதன் வலது முன்புறமாக திருகல்யாண அலங்கார மண்டபமும், வடமேற்கில் தனிக்கோட்டமாக வள்ளி தேவசேனை சமேத சுப்பிரமணியரும், அதனை அடுத்து தெற்கு நோக்கி கரையகருப்பர், சப்தமாதர்கள், சங்கிலி கருப்பரும், உள்ளனர். அருள்மிகு சுயம்பிராகேஸ்வரர் சன்னதி கோமுகி அருகே சண்டேஸ்வரர் வீற்றிருக்கிறார்.

ஈசான்ய மூலையில் யாகமண்டபமும் நவகிரகங்களும் உள்ளன. கம்பத்தடி மண்டபத்தில் கோயில் அம்பலம், மணியம் கோயில் முக்கியஸ்தர்கள் தம்பதி சமேதராக தூண்களில் சிலா வடிவில் நின்று தாங்கள் பெற்ற நலன்களை பறை சாற்றுகிறார்கள்.

சுவாமிக்கு பின்புறம் பழைய திருவுருவம் உள்ளது. இக்கோயில் அதிகசக்தி பெற்றது. குலதெய்வமாகவும் வழிபடு தெய்வமாகவும் விளங்குகிறது. மணிமேகலை காப்பியத்தில் கண்ணகிக்கு அறிவுரை வழங்கும் தோழி. நல்ல கணவருடன் வாழ சாஸ்தாவை வணங்க அறிவுறுத்துதல் கண்கூடு. ஐயன் அருட்சக்தி வேண்டதக்கது

இத்திருத்தலம் மகாசாஸ்தாவின் திருக்கோயிலாக விளங்கினாலும் லிங்கவடிவில் ஸ்தானுவாக விளங்கும் சுயம்பிராகேஸ்வரர் திருமேனியை சதாசிவ திருமேனியாக இத்தலத்துவாழ் சிவநெறி குலாலப்பெருமக்கள் போற்றுகின்றனர். மேலும் தங்களையும் சிவாச்சாரியார்கள் எனவே பாவிக்கிறார்கள்.

திருநாவுக்கரசர் பெருமான் திருவையாற்றை அடையும் காட்சி மனம் முன் நிற்கிறது. அருள்மிகு அறம்வளர்த்த நாயகி உடனுறை

செம்பொற்சோதி – எம்மானை காணும் நிலையை அப்பர் பெருமான்.–
"மாதர் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந் தேத்தி புகுவார் அவர் பின்புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியா தன கண்டேன்"

"கோழி பெடையொடுங்கூடி குளிர்ந்து வருவன கண்டேன்
வரிக்குயில் பேடையோடாடி வைகீ வருவன கண்டேன்–
சிறையிளம் பேடையோடாடி சேவல் வருவன கண்டேன்–
பேடை மயிலோடுங்கூடி பிணைந்து வருவன கண்டேன்–
வண்ணப் பகன்றிலொடாடி வைகீ வருவன கண்டேன்–
இடிகுரவன்ன தோரேன மிசைந்து வருவன கண்டேன்–
கருங்கலை பேடையோடாடி கலந்து வருவன கண்டேன்–
நற்றுணை பேடையோடாடி நாரை வருவன கண்டேன்–
பைங்கிளி பேடையோடாடி பறந்து வருவன கண்டேன்–
இளமன நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்"

தான் கண்ட திருக்காட்சியை–உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவனை–கண்டார்.

அவ்வாறே பாண்டிய மாமன்னனும் மதுரையிலிருந்து நீங்கி இத்தலத்திற்கு வரும் போது கானகமாக இருந்த இப்பகுதியில் அவன் கண்ணும் இரண்டு சிங்கங்கள் ஆணும் பெண்ணுமாக இருந்த நிலையைக்கண்டான். பரவசமான. அம்மன்னனுக்கு அத்தகு உருவில் அருள் செய்த ஜோதிவடிவில், இத்திருத்தலம் சிங்கம்புணரி என்று அழைக்கப்பட்டது. என்பது மரபு! வழிசெய்தி! சிம்ம வாகினியான பரமேஸ்வரி கோயில் கொண்ட தலம் என்பதால் சிங்கம்பிடாரி எனவும் அழைக்கப்பட்டது.

கோயில்மாடுகள் "மிக பிரசித்தி" பெற்றது. நாட்டுமக்களுக்கு செல்லப்பிள்ளைகள் போல! சிந்து சமவெளி நாகரீக பெருங்காளைகளைப்போல நீண்ட கொம்புகளும் திரண்ட உருவமும் தொங்கும் கழுத்து அமைப்பும் – இவை சிங்கம்புணரி காளைகள் என்பதை சொல்லாமலேயே விளங்கும்.

இத்திருக்கோயிலுக்கு நித்திய பூஜைகளுடன் ஆட்ட விஷேசங்களும் வைகாசி மாதத்தில் பிரம்மோற்ஸவமும் நடைபெறும். விநாயகர், பூரணை புஷ்கலை சமேத சேவுகப்பெருமாள் ஐயனார், சிங்கம்பிடாரி, உத்ஸவ திருமேனிகள் கோலாகலமாக திருவீதி பவனி காட்டியும் திருத்தேர் புஷ்ப பல்லக்கு பவனி, பரவசம் ஊட்டுவன. அவசியம் தெரிசிக்கப்பெற வேண்டியது. இத்தலம் சமய பேதம் கடந்தது. மகாகும்பாபிஷேசம் 3.6.2001 ல் மிக சிறப்பாக நடைபெற்றது.

இத்தலத்தில் வாத்தியார் சாமிகள் என்று அழைக்கப்படும். சித்தர்பெருமான் திருக்கோயில் சிறப்புற்று விளங்குகிறது.

36. சிவபுரி : அருள்மிகு சுயம்பிரதீஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் : சிங்கம்புணரியிலிருந்து கிழக்கே 2 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

இறைவன்: அருள்மிகு சுயம்பிரதீஸ்வரர் என்ற சுயம்பிராகேஸ்வரர்.

இறைவி: அருள்மிகு தர்மசம்வர்த்தினி அம்பாள்

அமைப்பு : தமிழகப்பெருங்கோயில்களை போன்ற அமைப்பு

வெளி நந்தி மண்டபம், வெளிப்பிரகாரம், உள்பிரகாரம், திருஉண்ணழி பிரகாரம், கோஷ்டதேவதைகள், சப்த மாதர்கள் உள்பட மகா ஆகிரிதியுடனும், ஆயமும் கூடியவை. அன்னை கிழக்கு நோக்கி தனி கோட்டத்தில் சுவாமி திருக்கோயிலுக்கு வடபுறம் தனிக்கோயிலாக திகழ்கிறார். இத்தலத்தில் அம்மனுக்கு அருகே முனீஸ்வரரும் கோயில் கொண்டுள்ளார். இத்திருக்கோயில் திருப்பத்தூர் திருத்தளியை நினைவுக்கு கொண்டுவருகிறது.

கல்லெழுத்து :

இத்திருக்கோயில் கல்வெட்டுகள் ஆய்வுக்கு உட்பட்டவை. முதலாம் குலோத்துங்கன் சுந்தரபாண்டிய வல்லாளதேவன் கண்டியன் காலத்து கல்எழுத்துக்கள் நிறைந்துள்ளன. புரி என்ற விடுதி சேர்ந்த இப்பகுதி பெருநகரமாகவும் பெரிய வீதிகளை உடையனவாகவும் திகழ்ந்திருக்கின்றன. "நடுவாகர் கொண்ட அரிவையூர்" என் கல்லெழுத்துக்களால் வர்ணிக்கப்படும், சிவபுரி பிரமிக்கதக்கது. தற்போது ஜீர்னோதாரன திருப்பணிகள் செய்யப்பட்டு 5–9–2003 மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. ஒரு காலத்தில் ஆட்ட விசேஷங்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இத்திருக்கோயிலுக்கு நிவர்த்தங்களும் பணியாளர் மானியங்கள் இத்திருக்கோயில் பண்ணை நிலங்களும் உள்ளன.

நித்திய பூஜைகள் நடைபெற்று வரும் இத்திருக்கோயில் அறிஞர் விரும்பும் அருட்கோயிலாகும்.

37. கரிசல்பட்டு: அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்

அமைவிடம்: திருப்பத்தூர் வட்டம் திருப்பத்தூரிலிருந்து 40 கி.மீட்டர்

அமைப்பு: கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், பிரகாரம், இராஜகோபுரங்கள்

இறைவன்: அருள்மிகு கைலாசநாதர் லிங்கத்திருமேனி

இறைவி: அருள்மிகு கமலாம்பாள்

காலம்: பாண்டியர் காலம்

நித்திய பூஜைகள் மட்டும் நடைபெறுகின்றன. குருக்கள், வைராவி, பணியாளர்களுக்கு மானிய நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. மகாகும்பாபிஷேக நாள் 1–6–2006.

38. கண்டரமாணிக்கம் : அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில்

திருப்பத்தூரிலிருந்து தெற்கே 6கி.மீட்டர் தொலைவிலும் திருக்கோட்டியூரிலிருந்து 7கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

இறைவன் : அருள்மிகு கைலாச நாதர்

இறைவி : அருள்தரு ஏலவார்குழலி என்ற பெரியநாயகி அம்பாள்

அருள்மிகு அழகிய கண்ட விநாயகர் திருக்கோயில்.

கண்டரமாணிக்கம் கிராமத்தின் பெருஞ்சாலையில் அருள்மிகு மாணிக்க நாச்சியம்மன் திருக்கோயிலுக்கும் பிள்ளையார்குண்டு என வழங்கப்படும் விநாயகர் கோயில் திருக்குளத்திற்கும் நடுவே கிழக்கு நோக்கி வீற்றிருக்கும் கற்றளி, உள்பிரகாரமும் கிழக்கே திறந்த வெளியும் கொண்டது. நித்திய பூஜைகள் நடைபெறுகின்றன. விநாயகர் சதுர்த்தி விழா சிறப்பாக நடைபெறுகின்றன.

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் ஊரின் மத்தியில் உள்ளது. கிழக்கு மற்றும் தெற்கு நோக்கிய திருவாயில்களுடன் கற்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் தனித்தனிக்கோட்டங்களுடன் பிரகாரம் கொண்ட கற்றளி. நித்திய பூஜைகளும் ஆட்ட விஷேசங்களும் நடைபெறுகின்றன. நாட்டார் நகரத்தார் பங்கு கொண்டு விழாக்கள் கட்டளைகள் சிறப்பாக நடைபெருகின்றன. நவராத்திரிவிழா, ஆருத்ரா தரிசனம் விழா சிறப்பாக நடைபெறுகிறது. கும்பாபிஷேக நாள்:9.7.1992, 13-7-2005

39. பெருச்சி கோயில் : அருள்மிகு ஆண்ட பிள்ளைநாயனார் திருக்கோயில்

கண்டரமாணிக்கம் கிராமத்திலிருந்து தெற்கே 2கி.மீட்டர் சாலை வழியில் உள்ளது.

இறைவன்: அருள்மிகு சுகந்தவனேஸ்வரர்

இறைவி: அருள்மிகு சமீப வல்லி

அமைப்பு கிழக்கு நோக்கிய குடவரைவாயிலுடன் வன்னி விநாயகர், கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், பிரகாரம் விநாயகர்-முருகன்-சண்டேஸ்வர் தனித்தனி மண்டபங்கள்.

முக்கிய மூர்த்தி இத்திருத்தலத்தில் மிக உன்னதமான மூர்த்தியாகிய ஆண்டப்பிள்ளை என்று அழைக்கப்பட்ட காலபைரவ மூர்த்தி விஷேசமானது.

மேற்கு நோக்கிய கருவறை அர்த்த மண்டபம் மகாமண்டபத்துடன் கோயில் கொண்டுள்ள பைரவமூர்த்தி நவபாசனத்தால் உருவாக்கப்பட்டது. முன்னும் பின்னும் காணத்தக்க வகையில் அந்தர வேலைபாடு உள்ளது.

அர்த்த மண்டபத்தில் அமைக்கப்பட்ட பைரவ சிலை உருவத்தில் சற்று பெரியதாக அதே வேலைபாடுகளுடனும் பைரவரின் இடது திருக்கரத்தில் குடிமியைபிடித்துள்ள பிரம்ம கபாலம் அதில் வடியும்

குருதியை சுவைக்கும் ஞமலி நாய்–சிற்ப அழகு கொழிக்கும் தெய்வப்படிமம் கலை உணர்வுடன் சுவைத்து இன்புறத்தக்கது. இத்திருக்கோயிலும் இதன் சுற்றுக்கிராமங்களிலும் உள்ள திருக்கோயில்கள் கி.பி.6–7 நூற்றாண்டு காபாலிக சைவம் பரவிய காலம். திருக்கோட்டியூர் அடுத்த திருமெய்ஞான பைரவர், திருப்பத்தூர் யோக பைரவர், பிள்ளையார்பட்டியை அடுத்த பைரவன்பட்டி முதலான திருத்தலங்களிலும் காபாலிக சைவப் பிரிவு இப்பகுதியில் உயர்ந்திருந்த நிலைகானப்படும்.

இத்திருத்தலத்தில் ஒற்றை சனீஸ்வரர் தனித்த நிலையில் வழிபடப்படுகிறார். கால தோஷங்கள், சனிக்கிரகத்தால் ஏற்படும் தோஷங்கள் மரணபயங்கள் இத்திருத்தலத்தில் நிவர்த்தியாகின்றன. கும்பாபிஷேகம் நாள்: **26.6.1996.**

ஸ்தல மரம் : வன்னி

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முறைப்படியும் இங்கு ஆண்டபிள்ளை, நாயனார், சுகந்தவனம்–சேங்கை, ஆகியவற்றுடனும் திருநந்தவனம் உள்ளடங்கியும் மகாகாளர் காவலுடன் விளங்குகிறது.

திருத்தலத்தின் உலோக உத்ஸவ விக்கிரகங்கள் உள்ளன. கான்போர் வியக்கும் வண்ணம் 13ம் நூற்றாண்டு ஆடல் வல்லான், எண்கர மகாபைரவர், அம்பிகை ஆகியோரின் திருவுருவங்கள் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரின் அருங்காட்சியகத்தில் உள்ளன.

தொன்மை கி.பி.6ம் நூற்றாண்டு கலை நுணுக்கத்துடன் வட்டெழுத்துக்களுடனும் மாண்பு பெறும் இக்கலைக்கோயில் பாண்டியன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் நிவந்தங்கள் வழங்கிய செய்திகளையும் பறை சாற்றுகின்றன.

வன்னி சமித்துகளால் ஆயுஸ் ஹோமம் செய்வது கால பயத்தை நீக்குகிறது. இத்தலத்தில் வன்னி பத்திரத்தால் அர்ச்சனையும் அன்னைக்கு ஸ்கஸ்த்திர நாம அர்ச்சனையும் செய்வது மிகுந்த விஷேசத்தை உடையது.

வன்னிமரமும், மடைப்பள்ளியும் சிவலிங்கமும் பாண்டியன் அவையில் சான்று நல்கிய திருவிளையாடல் இத்திருத்தலத்தில் நடந்ததும் கர்ணபரம்பரை செய்தி கூறும். இத்திருத்தலம் பெருச்சியூர் எனவும் அழைக்கப்பட்டு திருவிழாக்கள் நடைபெற்றும், சில நூற்றாண்டு காலமாக திருவிழாக்கள் நின்றுவுள்ளது. தற்போது மேதகு ராணி டி.எஸ்.கே.மதுராந்தகி நாச்சியார் ஆட்சி காலத்தில் கொடிமரம் நிறுவி மீண்டும் திருவிழா ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளாக மார்கழி திருவிழா சுவாமி பவனி நடைபெறுகிறது. வசந்தம் பெற அனைவரும் தெரிசிக்க வேண்டிய திருத்தலம்.

40. பட்டமங்கலம் : அருள்மிகு மதியாதகண்ட விநாயகர் அழகுசௌந்தரி அம்மன் திருக்கோயில்

இருப்பிடம் : திருப்பத்தூர் வட்டம் – திருப்பத்தூரிலிருந்து தெற்கே 5 கி.மீட்டர் திருக்கோட்டியூரிலிருந்து கிழக்கே 5.கி.மீட்டர் தொலைவில் பேருந்து வழித்தடம்.

அமைப்பு :பட்டமங்கலம் ஊரின் நடுநாயகமாக அருள்மிகு மதியாத கண்ட விநாயகர் திருக்கோயில்.

கருவறை அர்த்தமண்டபம், மகாமண்டபம் கம்பீரமாகவும் மதில்சுவரின் பிரகாரமும், ஈசான்ய மூலையில் கருவூலறையும் சேதுராயர் சிலாவிக்கிரகம் அமைந்துள்ளது. முன்மண்டபக்கொட்டகை வெளிப்புறம் கிழக்கு நோக்கி வடக்கு தெற்குகளில் இரு தின்னைகளும் கூடியது மூர்த்தி மிக சிறியவர் கீர்த்தி மிக்கவர் மகாமண்டப விநாயகர் பெரிய திருவுருடையவர் அனுக்கை விநாயகர், தண்டபாணி மற்றும் மற்றும் தேர்த்தளம் மண்டபத்தில் தேரடி விநாயகர் உள்ளனர் முன்புறம் இராஜகோபுரம் இனி எழுப்பட வேண்டும். இவ்விநாயகர் மதுரை பாண்டியன் கோட்டையிலிருந்து கொண்டுவரப்பட்டு கீழக்கோட்டை என்னும் கிராமத்தில் வைத்திருந்து பிறகு பிரதிஷ்டை செய்யபப்பட்டவர். மதி(சந்திரன்) ஆதவன்(சூரியன்) கண்டு வழிபடப்பட்ட விநாயகர். கோயில் தென்புறம் திருக்குளம், தென்னந்தோப்பு முன்புற நந்தவனம் உள்ளது.

41. அருள்மிகு அழகுசௌந்தரி அம்மன் திருக்கோயில்

அருள்மிகு மதியாத கண்ட விநாயர் திருக்கோயிலுக்கு தென்புறம் 500 மீட்டர் தொலைவில் மணிமுத்து நதியின் தென்கரையில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் பிரகாரம் மதில்சுவர்களுடன் கூடிய திருக்கோயில். கோயில் முன்புறம் அம்மன்குளம் என்ற தீர்த்தகுளம் உள்ளது.

அன்னை அழகு சௌந்தரி கதிர்மகுடம், மதிமுகம், நாற்கரங்களில் வலது மேற்கரத்தில் உடுக்கையும் வலது கீழ்க்கரம் திரிசூலமும், மேற்கரம் பாசமும், இடது கீழ்க்கரம் பான பாத்திரம் கொண்டு வலது திருவடி சம்மன நிலையிலும், இடது திருவடி அசுரனை அடக்கியும் காட்சி தரும் அருட்கோலம்.

எதிரே அஸ்திர தேவர் வேதாளம் பலி பீடம் உள்ளது. மேற்கு பிரகாரத்தில் முன்புறம் விநாயகரும் ஈசான்ய மூலையில் யாகமண்டபமும் மேற்கு நோக்கிய பைரவரும் உள்ளனர்கள் பிரகாரம் கீழ்ப்பகுதியில் ஸ்தல விருட்சமான நாவல் மரத்தில் "நவயடிக்காளி அட்டதிருக்கரங்களுடன் வடக்கு நோக்கி காட்சி தருகிறார். இருபுறமும் மூலஸ்தான பழைய திருவுருவங்கள் உள்ளன. கன்னிமூலைகணபதியும், கோயில் ராஜகோபுரம் முன்புறம் நந்திமண்டபத்தில் நந்தியும், கோயில் வெளிபிரகாரச் சுற்றில் பெரியகருப்பர், சின்னக்கருப்பர், ஸ்துலலிங்க பீடம் வடிவில் உள்ளனர். கோயிலின் மேற்கு புறம் கார்த்திகை மாதர்கள் அம்பா, துலா, நிதர்த்தனி அப்ரகேந்தி, மேகேந்தி, வர்ஷயேந்தி, என்ற மாதர்கள் வடக்கு நோக்கியிருக்கிறார்கள்.

42. பட்டமங்கலம் அருள்மிகு அஷ்டமாசித்தி ஆலமர் செல்வனின் அருட்கோயில்

கிழக்கு நோக்கிய திருவுருவம். ஸ்தல விருட்சமான ஆலமரம் பரந்தும் விரிந்தும் வானோங்கியும் வளர்ந்துள்ளது. கர்ப்பகிரகம் பிரகாரம் ஆகியவற்றுடனும் எதிர்புறம் திருநந்தவனமும் உள்ளது.

இதன் வடக்கே அஷ்டமாசித்தி சுப்பிரமணியர் என்ற தாயுமானவர் திருக்கோயிலும் அதன் வடக்கே ஏர்அழிஞ்சி மரத்தின் அடியில் ஏகதளவிமானத்துடன் கூடிய கல்கார மண்டபத்தில் யோகநிலையில் இரு கரங்களுடன் அடைக்கலம் காத்த ஐயனார் என்ற திருநாமத்துடன் பூதகணங்கள் காவல்புரிய தவக்கோலத்தில் காட்சிதரும் கதம்பவனரிஷி பரிகார தெய்வங்களான பேச்சி, பெரிய கருப்பர், சப்தமாதர்கள், சின்னக்கருப்பர் பண்டாரத்தார், சேது சமஸ்தான மந்திரியும் பட்டமங்கலம் நாட்டு, கோயில்கணக்குமான சேதுராயர் சிலாவடிவில் உள்ளனர். கோயில் வடபுறம் அரசமரத்தடியில் கற்பக சிந்தாமணி விநாயகர் காட்சி தருகிறார்.

கோயில்களுக்கு தென்புறம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் காரண ஆகமப்படி பூஜை நடைபெறும் நிலையில் சிவலெட்சனங்களுடன் பூர்வீகமாக இருந்த பூர்வலிங்கம், அம்பாள் நந்தி பலிபீடம் ஆகியவற்றுடன் உள்ளது. இங்கு கற்ப கிருக வாயிலில் ஸ்ரீ சக்கரம் அமைக்கப்பட்டிருக்கிது. மூலவர் இராமேஸ்வரர் திருக்கோயிலிருந்து வரப்பெற்றவர் அன்னை மீனாட்சி சாந்தம் தவழும் திருத்தோற்றம். இதன் தெற்கே பூர்வீகமான சாபம்போக்கும் அஷ்டமாசித்தி பொய்கை அதன் கிழக்கே காவல் தெய்வம் சமயகருப்பர் பரிவாரங்களுடன் நாட்டு பூவரசு நிழலில் காட்சி தரும் தோற்றம். கோவில் கிழக்கே திருவிளையாடல் தோட்டம் என்ற பரந்தவெளியும் அருள்மிகு பதினெட்டாம்படி கருப்பர் என்ற தச்சர்கோவிலும் உள்ளது.

வரலாறு : இத்திருத்தலங்கள் உள்ள பகுதி பண்டைய காராளர் வாழ்ந்த பகுதியாகும் இத்திருத்தலத்தின் மேற்கே 1.கி.மீட்டர் தொலைவில் பண்ணைதிருத்தி கண்மாய் அருள்மிகு ருத்ரபதி நாயனார் திருக்கோயில் இருந்தது. பழமையான மக்களின் பகுதியாக தற்போது சுடுமண் உருவங்களும், மகாலிங்கம் நந்தியும் சன்டேஸ்வரரும் இதர சேதமடைந்த சிற்பங்களும் 9–ம் நூற்றாண்டு கல்லெழுத்துக்களும் காணப்படுகின்றன. தற்போது அருள்மிகு சேவுகப்பெருமாள் ஐயனார் கோயிலாக விளங்குகிறது. அருள்மிகு மதியாத கண்ட விநாயகர் திருக்கோயில் மன்னர் காலங்களில் கட்டப்பட்டது, சுதைகோயிலாக இருந்தது. பிற்காலத்தில் சிமிண்ட் காண்கீரிட் கட்டிடமாக தின்னைகளுடன் நகரத்தாரால் கட்டப்பட்டவை. அருள்மிகு அழகுசௌந்தரிஅம்பாள் திருக்கோயிலின் தற்போது உள்ள கட்டுமானம் தேவஸ்தான குத்தகை வருவாயிலிருந்து கண்டரமாணிக்கம் லெ.அழகுசுந்தரம் செட்டியார் அவர்களாலும் அஷ்டமாசித்தி திருக்கோயில்கள் கல்காரமாக தேவஸ்தான அனுமதியுடன் பட்டமங்கலம் அ.வீர.அடைக்கப்ப சுவாமிகளாலும் கட்டப்பட்டவை.

புராண வரலாறு:

இத்திருத்தலம் 64 திருவிளையாடல்களில் 33ம் திருவிளையாடல்கள் நடைபெற்ற திருத்தலம் முருகனை வளர்த்த காத்திகை மாதர்களான அம்பா, துலா, நிதர்தனி, அப்பிரகேந்தி, மேகேந்தி, வருஷகேந்தி, என்பவர்களுக்கு கிழக்கு நோக்கி மதுரை மீனாட்சி சுந்தரேஸ்சர் தெட்சிணாமூர்த்தி வடிவத்தில் அஸ்டமகா சித்திகளான அனிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராந்தி, பிராகாம்மியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற மகாசித்திகளை உபதேசம் செய்யப்பட்டது. முன்னொருகாலத்தில் கார்த்தியை மாதர்கள் திருகைலாயத்தில் உமாசகிதரான பரமேஸ்வரரிடம் தங்களுக்கு அஷ்டமா சித்திகளை உபதேசிக்க வேண்டினர். சுவாமி அவர்களுக்கு அஷ்டமா சித்தி தேவையில்லை எனவும் இயற்கையாகவே அவர்கள் அஷ்டமா சித்திகள் அமையபெற்றவர்கள் எனவும் கூறினார். இருப்பினும் அவர்கள் தொடர்ந்து வேண்டவும் அன்னை உமாதேவி அவர்களுக்கு உபதேச முறையில் அருள பரிந்துரை செய்தார். அவ்வண்ணமே உபதேசம் அண்ணலால் அருளப்பட்டது. அப்போது கார்த்திகை பெண்கள் சிரத்தையில்லாதவர்களாக இருந்ததால் உடன் அஷ்டமா சித்தி ஆலமரத்தில் கற்பாறைகளாக ஆக கடவீர் எனவும் சாபம் செய்தார். ஆயிரம் ஆண்டுகள் கழித்து திரும்பவும் மதுரை சொக்கராக சுவாமி எழுந்தருளிய காலத்தில் பாறைகளாக இருந்த கார்த்திகை மாதர்களை எழுப்பி மீண்டும் அஷ்டமா சித்தி உபதேசித்தார். பக்குவம்மில்லாதவர்களுக்கு உபதேசம் செய்ய பரிந்துரை செய்த உமையவளை பட்டமங்கல திருத்தலத்தில் நாவல் மரத்தடியில் காளியாக தவம் செய்ய கட்டளையிட்டார் காவலாக நந்தி கேசனை அனுப்பி வைத்தார். மீண்டும் சாபம் போக்கி கார்த்திகை பெண்களுக்கு உபதேசம் செய்யும் போது நவயடிக்காளியை கோர உருவம்நிக்கி அழகுசௌந்தரியாக ஆட்கொண்டார்.

கடம்பவன புராணம்:

ஹிரண்யாசூரன் காலத்தில் பட்டமங்கலம் கதம்வன பகுதியில் கதம்ப மகரிஷி ஆசிரமம் அமைத்து தவசு செய்து வந்தார். ஒருநாள் ஹிரண்யாசூரன் பூதனை கொன்று ஆசிரமவாசலில் எறிந்தான். மகரிஷி ஹிரண்யாசூரன் இப்பகுதிக்கு வராமல் போக சபித்தார் சாபம் அறிந்த தேவர்குலங்கள் தேவதேவபிரான் மகாவிஷ்ணுவை சரணடைந்து இரண்ய வதம் செய்ய வேண்டினர். இரண்யன் வராத பகுதியான கதம்பஸ்தலத்தில் தேவர்கள் மூவர்கள் கூடி இரண்யனின் வரங்களை அனுசரித்து அவதாரம் எழவேண்டி விவாதித்தனர். கதம்ப மகரிஷியின் ஆசீர்வாதத்துடன் திருக்கோஷ்டியூரில் ஆலோசனை நடந்தது. கதம்ப மகரிஷிக்கு மகாவிஷ்னு காட்சி தந்தார். கதம்ப மகரிஷி ஆசிரமம் அமைத்த திருக்கோயில். ஆண்டு தோறும் நினைவு கொள்ளும் வகையில் பூதம் எடுப்பு விழா நடைபெறுகிறது.

இத்திருத்தலத்து அம்பிகை ஆதிபரம்பொருளின் திருவருளை ஒருங்கு திரண்டு அம்பிகையானது என்பர் அருளாளர்கள்.

"ஓதி இருள் மூரல் ஒளி உற்ற குழைவு ஆகம்
மோது முலை அற்ப இடை முற்றும் உன் நிதம்பம்
ஆதிபரன் இன்னருள் திரண்டு அருணம் ஆகும்
மாது! நின் மலர்ப் பதம் மனத்தெழுதி வைத்தேன்."
– சௌந்தர்யலகரி

திருத்தல நாயகி மதுரை மீனாட்சியாக நின்ற திருக்கோலத்திலும் தவவடிவில் காளிவடிவமாக நாவல்மரத்தடியிலும் சித்துவடிவத்தில் அணிமாதி சக்திகளால் சூழப்பெற்ற திருவருள் பிரகாசமாகவும் விளங்கி அருளுகிறார்.

"தேவி நின் இல்லம் சிவன் உறை அந்தப்புரம் ஆனால்
யாவர் உனைக் கண்டு எய்துவர் இமையோர் முதலானோர்
ஆவல் கொடு எயத்து உன் வாயிலின் அணிமாதிகளாலே
மேவிய சித்திப் பேரோடு மீள்வர் ஆனாரே." –சௌந்தரியலகரி

இறைவனும் இறைவியும் அருளாளர்களும், சித்தர்களும், முனிவர்களும் கூடித்திகழும் இத்திருக்கோயில்கள் மூர்த்தி, தலம் அஷ்டமூர்த்தி தீர்த்தம் முதலான சிறப்புக்களையும், குரு, லிங்கம் சங்கமம் என்ற சிறப்பினையயும் பெறுகிறது.

இத்திருத்தலத்திற்கு மானிபங்கள் அனைத்தும் சிவகங்கை மன்னர்களால் வழங்கப்பட்டுள்ளது. அஷ்டமாசித்தி தெட்சிணாமூர்த்தி அஷ்டமாசித்தி சுப்பிரமணியர், அருள்மிகு கதம்பரிஷியாம் அடைக்கலம் காத்த ஐயனார். அருள்மிகு மதியாத கண்டவிநாயகர் அழகு சௌந்தரி அம்பாள் திருக்கோவில்களுக்கும் இதர கிராம ஐயனார் திருக்கோயில்களுக்கும் பூஜை மானியங்கள் விடப்பட்டுள்ளன. பிள்ளையார் திருக்கோயிலின் வடக்கு ரதவீதியில் முனிஸ்வரர் எழுந்தருளியுள்ளார். ஆண்டில் இருமுறை ராஜதர்ப்பாருடன் சாமப் பூஜைகள் செய்யப்பட்டும் வருகிறது.

இத்திருத்தலங்களில் நித்திய வழிபாடுகளுடன் ஆட்டவிஷேசங்கள் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. நவராத்திரிவிழா சிறப்பாக நடைபெறுகிறது. பங்குனி உத்தரத்தில் திருத்தேர் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. மகாகும்பாபிஷேக நாள் 27–1–2005.

இத்திருத்தலம் ஸ்ரீ மாணிக்கவாசகர் சுவாமிகளால் திருவாசக்கீர்த்தித் திருஅகவலில்.


“பட்டமங்கையிற் பாங்காய் இருந்தங்(கு)
அட்டா மா சித்தி அருளிய அதுவும்” – எனவும்
திருவாசக போற்றித் திரு அகவலில்
“இத்தி தன்னின் கீழிரு மூவர்க்கு
கத்திக் கருளிய அரசே போற்றி” – எனவும்
திருவிளையாடற் புராணத்தில்
“பட்டமங்கைப் பழுமரமுதல்” – எனவும்
திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில்
“சீருடைப் பட்டமங்கலம் எனும்பதி ஒன்றுண்டு”–எனவும்
கடம்பவனபுராணத்தில் –
“தென்னாட்டிற் பட்டமங் கலத்தார் கீழ்வீழ்ந்து
உரறுனுகல் லாகிக் கிடந்தீர்” – எனவும்
திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம்
இத்தல விருட்சத்தை
“இட்டகோடி யோசனை போந்து விண்மிசை முட்டும்
ஓர் வடதரு”– எனவும்.

வடமொழியில் ஆலாசிய மான்மியமும், வேம்பத்தூரரார் திருவிளையாடற் புராணமும் இத்திருத்தல மான்மியத்தை புகழ்கின்றன.

தேவர்கள் மகரிஷிகள் ஞானிகள் சித்தர்கள் யாவரும் தரிசித்துவரும் இஷ்ட சித்திகளை தரும் இத்திருக்கோயில்கள் அருட்சக்தியை அலை பரப்பும் தன்மையுடையன.

இங்கு மங்கையர்கள் திருமணம் வேண்டியும், புத்திரபேறு வேண்டியும், பூப்படையா நங்கைகள் பூப்புனிதம் பெற்றும் வேண்டுதல்கள் நிறைவுபெற்றும் மனமகிழ்வுடன் வழிபாடுகளை செய்து வருவது கண்கொள்ளா காட்சி ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பௌர்ணமி அம்மாவாசை தினங்களில் திரளான கூட்டம் இத்தலத்திற்கு வருகை தருகின்றனர்.

சக்தன் அருள் தரிற் சக்தி அருளுன்டாம்
சக்தி அருள் தரிற் சக்தன் அருளுன்டாம்
சக்தி சிவமாம் இரண்டும் தன் உள்வைக்க
சத்தியம் எண் சித்தித் தன்மையும் ஆமே – திருமூலர் திருமந்திரம்



43. தி.வயிரவன்பட்டி: அருள்மிகு திருமெஞ்ஞான வைரவ சுவாமி திருக்கோயில்

இருப்பிடம் : திருக்கோட்டியூர் திருத்தலத்திலிருந்து 500 மீட்டர் தொலைவு

அமைப்பு : சாளாகாரம், பெரிய பிரகாரம் நந்தி மண்டபம், உள்பிரகாரம், மகாமண்டபம், அர்த்தமண்டபம் கருவறை கற்றளி.

இறைவன்: அருள்மிகு திருமெய்ஞ்ஞான சுவாமி லிங்கத்திருமேனி கிழக்கு நோக்கியது.

இறைவி: அருள்மிகு பாகம் பிரியாள்

சிறப்பு மூர்த்தி : தெற்கு நோக்கிய பாவ பைரவர்

காலம் : 6ம் நூற்றாண்டு முதல்

வரலாறு : காபாலிக சைவம் நிலை கொண்ட காலம். இப்பகுதி அஷ்டபைரவர்கள் சன்னதிகளை கொண்டு பிரசித்தி பெற்று விளங்கியது. வைரன்பட்டி, திருப்பத்தூர் திருத்தனி நாதர் திருக்கோயில் யோக பைரவர், வைரவன்பட்டி வளரொளிநாதர் திருக்கோயில் பைரவர் சன்னதி, ஒழுக மங்கலம் பைரவர், பெரிச்சிக்கோயில் ஆண்டப்பிள்ளை நாயனார் திருக்கோயில் பைரவர். அழகாபுரி அருள்மிகு அழகு முனீஸ்வரர் திருக்கோயில் பைரவர், கூத்தகுடி அருள்மிகு திருக்கங்கை நாதர் திருக்கோயில் (பைரவர் கோயில்) தென்கரை அருள்மிகு ஆண்டார் சுவாமி திருக்கோயில் (ஆகாச பைரவர்) ஆகியன.

கல்லெழுத்து :

மதலாம் இராஜராஜ சோழன் கி.பி.985–1014ல் அரசு புரிந்த மாமன்னர் வழிபட்டது. பிரபாகரன் என்ற நூலை போதிக்கும் அந்தணர்களுக்கு அறக்கொடை நல்கியது. மாறவர்மன் குலசேகர பாண்டியன், சுந்தரபாண்டியன், விஜய நகர அரசர்கள் புஜபலதேவன், அச்சுத தேவராயன், மதுரை விசுவநாத நாயக்கர், தஞ்சை ரகுநாத நாயக்கர் ஆகியோர் கால கல்வெட்டுகளும் தானசாசனங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

சிறந்த சிவாலயமாகவும், வழிபடுவோர்க்கு சகல பேறுகளையும் வழங்கி வரும் இவ்வாலயம் சீர்திருத்தம் செய்து குடமுழுக்கு நாள் 27–8–2006

44. தென்கரை : அருள்மிகு ஆண்டார் சுவாமி திருக்கோயில்

தென்கரை கிராமத்திலிருந்து வடக்கே 1கி.மீ தொலைவில் கண்மாய் கரையில் அமைந்த சிறு கோவில். சுவாமி–ஆண்டார் சுவாமி லிங்க, திருமேனி கிழக்கு நோக்கியும். அம்மை சிவகாமி நின்ற திருக்கோலத்தில், தெற்கு நோக்கியுள்ளனர். கணபதி, கந்தனும் மேல்புறம் சிறுகோட்டங்களில் உள்ளனர், இங்குள்ள பைரவர் பாதாள பைரவர். பைரவருக்கு உருவத்திருமேனி இல்லை. சண்டேஸ்வரருக்கு பக்கத்தில் நாற்சதுர கட்டுமானம், பைரவருக்கு ஆகாச வெளியில் தீபம் காட்டப்படுகிறது. விஷேசம்

நித்திய பூஜைகள் மட்டும் நடைபெறுகின்றன. குருக்கள், வைராவி, பணியாளர்களுக்கு மானிய நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

45. அழகாபுரி : அருள்மிகு அழகிய முனீஸ்வரர் திருக்கோவில்

திருப்பத்தூர்வட்டம்–திருப்பத்தூர் – நாச்சியாபுரம் – காரைக்குடி நெடுஞ்சாலையில் திருப்பத்தூரிலிருந்து 7.கி.மீட்டர் தொலைவில் உள்ளது. தென்கரைகிராமத்திலிருந்து தெற்கே 1 கி.மீட்டர் தொலைவில் உள்ளது அழகாபுரி. குக்கிராமம். கோயில் குடிமக்களே இங்குஉள்ளனர். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அரசு நடத்திய அழகேசனின் ஊர். தற்போது கோட்டையில்லை , கொத்தளமில்லை! அவன் வழிபட்ட கோயில் மட்டுமே உள்ளது.

உயரமான ஆயாதிகளுடன் கருவறை அர்த்தமண்டபம், மகாமண்டபம், அன்னை சௌந்தரநாயகிக்கும் அவ்வாறே; பைரவர் இரட்டையராக மேற்கே நோக்கும் நிலை – வன்னிமரங்கள் – கந்தன் கணபதிக்கும் தனித்தனிக்கோட்டங்கள். சுரங்கவழிகள் கோயில் முன்புற சேங்கை – கோயில் மேற்கே இக்கோயில் பணியாளர்கள் வாழும் இழுப்பை தோப்பு. இதுவே ஆலய அமைப்பு. கி.பி.9,10 நூற்றாண்டு கல் எழுத்துக்கள் சுவர்களில் காணப்படுகின்றன.

இத்திருக்கோயிலிருந்து பெரிச்சி கோயிலுக்கு ரத உற்ஸவம் நடைபெற்றதாக கர்ணபரம்பரை செய்தி உண்டு. அவசியம் திருப்பணி செய்ய வேண்டிய கோயில்.

46. சொக்கநாதபுரம் :அருள்மிகு திருக்கண்ணங்குடி நாயனார் திருக்கோவில், கத்தப்பட்டு.

சிவகங்கை – திருப்பத்தூர் பேருந்து வழித்தடத்தில் மதகுபட்டியிலிருந்து கிழக்கே 3.கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

“திருக்கண்ணங்குடி நாயனார்” என்ற சிறப்புப் பெயரால் பழங்காலந்தொட்டு அழைக்கப்பட்டு வரும் மூலவர்க்கு திருகண்டீஸ்வரர் என்றும் பெயர் அம்மை “சிறுதேன் மொழியாள்”– மேற்கு நோக்கிய திருக்கோவில் இத்திருக்கோவில் இடம் பெயர்ந்து அமைக்கப்பட்ட திருக்கோவில் இக்கோவிலுக்கு வடமேற்கே கோவில்பட்டி என்று வழங்கப்படும் சிறு கிராமத்தில் 108 சிவலிங்கங்கள் அகத்திய மகரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடபெற்றது எனவும் பிற்காலத்தில் மூலவரை தற்போது உள்ள இடத்தில் பிரதிஷ்டை செய்து உள்ளதையும் கர்ணபரம்பரை செய்தி கூறுகிறது. மூலஸ்தானமான கோவில்பட்டியில் தற்போதும் 30க்கும் மேற்பட்ட சிவலிங்கங்கள் உள்ளதை காணலாம். இதன் உபகோவில்களாக வடகிழக்கே பிடாரியம்மன் திருக்கோவில் உள்ளது.

நித்திய நைமித்திய ஆட்டவிஷேசங்கள் சிவகங்கை மன்னர் பெருமக்களால் மானியம் விடப்பட்டுள்ளது. உபயபூஜைகள் நடைபெறுகின்றன. மகாகும்பாபிஷேக நாள் 16–7–2006.

இத்திருத்தலத்திற்கு அண்மையில் வடமேற்கே, 2கல் தொலைவில் தொட்டியத்து கருப்பையா கோவில் மிக பிரசித்திவாய்ந்தது மாசி சிவராத்திரி களரி விழா விஷேசமானது.

47. கண்டதேவி : அருள்மிகு பெரியநாயகி அம்பாள் உடனுறை சிறகிலிநாத சுவாமி திருக்கோயில்

இருப்பிடம் : தேவகோட்டையிலிருந்து வடக்கே 2கி.மீ தொலைவில் உள்ளது.

இறைவன் : அருள்மிகு சிறகிலிநாதர் என்ற சொர்ண மூர்த்திஸ்வரர்

இறைவி : அருள்மிகு பெரிய நாயகி என்ற பிருஹத் நாயகி.

அமைப்பு : கோயில் முன்புறம் தேரடிக்கருப்பர், சின்னக்கருப்பர் சன்னதிகள், தேர்தள மண்டபத்தின் உள் அறைகளில் உள்ளன. இதன் கிழக்கில் திருக்கோயில் தீர்த்த சேமிப்பு சிறுகுளம் உள்ளது.

கிழக்கு ராஜ வீதியில் மத்தியில் அமைந்த கிழக்கு நோக்கிய ராஜகோபுரம். குடவரை வாயில் கடந்து கொடிமர மண்டபமும், தென்புறம் நீண்ட உயர் மண்டபமும், வடபுறம் நீண்ட உயர்ந்த மண்டபத்தில் அன்னைக்கு கருவறை, அர்த்த மண்டப தளியும், பள்ளிறையும், உள்ளன. இதனைக் கடந்து மேலும் உட்புகும் போது பழைய ராஜகோபுர குடவரை வாயிலும், உட்பிரகாரமும், வடபுரத்தில் கூத்தப்பெருமாளுக்கு கோட்டமும், தென்புறம் அனுக்கை விநாயகர், தெட்சிணாமூர்த்தி, அண்ணாமலையார், கன்னிமூலகணபதி, மகாலெட்சுமி சுப்பிரமணியர், சன்டேசர், துர்க்கை, சன்னதிகள் உள்ளன.

அதிகார நந்தியைக் கடந்து உள்ளே அர்த்த மண்டமும், கருவறையில் லிங்கத் திருமேனியும் காட்சி தருகிறது. பிரகாரத்தின் தென்பகுதி வாயிலுடன் சோமாஸ்கந்த மூர்த்திக்கு தனிக்கோட்டமும் அலங்கார மண்டபமும், விநாயகரும், வெளிப்பிரகாரமும் வடக்கு வெளிபிரகாரத்தில் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியரும் அதன் எதிரில் பைரவரும் தனித் தனி விமானங்களுடன் காட்சி தரும் நிலை. ஈசான்ய மூலையில் வேள்விச்சாலையும் அதன்முன் நவநாயகர்களும் காட்சி தருகிறார்கள்.

கோயில் மேற்கு பிரகாரப் பகுதியில் சடாயு நினைவாக ஸ்தூல லிங்க பீடத்தில் ஸ்ரீ திருவடியும் நாவல் மரமும் உள்ளது. கோயில் திருக்குளம் சடாயு தீர்த்தமாக பிரசித்தி பெற்றது.

வரலாறு : இராமயண காலம். – சீதையை தேடிவரும் ராமபிரானிடம் சடாயு என்ற கழுகு, சீதை இராவணனால் கொண்டு செல்லப்பட்ட விவரம் கூறுகிறது. "கண்டேன் தேவியை"–இராவணனுடன் சீதையை மீட்க போராடி அரக்கன் தன் மந்திர வாளால் சடாயுவின் சிறகை வெட்டி கீழே வீழ்த்தி சென்றான். குற்றுயிரான சடாயு ஸ்ரீ ராமனின் மடியில் கிடந்து சேதிகள் சொல்லி நிறைவை அடைந்தது. தன் தந்தைக்கு செய்தது போல இராமபிரான் பிதிர்க்கடன் செய்தார். சாடாயுவின் ஆன்மா பரிபூரணமடைந்து மகாலிங்கத் திருமேனி தாங்கியது. சிறகு இல்லாததால் சிறகிலிநாதர் என அழைக்கப்பட்டது.

வடமொழியில் சிறப்பு வழக்காக பொன்மயமான இறகு உடையவர் என்ற பொருளில் சொர்ணபர்னேஸ்வரர் என்று (பர்னம்–இறகு) அழைக்கப்பட்டு காலவழுவில் சொர்ணமூர்த்தி என்று அழைக்கப்பட்டார்.

(ஸ்வர்ணபர்னோ ஹேமாங்கோ வராங்கஸ் சந்தனாங்கதி: – விஷ்ணுசகஸ்ரநாமம்) ஒரு காலத்தில் இப்பகுதி பஞ்சமாக வறட்சி மிகுந்த நிலையில் மக்கள் பிரார்த்திக்க பொன் பொழிந்ததால் சொர்ண மூர்த்தி என அழைக்கப்பட்டார் என்பதும் மரபு. இதன் நினைவாக செம்பொன்மாரி என்ற கிராமமும் உள்ளது.

48. அருள்மிகு குங்குமக்காளி அம்மன் திருக்கோயில்

சிவாலயத்தின் வடக்கே கோயில் கொண்ட பத்ரகாளி. வரப்பிரசாதி. எல்லாக்கோயில்களைப்போல பிடாரிக்கு உத்ஸவம் நடத்தப்பட்ட பிறகே பெருங்கோயில் உத்ஸவம் நடைபெறுகிறது. மகாசண்டிகையாக எட்டு கரத்துடன் சண்டன், முகன்டன், சும்பன், நிசும்பன், ரக்தபீஜன் உள்ளிட்ட அசுர கணங்களை–ஆணவத்தை அழிக்கும் அன்னை அனைத்து நலங்களையும் அருள்பவர்.

"சதுர்வர்க்கேஸு சண்டிகாம்" என்ற வாக்குப்படி அறம் பொருள் இன்பம் வீட்டை வழங்கும் அம்பிகை.

திருக்கோயில் பணியாளர்களுக்கு மானியங்களும், திட்டப்படி நித்ய படித்தாங்கள் பூஜைகள் நடைபெற்றும், ஆட்ட விஷேசங்கள், பிரமேற்ஸவம் – நடைபெறுகிறது. சிவாலயத்தில் ஆனி கேட்டை நட்சத்திரத்தில் திருத்தேர் விழா நடைபெறுதல் மரபு.

திருப்பணி : காங்கேய மன்னன் காலத்தில் சிவாலய திருப்பணி மூலஸ்தானமும், அதன் தென்பகுதியில் இறைவிக்கு மூலஸ்தானமும் உள்ளது. இத்திருப்பணி முற்றிலும் நீக்கம் செய்யப்பட்டது. பூபாலராயன் என்ற அரச பிரதிநிதி கையொப்பம்மிட்ட நிபந்தங்கள் வழங்கிய கல்வெட்டுக்கள் சிதைந்த நிலையில் தற்போது உள்ள பிரகார தலத்தில் காணப்படுகின்றன.

சுமார் 200 வருடங்களுக்கு முன் பிள்ளையார்பட்டி சுப்பையாசெட்டியார் என்பவராலும் பின்னர் அமராவதிபுதூர் வயி.நா'கரம் செட்டியார் குடும்பத்தினராலும், இராஜகோபுரம் குடவறை இராமன் செட்டியார் என்பவராலும், திருப்பணி செய்யப்பட்டதாக தெரிகிறது. அருள்மிகு குங்கும காளி திருக்கோயில் கல்கார திருப்பணியும் நகரத்தார்களின் உபயதிருப்பணியாம்.

திருக்கோயிலுக்கு நன்செய், புஞ்சை, இலுப்பைத்தோப்பு, களஞ்சியம், காலியிடங்கள் ஆகிய சொத்துக்கள் உள்ளன. குடமுழுக்கு 30.6.1994ல் நடைபெற்றது.



சாக்கை அருள்மிகு வீரசேகர உமையாம்பிகை
சோமாஸ்கந்தர் பிரியாவிடை, சாக்கோட்டை

49. சாக்கை : அருள்மிகு வீரசேகரசுவாமி உமையாம்பிகை திருக்கோயில் - சாக்கோட்டை.

இருப்பிடம்: காரைக்குடி–அறந்தாங்கி பேருந்து வழித்தடத்தில் புதுவயல் என்ற நகரை அடுத்துள்ளது சாக்கோட்டை – சாக்கோட்டைகிராமம் புதுவயலுடன் ஒன்றித்திவிட்டது. சாக்கோட்டை பஞ்சாயத்து ஒன்றியமாக உள்ளது.

அமைப்பு : திருக்குளமும், தீர்த்தமண்டபமும், திருமாடவீதியும் தெற்கே விநாயகரும், மகிழமரத்தடியில் பழமையான கோட்டை மதில் சுவர் அருகில் கோட்டை முனீஸ்வரரும், மேற்கு நோக்கிய அக்நிவிநாயகரும் முன்னிற்க சுவாகத மண்டபம் வரவேற்கிறது. கூர்மையான வாள் போன்ற நெடுதுயர்ந்த கம்பீரமான ராஜகோபுரத்துடன் கிழக்கு குடவறைவாயில்– உள்பிரகாரம், சூரியன், சோமர்கள் வழிபட கொடிமர மண்டபம், கருவறை, அதனை அடுத்து துவார பாலகர்களுடன் விநாயகர், சுப்பிரமணியர், மகாமண்டபத்தில் எழுந்தருளித்திருமேனிகள், நடராஜர் அர்த்தமண்டபவாயிலின் இருபுறமும் மகாகணபதிகள் காட்சிதர கருவறையில் காட்சி தரும் அருள்தரு வீரசேகரர் அருள்வெளிப்பாடு அனுபூதியில் அறியக்கூடியது.

உட்பிரகாரத்தில் தெற்கில் 63 நாயன்மார், மேற்கில் கணபதி, சோமாஸ்கந்தர், சரஸ்வதி, வீரராகவர், மகாலெட்சுமி, ஈசான்யத்தில் இரட்டை வாகனத்துடன் மகாபைரவர், நவநாயகர்கள், கோஷ்டங்களில் முறையே நர்த்தன கணபதி, தெட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை, சண்டேச நாயனார் தனித்தனியாக காரண ஆகம முறைப்படி கோயில் கொண்ட திருக்கோயில்.

புராணம் : வேடர் குலத்து வீரன், கிழங்கு கிள்ளும் போது வீரைமரத்தடியில் இருந்த பெரும்புற்றில் வள்ளிக்கிழங்கு கொடி படர்ந்திருந்தது. அதனை கிள்ளி எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு ஆயுதம் விடும்போது "கனீர்" என்ற ஒலியுடன் ரத்தம் பெருக்கெடுத்தோடியது மூர்ச்சை அடைந்தான் வீரன். முகர்ந்து பார்த்த வேடனின் நாய் விவரத்தை வீடுபோய் வேடன் மனைவி சுமதிக்கு குறிப்பால் உணர்த்தியது. பதைப்புடன் வந்தவள் கணவன் மயக்கமுற்றதையும் வீரை மரத்தடியில் சிவலிங்கத்திருமேனி காயம்பட்டநிலையில் ரத்தம் பெருக்கெடுத்துள்ளதையும் கண்டு அதிசயித்து இறைவனை இறைஞ்சினாள். கணவன் கண்விழித்தான். தம்பதிகள் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்தனர் தன் உடல் வெண்குட்டத்தையுற்று நோய் தீர தலயாத்திரை செய்து முகாமிட்டிருந்த சோழமன்னர் கண்டனுக்கு இச்செய்தி தெரிவிக்கப்பட்டது. அவன் செவி நோய்நீங்கியது. அதிசயம் உற்ற அம்மன்னன் திருமேனி இறைவனை தரிசனம் செய்த அளவில் வெண்குட்ட நோய் நீங்கியது. வனப்பகுதியை அழித்து நாடு புதுக்கினான். அருகே உமாதேவியின் திருமேனி கிடைக்கப்பெற்றான். வீரசேகர உமையாம்பிகை திருக்கோயில் அமைந்து நமக்கு தந்தான் பெருந்தகை.

பாண்டிய மன்னன் : வீரசேகரர் தோன்றிய விபரம் அறிந்த சுகுணபாண்டிய மன்னன் வருகை தந்து தரிசித்தான். சுவாமியை சுற்றி வரும்போது இந்த வீரை மரம் பலாமரமாக மாறுமோ! என நினைத்தான். அந்தநினைவுப்படியே வீரை மரம் பலாமரமாக மாறி கனிசொறிந்தது. தான் இறைவனை சோதிக்க நினைத்ததை உணர்ந்து இறைவனை இறைஞ்சினான். மீண்டும் பலா வீரை மரமாக மாறியது.

வழிபட்டு சிறந்தோர்: அருந்தகு வீரசேகர சுவாமி உமைபாம்பிகையை வீரன், சுமதி, புகார் சோழன் கண்டன், அரசி–சுசீலை, அந்தணர், இடையர், வீரசேகரசோழன், சுகுணபாண்டியன், குபேரன், திருமால், இராமன், திருப்பெருந்துறை அந்தணர்கள் முன்னூறுபேர்கள், மற்றும் அருளாளர்கள் வழிபட்டு சிறப்படைந்துள்ளனர்.

சிறப்பு: பாண்டிய மன்னன் அவையில் வழக்கிற்கு சாட்சியாக சுவாமி அந்தணர் கோலத்தில் வந்திருந்து பொதிசோறு உண்டனர். அது முதல் இவ்வாலயத்தில் புழுங்கள் அரிசி நெய்வேத்யமே உள்ளது.

கோயிலுக்கு மேல்புறம் 1 கி.மீட்டர் தொலைவில் இருந்த பெருமாள் கோயில் ஜீரணமடைந்து அதன் வீரராகவப்பெருமாள் நின்ற திருக்கோலத்தில் ஆள்உயர சிலாவிக்கிரகம் இத்திருக்கோயில் மேற்கு பிரகாரத்தில் நிறுவி பூஜைசெய்யப்படுகிறது. சரஸ்வதி தேவி பூசிக்கப்படுகிறார். அபூர்வமான இரட்டை வாகனத்துடன் பைரவர் கம்பீரமாக காட்சிதருகிறார்.

கல்லெழுத்துகள்: மகாமண்டபம் முன்புறம் எட்டாம் நூற்றாண்டு நெட்டெழுத்துகள், வட்டெழுத்துக்கள் உள்ளன. இத்திருக்கோயில் 12ம் நூற்றாண்டில் வானதிராயர்கள் திருப்பணியும் நடைபெற்றது. பாண்டிய மன்னர்கள் அந்தணர்களுக்கு நிவந்தம் அளித்தும், இறையிலி நிலங்கள் தானம் செய்தும், நந்தா விளக்கு எரியச் செய்ததற்கும் உள்ள செய்திகள் வெளிப்படுகின்றன. மகாமண்டப வடக்கு வெளிச்சுவற்றில் இத்திருமேனியின் பிரம்மோற்ஸவம் பாண்டியனின் அவிட்ட நாளைக்கொண்டு தீர்த்த திருநாள் நடைபெறும் செய்தி குறிப்பிடுகிறது.

ஸ்தல மரம்: வீரைமரம் தற்போது விக்கிரகமாக வடிக்கப்பட்டுள்ளது.

தீர்த்தம்: சோழ தீர்த்தம் என்று அழைக்கப்படும் புண்ணிய தீர்த்த குளம் கோயில் முன்புறம் உள்ளது.

50. அருள்மிகு உய்யவந்தம்மன் திருக்கோயில்

மகாசண்டிகையாக எண் கரத்துடன் காட்சி தரும் இத்தேவதை வரபிரசாதி. இப்பகுதிமக்களின் குலதெய்வம். வடக்குநோக்கிய திருமேனி திருக்குளத்துடனும், விநாயகருடன் கூடிய முன்மண்டபம் வரவேற்க அருள் செய்தும் திருக்கோயில். அன்னைக்கு நவராத்திரிவிழா பெரியகோயிலில் வைத்து நடைபெறுகிறது. ஆனி பிரம்மோற்ஸவம் நடைபெறுகிறது.

இதன் உபகோயில்கள், ஊர்காவலன் கோயில்,முனிஸ்வர் கோயில், கருப்பர் கோயில் ,அக்னி விநாயகர் கோயில்ஆகியன சூழ்ந்து விளங்குகின்றன.

நித்திய பூஜைகளும் ஆட்டவிசேஷங்களும் ஆனி மாதத்தில் அருள்மிக வீரசேகர சுவாமி உமையாம்பிகை திருக்கோயில் பிரம்மோற்ஸவமும் ஆடி மாதத்தில் அன்னை உமையாம்பிகைக்கு பிரம்மேற்ஸவமும் சிறப்பாக நடைபெறுகின்றன. கும்பாபிஷேக நாள் 9.2.1998.

51. கோவிலூர்: அருள்மிகு கொற்றவாளிஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் : பெருநகரான காரைக்குடியிலிருந்து 2.கி.மீட்டர் மேற்கே திருப்பத்தூர் ரோட்டில் அமைந்துள்ளது.

இறைவன்: அருள்மிகு கொற்றவாளிஸ்வரன் (லிங்க திருமேனி)

இறைவி: அருள்மிகு திருநெல்லை அம்பாள்

இத்திருக்கோயில் வடமொழியில் ஸ்ரீ சாலிவாடீஸ்வரி சமேத ராஜகட்க பரமேஸ்வரர் திருக்கோயில் என அழைக்கப்படுகிறது.

காண்போர் வியக்கும் கலையழகு கொஞ்சும் இந்த ஆலயம், பெரும்பாதையிலிருந்து மேதகு கார்த்திகேய மன்னர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதும், திருக்கோயிலுக்கு சொந்தமான அவுதா கொட்டகைளின் வரவேற்பு மற்றும் இரதங்களுடன் கூடிய வரவேற்பு வளையுடனும் வரவேற்கப்படுகின்றன. எட்டுப்பட்டை வடிவத்தில் அழகிய யானைகள் அஷ்டதிக்கஜங்கள் தாங்கிய விமான வடிவ நீராழி மண்டபத்துடன் கூடியதும், படித்துறைகளுடனும் கூடிய தெப்பக்குளம் முன்நிற்க மூன்று குடவரை வாயில்கள் உள்ளன. கிழக்கு நோக்கிய சன்னதிகளுடன் இறைவன் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், விரிந்த திருமாளிகைப்பத்தியுடனும், அம்பிகை கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், பள்ளியறை மண்டபம் எதிராக சுவாகத மண்டபம், கருங்கல் திருப்பணியும், கவின்பெறு தளவரிசையுடன் கூடிய திருஉண்ணாழி, வெளித்திருமாளிகை பத்தி, உள்பிரகாரம், சுழலும் தூண்களுடன் சோமஸ்கந்தர் தனி மண்டபம், அலுவலக அறைகள் உள்ளன. கைலாச நாதர் கல்யாணி அம்பிகைக்கு தனித்தனி அறைகள் விமானங்களும் கூடிய அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது.

அன்னையின் சன்னதிக்கு செல்லும் குடவறை வாசல் உள்புறம் வடக்கில் வீரபாண்டிய மன்னர் திருவுருவமும் தெற்கில் ஆண்டவர் சுவாமிகள் திருவுருவமும் காட்சி தருகின்றன.

வன்னிவனசேத்திரம் :

இத்திருத்தலம் வன்னிவனமாக இருந்தது. சமீபவனமாம் எனவும் அழைக்கப்பட்டது. திருக்கானப்பேர் எயில் என்னும் காளையார்கோவிலை ஆண்ட வீரபாண்டியன் என்னும் மன்னன், இப்பகுதிக்கு வேட்டைக்கு வந்த நாள்.– தனிமைப்பட்டு கண் அயர்ந்த மன்னன் ஒரு அந்தனனைக்காக்க ஒரு புலியுடன் போராடும் நிலையில் தன் உடைவாளை தேடுவதாக கனாக்கண்டு எழுந்தான். அரச இலக்கணத்திற்கு அடையாளமுமான உடைவாளை தன்னிடத்தில் இல்லாததறிந்து பதைத்து பலரையும் விடுத்துத்தேடினான். ராஜகட்சம் என்னும் உடைவாள் ஒரு வன்னிமரத்தடியில் சிவலிங்கத்துடன் இருக்கக்கண்டு பரவசம் அடைந்தான். அது திருக்கோயிலாக பரினமித்தது வழக்கப்படி காடு கொன்று நாடாக்கினான். திருக்கோயில் எழுப்பினான்.

சுவாமி : ராஜகட்க பரமேஸ்வரர் எனவும் திரிபுவனேஸ்வரர் எனவும் வழங்கப்பட்டது.

விளைநிலமான மாற்றம் செய்யப்பட்ட இப்பகுதி கழனிவாசல்

எனவும் சாலிவாடி (நெற்பகுதி) எனவும் ஸ்ரீ வல்லபம் எனவும் அழைக்கப்பட்டது.

இறைவி : சாலி வாடி அம்பிகை எனவும் திரிபுவனேஸ்வரி எனவும் அழைக்கப்பட்டார். தேனாறு பாயும் இப்பகுதி என்பதால் தீர்த்தக்குளம் மதுபுஷ்கரணி எனவும் அழைக்கப்பட்டது.

கல்லெழுத்துக்கள் : சுவாமி கருவறை வெளிச்சுவர்களில் கி.பி.3ம் நூற்றாண்டைச்சேர்ந்த தமிழ்நெட்டெழுத்துக்களும், பிற்கால தமிழ்கிரந்த, வட்டெழுத்துக்களும் காணப்படுகின்றன. கருவறை தவிர இதர மண்டபங்கள் மற்றும் கோயில் கட்டுமானங்கள் அனைத்தும் பிற்காலத்தில் உருவாக்கப்பட்டவை. ஆதியில் இது சிறுகோயிலாக இருந்தது இறைவிக்கு முத்துராமலிங்கம் என்னும் வனிகபெருமகன் திருக்கோயிலை விரிவுபடுத்தினார். கோயிலூர் மடாலயத்தை ஸ்தாபனம் செய்துள்ளார். இம்மடத்தின் ஐந்தாம் அதிபதியான கோயிலூர் ஆண்டவர் சுவாமிகளால் கோயில் விருத்தி செய்து பல்லோரும் வியக்கும் கருங்கல் திருப்பணி செய்யப்பட்டது. நித்திய கல்யாணி அம்மன் சமேத கைலாச நாதர் திருவுருவங்கள் குப்பச்சி ஊரணி மறவன் கோட்டையில் ஜீர்ணமடைந்த ஆலயத்தில் இருந்தது. ஸ்ரீமத் ஆண்டவர் சுவாமி, இத்திருமேனிகளை இக்கோயிலுக்கு கொண்டு வந்து பிரதிஸ்டை செய்தார்கள்.

ஐயுளி அம்மன்: சுவாமி அம்மனுக்கு நடுவில் இருந்த வனதுர்க்கையான ஐயுளி அம்மனுக்கு கோயிலூர் ஆண்டவர் சுவாமிகளால் தனி கற்றளி எழுப்பப்பட்டது. அம்மனுக்கு நித்திய வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இக்கோயில் உபகோயிலாக உள்ளது. இக்கோவிலில் உள்ள கல்வெட்டில் அன்னை வனதுர்க்கையாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

கலைச்சிறப்பு:

கல்த்திருப்பணியின் அங்க லெட்சணங்கள் பரிபூரணமாக அமைந்தது. தூண்களின் புடைப்பு சிற்பங்கள் கூட காலத்தையும் வென்று கதை சொல்லும் நிலையில் உள்ளன. சிறப்பாக திருநெல்லையம்மையின் கொடிமரமண்டபத்தின் இருமருங்கிலும் அழகும் சிற்பத்திறனும் கொண்ட சிற்பங்கள் கலைஉள்ளத்தை வசப்படுத்தக் கூடியவை.

மதுரை மீனாம்பிகையின் கருவறை செல்லும் வழியில் தூண்களில் சித்தாந்த தத்துவத்தை விளக்கும் வகையில் சக்தியுடன் கூடிய சதாசிவ நிலையையும், மறுதூணில் வேதாந்தத்தை விளக்கும் காயத்திரி தேவியையும் வடித்திருக்கிறார்கள். அதேபோல கோவிலூர் சிற்பங்கள் ஒருசேர சிற்பத்திறனையும் தமிழகத்தின் பலவேறு கலைகளையும் பறைசாற்றுகின்றன.

"எண்டோள் வீசி நின்றாடும் பிரான்" என்பார்கள். இத்தலத்தில் சிவபெருமானின் ஊர்த்துவ தாண்டக் கோலம் இவ்வாறாக உள்ளது. முயலகனை அடக்கி அருள் செய்யும் இடது திருவடி, திருமுடிக்கு இணையாக தூக்கிய வலது திருவடி. வலது திருக்கரங்கள் முறையே

கீழிருந்து சூலம், கட்கம், மழு, உடுக்கை, அபயகரம் ஆக ஐந்தும் இடது கரங்கள் முறையே கீழிருந்து மேலாக கேடயம், மான், அனல், இடபக்கொடி, வீசுகரம் ஆக பத்துக்கரங்களுடன், சடாமகுடத்தில் சந்திரனும் தாங்கி இடபவாகனம் பின்னிற்க, காரைக்கால் அம்மை தாளமிட்டு பாடவும் முப்புரத்து அசுரர்களில் இளையவன் பஞ்ச கிருத்திய குடமுழா வாசிக்கவும், திருநந்திதேவர் மத்தளம் வாசிக்கவும், அலாதியான ஆனந்தப் புன்னகையுடன் நடனமிடும் கூத்தப்பிரானின் திருவுருவம் – பரவசம் கொள்ளச் செய்வது. அவனின் இயல்பான திருவாசியின் வேலைபாடு உயர்ந்த ஐஸ்வரிய வாழ்வை எடுத்துக்காட்டுவது.

"மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில் ஒருவர் நிண் திருக்கோவில்வாய்தல்
காவலாளரெண் றேவியபின்னை பொருவ நீ கரி கராடங்காக
மானை நோக்கியோர் மாநடம்மகிழ மணிமுழா முழங்க அருள்செய்த
தேவ தேவ நின் திருவடியடைந்தேன் செழும்பொழில் திரும்புன் கூருளானே."

–சுந்தரர் தேவாரத்தை நினைவு கூறுகிறது. மேலும்,

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன் அடியின்கீழ் "இருக்க என்றார்."

என்ற பெரியபுராணத்தின் " காரைக்கால் அம்மையார் பேற்றை நினைந்து இன்புறக் தக்கது. ஒரே தூணில் இருபுறங்களிலும் அந்தர வேலைப்பாடு அமைந்த சிற்பங்கள் அமைத்த அம் மகாசிற்பியின் கைத்திறமும் மனத்திட்பமும் வியக்க வைக்கின்றன.

இத்திருக்கோயிலுக்கு மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தல புராணம் படைத்திருக்கிறார்கள். கோவிலூர் மடாலயம் அத்வைதம், சைவ சித்தாந்தங்களையும் பாரத கலைகள் பலவற்றையும் இக்கால கணிப்பொறி கற்றல் முதலான வடிவங்களில் கற்பித்தும், வளர்த்தும், பல்வேறு அறப்பணிகள் செய்து வருகின்றது. சிவகங்கை அரசர்களால் இராஜமானிபங்கள், கிராம தானங்கள், மடாலயத்திற்கு கவுல்கள் மற்றும் கோவில் பணியாளர்களுக்கு மானிபங்கள் வழங்கப்பட்டும் நித்திய படித்தரம், ஆட்டவிஷேச தேவஸ்தான திட்டங்களுடன் சிவகங்கை தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

52. அண்டக்குடி : அருள்மிகு கருவேலமுடைய நாயனார்திருக்கோயில்

திருத்தங்கூரிலிருந்து மேற்கே 3கி.மீட்டர் தொலைவில் உள்ளது. கண்மாய்க்கரையில் சிவலிங்க திருமேனியுடன் காட்சி தரும் ஆலயம். சற்று தூரத்தில் அதன் உபகோயிலாக ஐயனார் திருக்கோயில் உள்ளது. அருள்மிகு கருங்கம்முடைய ஐயனார் என மருவி வழங்கப்பட்ட இவ்வய்யனார் திருக்கோயில் மகாகருப்பருடன் யானை, குதிரை சகிதம் மக்கள் வழிபடும் நிலையில் உள்ளது. காலவெள்ளத்தால் கரைந்துபோன இவ்வாலயம் புதியதாக எழுப்பப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இராஜமானியம் உடைய திருக்கோயில்.

54. கல்லங்குடி: அருள்மிகு திருப்பாகதீஸ்வரர் திருக்கோயில்

காரைக்குடி – புதுவயல் பேருந்து வழித்தடத்தில் காரைக்குடியிருந்து 10.கி.மீட்டர் தொலைவில் சாலையின் தென்புறம் அன்னை அழகிய நாயகி வீற்றிருக்கும் அழகு நாச்சியம்மன் திருக்கோயில் உள்ளது. வடக்கு நோக்கி பக்தர்களுக்கு அருளும் அம்பிகை மங்கலகரமானக் கருணை உடையவள். கருவறை, அர்த்தமண்டபம் மகாமண்டபம், பத்தி, திருமதில் கல்காரமானவை. எதிரே கோயில் திருக்குளம் குடிநீராக பயன்படுகிறது. நித்திய பூஜைகளுடன் பங்குனி மாதத்தில் பிரம்மோற்ஸவம் கொடியேற்றத்துடன் தொடங்கி திருத்தேர் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது.

இத்திருத்தலத்தின் முக்கிய திருக்கோயிலாக வடக்கே 1கி.மீட்டர் தொலைவில் சுற்றிலும் தாமரை தடாகத்தின் மத்தியில் உள்ள திருக்கோயில்–திருப்பாகதீஸ்வரர் திருக்கோயில்.

இறைவன்: திருப்பாகதீஸ்வரர், இறைவி: பாலம்பிகை, யோகாம்பிகை. பாரத தரிசனம் செய்ய தென்நாடு வந்த அங்க தேசத்து கர்ணமகாராஜன் தன் பரிவாரங்களுடன் இங்கு தங்கி இருந்தான். சுற்றிலும் தாமரைப்பொய்கை–தாமரை பூத்தது, லெட்சுமி கடாட்சத்துடன் விளங்கியது. சொல்லொன்னா உவகை பொங்கியது மன்னனுக்கு தன்மங்கையை நோக்கி புன்னகைத்தான்–அப்போது.

அரும்பு–குறும்பு செய்தது. ஒரு தாமரை மொட்டு கீழே இறங்குவதும், சற்று மேலே ஏறுவதும்–திரும்ப–திரும்ப அவ்வாறு நடைபெற்றது. மன்னன் கவனம் மலரில் திரும்பிற்று, தடாகத்தில் இறங்கி அம்மலரை பறிக்க முயன்ற மன்னனுக்கு அது போக்கு காட்டியது. வியந்த மன்னன், அதனை வேறுடன் கிள்ளமுயன்றபோது!!.

சிவலிங்க திருமேனியாக காட்சிதந்தான் இறைவன். அப்புறம் என்ன? பேற்றுக்கென்ன பஞ்சம்! அந்த இடத்திலேயே கோயில் உண்டாக்கினார். கற்றிருக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் அன்னை யோகாம்பாளின் தெற்கு நோக்கிய சன்னதிக்கு கருவறை, அர்த்தமண்டபம். உள்பத்தி பரிவார தேவதைகள். பள்ளியறைக்கு பக்கத்தில் அன்னை பாலாம்பாளுக்கு தனி சன்னதி. கிழக்கு நோக்கிய பிரகாரம். திருமதில். தென்னந்தோப்பு வடக்கிலும் மேற்கிலும் தாமரைதடாகம். படித்துறையுடன் திருக்குளம் உள்ளது.

கல்லெழுத்து: திருக்கோயில் 12ம் நூற்றாண்டு வானதிராயர் காலத்து கல்லெழுத்துக்கள் உள்ளன. திருக்கோயில் பூஜகர் விஜயன்பட்டருக்கு நிவர்த்தங்கள் வழங்கிய செய்தியும், பிற்கால பாண்டியர் காலத்து கல்லெழுத்துச் செய்திகளும் உண்டு.

பக்தர்கள் கொண்டாடும் திருக்கோயில். பைரவர் சன்னதிக்கு திருப்பணி செய்வித்த அருணாசலம் சேர்வை திருவுரு உள்ளது.

நித்திய பூஜைகளுடன் சிறப்பு வழிபாடுகள், சித்திரை மாதத்தில் பிரம்மோற்ஸவம் கொடியேற்றம் தொடங்கி திருத்தேர் தீர்த்த விழா சிறப்பாக நடைபெறுகிறது.

சாந்தமும் கருணையும் நிறைந்த இத்தலம் 60ம் ஆண்டு சாந்தி, ஆயிஷ் ஹோமம், முதலியன செய்ய நலம் பயப்பது. பிரதோஷம் சிறப்பாக நடைபெறுகிறது. மிக்க சாந்நித்தியம். உபகோயில்களாக அருள்மிகு அழகு நாச்சியம்மன் கோயிலும் பெரிய கோயிலின் மேல் புறம் இக்கோயிலின் கண்மாய் கரையில் அருள்மிகு ஐயனார் கோவிலும் உள்ளன. இத்திருக்கோயிலின் குடமுழுக்கு 2.2.96ல் நடைபெற்றது.

53. திருத்தங்கூர்: அருள்மிகு சொர்ணவல்லி அம்பாள் சமேத நாகநாதர் சுவாமி திருக்கோயில்

புதுவயல் – மித்ராவயல் – ஏம்பல் பேருந்து பாதையில் புதுவயலிலிருந்து 16கி.மீட்டர் தொலைவில் உள்ள குக்கிராம்.

பெயருக்கு ஏற்றபடி பண்டைய நாளில் திரு(செல்வம்) தங்கும் ஊராக இருந்ததாக தெரிகிறது. பெரிய ஆயாதிகளுடன் பெரும் கோயிலாக இருந்த இவ்ஆலயம் முற்றிலும்மாக சமீப நூற்றாண்டில் பிரித்து கல்கட்டிடமாக கட்டப்பட்டுள்ளது. இறைவனும், இறைவியும் தனித்தனியாக கிழக்கு நோக்கி அருள்பாலிக்கிரார்கள். கருவறை, அர்த்தமண்டபம், பத்தி, பிரகாரம் பரிவாரதேவதைகளுடனும், சுவாமிக்கு இடது புறம் அம்பிகைக்கு கற்றளி பிரகாரம் பள்ளியறை முன்மண்டபம் திறந்த வெளியும் கிழக்கே திருக்குளமும் உள்ளது.

நித்திய பூஜைகள் ஆட்டவிஷேசங்கள் நடைபெறுகின்றன. இப்பகுதி கோயிலின் ஆறுகிராமமக்களும் ஆரவாரத்துடன் பங்கு கொள்கின்றனர். இக்கோயிலின் மிராசு பணியாளரும் சிங்கப்பூரில் வாழ்பவருமான திரு.நாகநாதன் தன் சொந்த பெரும் பொருள் செலவில் உபயமாக 10.9.2000ம் நாள் குடமுழுக்கு நடைபெற்றது.

மேதகு ராணி டி.எஸ்.கே. மதுராந்தகிநாச்சியார் காலத்தில் புதிதாக கொடிமரம் ஸ்தாபிக்கப்பட்டும் பிரமனுடன் அஷ்டதிக் பாலகர்கள் திருவீதியில் ஸ்தாபிக்கப்பட்டும் பிரம்மோற்ஸவம் நடைபெறுகிறது. எவ்வித சாதிபாகுபாடின்றி அனைவரும் ஆலயத்தில் பங்குகொள்கின்றனர். பிரமோற்ஸவம் ஆடி பௌர்ணமியில் திருத்தேர் விழா நடைபெறும் வகையில் கோயிலின் 6 கிராமங்களும் இறைவன் முன் உறுதி செய்து உள்ளார்கள்.

இதன் உபகோயிலாக அருள்மிகு அழகியநாயகி அம்மன் திருக்கோவில் உள்ளது. மதுயெடுப்பு உத்ஸவம் ஆனி மாதத்தில் நடைபெறுகிறது. மகாகும்பாபிஷேக நாள் 3–5–2006.

55. உஞ்சனை : அருள்மிகு திரிபுவன சக்கரவர்த்தீஸ்வரர் திருக்கோயில்

தேவகோட்டை – கண்டதேவி – மற்றும் – கண்டனூர் வழித்தடத்தில் தேவகோட்டையிலிருந்து 10 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

உஞ்சேனை எனவும், உஞ்சைமாகாளம் எனவும் குறிப்பிடப்படும் இவ்வூரின் கிழக்கே வானளாவிய கட்டுமானத்துடன் மகாமண்டபம் அர்த்தமண்டபம், மகாமண்டபம் கூடிய விசாலமான கல்திருப்பணி. இறைவி: அருள்மிகு சௌந்தரநாயகிக்கு தெற்கு நோக்கி கருவறைமண்டபம் பிரகாரம். கன்னித்திக்கில் விநாயகர், வாயுதிக்கில் முருகர், சண்டேசர் ஈசானிய மூலையில் மேற்கு நோக்கிய பைரவர் ஆகியவற்றுடன், பிரகாரம் மதில் சுவர் கூடிய கட்டிட அமைப்பு. குடவறையில் புதிதாக சாளாகார அமைப்பு கட்டப்பட்டுள்ளது. கோயில்வாயிலில் இடதுபுறம் செம்புரான்கள் திருப்பணியில் விமானங்கள் கோபுரத்துடன் கூடியது. இடைக்காலத்தில் கோபுரங்கள் விமானங்கள் நீக்கப்பட்டிருக்கிறது. தற்போது மராமத்துப்பணிகள் நடைபெற்று குடமுழுக்கு செய்யும் நிலையில் குறிஞ்சி அமைப்பில் விமானங்கள் செய்யப்பட்டுள்ளன.

சமயக்குரவர் பாடல் :

திருஞான சம்பந்தரின் திருந்தலைச்சங்காடு பதிகத்தில்

" வேடஞ்சூழ் கொள்கையீர் வேண்டி நின்ற வெண் திங்கள்
ஓடஞ்சூழ் கங்கையும் உச்சிவைத்தீர் தலைச்சங்கைச்
கூடஞ்சூழ் மண்டமும் குரலாய வாசற் கொடித்தோன்றும்
மாடஞ்சூழ் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே."

என்று வேலைப்பாடமைந்த கோயிலுக்கு பாடியது இக்கோயிலுக்கும் பொருந்தும்.

கல்லெழுத்துக்கள் : கி.பி.6ம் நூற்றாண்டு சிம்மவர்வ பல்லவன் ஐயடிகள் காடவர்கோன் நாயனாரின் க்ஷேத்திர வெண்பாவில்

" காளையர்கள் ஈளையர்கள் இக் கருமியரும்
பூளை எனப் பொங்கிப் பொரிவழிந்து சூளையர்கள்
ஓ காளஞ் செய்யாமுன் நெஞ்சமே உஞ்சேனை
மா காளம் கைதொழுது வாழ்த்து – என்றும்.

கி.பி.7ம் நூற்றாண்டு சேத்திரக்கோவையில்,

" நெற்குன்றம் ஒத்துக் நிறநீர் மருகல்
நெடுவாயில் குரும்பலா நீடுதிரு
நற்குன்றம் வலம்புரம் நாகைச்சுரம்
நளிர்சோலை உஞ்சேனை மாகாளம் வாய்மூர்



சாக்கை அருள்மிகு வீரசேகர உமையாம்பிகை
சாக்கோட்டை

கற்குன்றம் ஒன்றேந்தி மழைபூத்த
கடல் வண்னனும் மாமலரானும் காணா
சொற்கென்றும் தொலைவில்தான் உறையும்
குடமூக்கென்று சொல்லி குலாவுமினே"

உஞ்சேனை மாகாளம் வாறல் ஒத்துக்
உருத்திர கோடி மறைக் காட்டுள்ளும்
மஞ்சார் பொதியின் மலைதஞ்சை வழுவூர்
வீரட்டம் மாதாளம் கேதாரத்தம்
வெஞ்சகமாய் கடல் மீயச்சூர் வைகா
வேதிச்சரம் வீவிசரம் வெற்றியூரும்
கஞ்சனூர் கஞ்சாகு பஞ்சாக்கையும்
கயிலாய நாடினையே காணலாமே" – என்றும்

தேவார வைப்புத்தலமாக கொள்ளத்தக்கவகையில் போற்றப்படுகிறது.

56. உஞ்சனை : அருள்மிகு தெய்வக்கலை அம்மன் உஞ்ஜை மகாகாளிகோயில்.

உஞ்சனை கிராமத்தின் வடக்குப்புறம் சுமார் 25 ஏக்கர் நிலப்பகுதியல் அமைந்த அடர்ந்த காடு. ஆழ்ந்த அமைப்பும் அச்சம் தரும் சூழலும் திருக்குளமும் அமைந்த பகுதி. அன்னை மகாசண்டிகையாக வடக்குநோக்கி வீற்றிருக்கிறார். இவளது வடிவம் மகத்தானது. ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்ட ஆந்திர சிற்பஅமைதி உடையது என்பர் சிற்பவல்லுனர்கள். இவளது திருமார்பில் குறுக்கே தவழும் தலைமாலை இதர சிற்பங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. அதிபயங்கர தோற்றத்தில் இருப்பினும் கவிஞன் உள்ளம் போல் முகம் சாந்த நிலையைக் காட்டுகிறது.

" அண்டமுமண்ணும் விண்ணுமனைத் துலகமும் வாழக்
கண்டமு முண்டம் வேறாய்க் கழுகொடுநாகம் தின்னக்
கண்டகச் சண்ட முண்டர் களத்தில் மடிந்து வீழ்ந்தார்
சண்டிகை யவளுங்கோபந் தணிந்தனள் அமுதம் போல"

– மலேசியா பாங்கோங் காளிபாமாலை

இத்திருக்கோயிலுக்கு இராஜமாணிபம், பண்ணைநிலங்கள், உள்ளன. குலாலர் இனத்தவரால் நித்திய பூஜைகளும் சிறப்பு காலங்களில் விஷேசவழிபாடுகளும் உள்ளன. இத்தேவி உஜ்ஜெயினி அரசன் விக்கிரமாதித்தனால் வழிபடப்பட்டவள் என்பது மரபுவழி செய்தி. கிராம தேவதையாகவும், வரப்பிரசாதியாகவும், வணங்குவோருக்கு நல் வாழ்வு தரும் வனதேவதையாகவும் விளங்குகிறாள்.

எத்தனையோ திருக்கோயில்கள் ஜீர்ணமடைந்து திருப்பணி செய்யத் தூண்டும் நிலையில் உள்ள போது, இத்திருத்தல அன்னை தனக்கென கட்டப்பட்ட கோயிலிலும் குடிபுகாதவள் என்பது அரிய செய்தி.

கணடனுரைச் சேர்ந்த நகரத்தார்மாது 50 ஆண்டுகளுக்கு முன்

அருமையான கர்ப்ப கிருகம், பிரகாரம் கூடிய கல்திருப்பணியும் செய்த வைத்தார். ஆனால் இம்மகா சண்டிகை, அத்திருக்கோவிலில் எழுந்தருள விரும்பவில்லை. இன்றும் அக்கட்டிடம் மூர்த்தியின்றி இருக்கிறது. இது உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுகிறது. அன்னை இருக்கும் உறைவிடம் தற்போது செங்கல் கட்டுடன் கூடிய நாட்டோடு கட்டிடமே ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

மகாகும்பாபிஷேகமும் திருப்பணிகளும் செய்வதிற்கு அன்னை எப்போது மனம் கனிவாளோ? "யார் அறிவார் இவள் அதிசயமே."

57.நெம்மேனி: அருள்மிகு அல்லியங்கோதை சமேத வன்மீகநாதர் திருக்கோயில்

புதுவயல் சாக்கோட்டையிலிருந்து சோனார்கோட்டை – தேவகோட்டை ஒரு வழிச்சாலையில் சாக்கோட்டையிலிருந்து 12 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. மிக குக்கிராமம். அரச மானிபம், திரளான நிலங்கள், தானங்கள் வழங்கப்பட்டு சிறப்புற்ற திருக்கோயில், தற்போது ஜீரணமடைந்த நிலையில் திருப்பணி தொடங்கப்படுகிறது. பிற்கால பாண்டியர் காலத்தை சேர்ந்தது.

அதிஷ்டானம், குமுதம், பட்டிசம், கம்பு, கண்டம், பாண்டு, கூர்மம், மகர வரிமானங்கள் எடுப்பான நிலையில் அழகுபட அமைந்த கருவறை அர்த்தமண்டபம் மகாமண்டபம் கல்திருப்பணி காலவெள்ளத்தால் சிதைந்து தற்போது கோயில் முன்புறம் வைக்கப்பட்ட தெய்வபடிமங்களுக்கும் மூலவரான சுயம்புலிங்க திருமேனியுடனும் நித்திய பூஜைகள் நடைபெறுகிறது.

58.கொத்தமங்கலம் : அருள்மிகு திருமேனிநாத சுவாமி திருக்கோயில்

செட்டிநாடு என அழைக்கப்படும் கானாடுகாத்தான் என்னும் ஊரிலிருந்து கடியாபட்டி ராயபுரம் சாலையில் 6 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. – மேலக்கோயில் என அழைக்கப்படுகிறது.

இறைவன் : அருள்மிகு திருமேனிநாதர் என்ற சூதவனேஸ்வர்
இறைவி : அருள்மிகு சௌந்தர நாயகி

முன்புறம் திருக்குளத்துடன் அழகிய வளைவுகளுடன் கூடிய அலங்காரமண்டபம் வரவேற்பு மண்டபம், வெளிப்பிரகாரம், ராஜகோபுரம் உள்பிரகாரம், கொடிமர மண்டபம், மகாமண்டபம், அர்த்த மண்டபம் கருவறை கூடிய விபூதி சம்புடம் போன்ற கல்த்திருப்பணி. அன்னை தெற்கு நோக்கி அமர்ந்துள்ளார் கோயில் சுற்றிலும் நந்தவனம், அலங்கார ரதக்கொட்டகை, சிப்பந்தி குடியிருப்பு, கோயில் பின்புற குடிநீர்குளம் சூழ அமைப்புடன் கூடிய ஆராதனைக்கு உகந்த ஸ்தலம்.

கோயில் ஸ்தானிகர், சிப்பந்திகள் மானிபங்கள், பண்ணை நிலங்கள் தோப்புகள் உண்டு இவ்வூர் திரு.சி.சின்னக்கருப்பன் செட்டியார் குடும்பத்தினரால் உபயமாக விஷேசபூஜைகள் ஆட்டவிஷேசங்கள், நவராத்திரி விழாக்கள் நடைபெறுகின்றன. நவராத்திரி விஜய தசமியில் சுவாமி நகருக்கு எழுந்தருளி அம்பு போடுவது விசேஷம்.

59. கானாடுகாத்தான் : அருள்மிகு சிவலோகநாதசுவாமி திருக்கோயில்

காரைக்குடி – திருச்சி வழித்தடத்தில் நேமத்தான்பட்டியிலிருந்து கிழக்கே அரை கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இது பெரிய கோவில் என்று அழைக்கப்படுகிறது. "பெரியகோயில் கிராமம்" – கோயிலுக்குச் சொந்தமானது.

இறைவன்: அருள்மிகு சிவலோகநாத சுவாமி சுயம்பு லிங்கத்திருமேனி
இறைவி: அருள்மிகு சௌந்தர நாயகி என்ற ஒப்பிலாதவள்

சுவாமி சுயம்புலிங்கத்திருமேனி அம்பிகை வரப்பிரசாதி இராஜமானிபங்களாக கிராமதானங்கள் விடப்பட்டு கோயில்கொண்ட திருமேனி.

கோயிலூர்த் திருக்கோயில் அமைப்பு போல. திருக்கோயில் கல்த்திருப்பணி. சுமார் நூற்றாண்டுக்கு முன் செய்யப்பட்டது. நித்தியப்படித்தாம் பணியாளருக்கு ராஜமானியங்கள் விடப்பட்டும் கானாடுகாத்தான் லெட்சுமிபுரம் எஸ்எம். குடும்ப அறக்கட்டளையில் உபரி செலவுகள் கூடுதல் சிறப்பு வழிபாடுகள் ஆட்டவிஷேசங்கள், ஆனிப்பிரம்மேற்ஸவம் நடைபெறுகிறது. திருக்குளம் கோயில் வடபுறம் உள்ளாது.

இத்திருத்தலத்தை சுற்றிலும் அருள்மிகு அழகியநாயகி அம்மன், முனீஸ்வரர், பெருமாள், ஐயனார் திருக்கோயில் சூழ்ந்தும் சிறப்புடன் விளங்குகிறது. இதன் குடமுழுக்கு 13.6.2003 அன்று சிறப்பாக நடைபெற்றது.



60. கோட்டவயல் : அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில்

தேவகோட்டை – கல்லல் வழித்தடத்தில் தேவகோட்டையிலிருந்து 12 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

இறைவன் : அருள்மிகு நாகநாத சுவாமி (கிழக்கு நோக்கியது)
இறைவி : அருள்மிகு பிருஹன் நாயகி (தெற்கு நோக்கியது)

குடவரை உட்புறம் அருள்தரு பத்ரகாளி கோயில் முன்புறம் திருக்குளம் விநாயகரும் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், சுரங்கம், இறைவர்க்கு உடன் கருவறை வெளிமண்டபம், பைரவருக்கு கொடிமரம் அருகில் தனி மண்டபம் விநாயகர், முருகன் தனிக்கோட்டங்கள் – பிரகாரம் மதில் சூழ்ந்த கல்திருப்பணி – விரைவில் திருப்பணி நடைபெற முயற்சிக்கப்படுகிறது. நித்திய பூஜைகளுடன், விநாயர் சதுர்த்தி திருவிழா பவனி நடைபெறுகிறது. கிராமமக்களால் ஆர்வத்துடன் போற்றப்படும் இவ்வாலயத்தில் ராஜமானியம் பண்ணை நிலங்கள் உள்ளன.

61. வ.சூரக்குடி : அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர்திருக்கோயில்

காரைக்குடியிலிருந்து – திருச்சி செல்லும் துணை–வழிச்சாலையில் 9கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

இறைவன் : அருள்மிகு சொக்கநாதர் என்ற சுந்தரேஸ்வரர்

இறைவி : அருள்மிகு மீனாட்சி அம்பாள்

அமைப்பு : திருக்குளம், தீர்த்த மண்டபம் பரந்த வெளி கடந்த கிழக்கு குடவறைவாயில், தெற்குக் குடவரை வாயில், மேற்கே காட்சி விநாயகர் தெற்கே குடவரை வாயிலில் ஓவிய வடிவில் கோபுர முனிஸ்வரர் காட்சிதருகிறார். சுவாமி கிழக்கு நோக்கியும், அன்னை தெற்கு நோக்கியும் காட்சி தருகிறார்கள் கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் கிழமேல் நிண்ட மண்டவப்பகுதியில் பள்ளியறை, பைரவர், நந்தி, கொடிமரம் உள்ளடக்கியும் திருமாளிகை சுற்றில் விநாயகர், தெட்சிணாமூர்த்தி, சுப்பிரமணியர், சண்டேசர் மற்றும் கோஷ்டதேவதைகளும், வெளிப்பிரகாரமும் கூடிய பிரம்மாண்டமான கல்த்திருப்பணிக்கோயில்.

வரலாறு : இப்பகுதியை ஆண்ட வன்னிய மகராஜன் பொன்னன் விசயாலயன் தன் வழிபடு கடவுளான மதுரை மீனாட்சி சொக்கேசனை தன் வயோதிக நிலையில் தினமும் வழிபட இயலாத நிலை ஏற்பட்டபோது. மதுரைக் காட்சியை அருளினார். திருவருளின் ஆணையுடன் அம்மன்னன் இக்கோயிலை கட்டினான் என்பது செய்தி. மகாமண்டபத்தை அடுத்த முன்மண்டப பகுதிகள் பிற்கால கட்டிட அமைப்பைச் சேர்ந்தவை. இப்பகுதி நகரத்தார்கள் இதன் கட்டிட வளர்ச்சிக்கு வழிவகை செய்திருக்கின்றனர். இத்திருக்கோயிலுக்கு மானியங்கள் அதிகம் விடப்பட்டும் பூஜை, படித்தரங்கள் வழங்கப்பட்டும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. பிரம்மோற்ஸவம் இல்லை. இத்திருக்கோயிலுக்கு மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களில் தலவரலாற்று நூல் உள்ளது. திருக்குடமுழுக்கு 28.8.1998.

வழிபட்டுச் சிறந்தோர் : இத்திருத்தலத்து இறைவனையும், இறைவியையும், காட்சி விநாயகரையும் சூரியன், முனிவர்கள், சூரபன்பன், தாருகன், சிங்கமுகன், பானுகோபன் முதலான அசுரவர்கம், சங்கப்புலவர்கள், திருமால் ஆகியோர் வழிபட்டு சிறப்படைந்த நிலை தலவரலாறு இயம்பும்.

சூரமாகாளி : இத்திருத்தலத்தின் வடக்கே அன்னை பத்ரகாளி அசுர வதம் நிகழ்த்தும் நிலையில் வடக்குநோக்கி பக்தர்களுக்கு அருள்பளிக்கிறார். குடமுழுக்கு 28.8.1998ல் நடந்தது.

அங்காளபரமேஸ்வரி : இத்தலத்தின் வடக்கே கிழக்கு நோக்கி அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் கொண்டு அருள்பலிக்கிறார். இத்திருக்கோயில் கோயில் பணியாளர்களுக்கு வழிபடு தெய்வமாக விளங்குகிறது.

திருக்குளம் : கோயில் முன்புறங்களில் திருக்குளங்கள் உள்ளன பிரதான திருக்கோயில் திருக்குளம் ஸ்தலபுராணத்தில் குறிப்பிட்டபடி இன்றும்

தாமரைப்பொய்கையாக உள்ளது.

"செய்யதா மரைமுகஞ் சிறந்த வுற்பல
மையவாம் விழியரக் காம்பில் வாய்மல
தையநால் வள்ளைகா தாக நாள் தொறும்
வெய்யதிர் தடாக மெல்லிப் விளங்குமே" – தலபுராணம்

திருத்தலம் மகாமங்கல விழாக்கள் நடைபெறுவதற்கு ராசியான ஸ்தலம் திருமணம், சாந்தி, போன்ற மங்கலவிழாக்கள் செய்யவும் தன் உயர்வு வேண்டி அம்பிகையை ஆராதிக்கவும் ஏற்ற தலம்–மகாவித்வான் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"வளமனை வேண்டினோரும் மகநலம் வேண்டினோரும்
உளமிகு போகமெல்லாம் முற்றிட வேண்டினோரும்
தளர்வரு தெய்வபோகம் சார்தர வேண்டினோரும்
களமிளம் பெருமாள் மேய சூரையே கலத்தல் வேண்டும்"

62. வ.சூரக்குடி : அருள்மிகு கண்ணிறைந்த பெருமாள் திருக்கோயில்

வ.சூரக்குடி சிவாலயத்தின் மேற்கே தனிக்கோயிலாக இருந்த அருள்மிகு கண்ணிறைந்த பெருமாள் ஆலயம் ஜீர்னமடைந்து தற்போது திருப்பணி செய்ய வேண்டிய திருப்பதால். சிவாலயத்தின் மேற்கு பிரகாரத்தில் வைத்து பூஜை நடைபெறுகிறது. பூதேவி, ஸ்ரீதேவி சகிதராகவும் பெரிய திருவடி தொழ நின்ற திருவடிவம் இப்பெருமாள் இறைவனுக்கு ஆயிரம் தாமரைகளால் அர்ச்சனை செய்வதை பழக்கமாகக் கொண்டார். இறைவன் திருவிளையாடலில் தன் விழியையும் விடுபூவாக்கி புதிய மொழிவுடன் கண் நிறைந்தவர் என்பது ஐதீகம்.

சூரியனுக்கு என்று தனிக்கோயிலும் இங்கு உள்ளது. குறிப்பிடத்தக்கது. சூரிய கிரக தோசம் நீங்க பிராத்தனை தலமாக விளங்குகிறது.

63. சன்னவனம் : அருள்மிகு சன்னவன நாதர் திருக்கோயில்

காரைக்குடி – தேவகோட்டை சாலையில் அமராவதிபுதூர் விலக்கிலிருந்து தென்மேற்கே கல்லுப்பட்டி கிராமத்தை அடுத்து சுமார் 6 கி.மீட்டர் தொலைவு.

இறைவன்: அருள்மிகு செந்நெல்வனேஸ்வரர்
இறைவி: அருள்மிகு சௌந்தர நாயகி அம்பாள்.
பிடாரி : வடக்குநோக்கிய அருள்மிகு வடக்கு வாசல் செல்வி.

கருவறைகள் கல்காரமாகவும், முகப்பு மண்டபம் சிமிண்ட் தார்சு கட்டிடமாகவும், பிரகாரத்துடனும், கோயில் வடக்கில் திருக்குளமும், விளங்குகிறது. நித்திய பூஜைகளும், சிவராத்திரி நாளும் சிறப்பாக நடைபெறுகிறது. பூஜை, சிப்பந்திகள் மானிபங்களும், பண்ணை நிலங்களும் உள்ளன.

திருக்கோயில் குடமுழுக்கு 16.9.1998ல் நடைபெற்றது.

64. எழுவன்கோட்டை : அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத விஸ்வநாத சுவாமி திருக்கோயில்

இருப்பிடம் : தேவகோட்டை ராம் நகரிலிருந்து மேற்கே 5கி.மீட்டர் தொலைவு

இறைவன் : அருள்மிகு விஸ்வநாத சுவாமி

இறைவி : அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்பாள்

பத்ரகாளி : அருள்மிகு வடக்குவாசல் செல்வி

திருக்குளம், தான்தோன்றி விநாயகர் திருக்கோயிலை கடந்து பெருவெளியுடன் ராஜகோபுரம், குடவறைவாயில், பிரகாரம் – உயரமான பீடத்தில் கொடிமரம் நந்தி, மேற்பகுதி விசாலமான நிருத்த மண்டபம் தெற்கு நோக்கிய அம்மன் சன்னதி கருவறை, அர்த்தமண்டபம் சுவாமி மகாமண்டபம், அர்த்த மண்டபம், கர்ப்பகிரகம் உள்ளிட்டதும் கலகாரமான பிரம்மாண்டமான திருக்கோயில்.

கோயிலின் வடதிசையில் அருள்மிகு வடக்குவாசல் செல்வி அம்மன் திருக்கோயில் உள்ளது. வடக்குவாசல் செல்விஅம்மனுக்கு இராஜமானிபங்கள் கோயில் பூஜகர் பராமரிப்பில் உள்ளது. சிப்பந்திகள் மானியங்கள், பண்ணை நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன.

நித்திய வழிபாடுகளுடன் வைகாசி விசாகத்தில் தீர்த்தவிழா. பிடாரி பெருந்திருவிழா, பெரிய கோயில் பெருந்திருவிழா, தென்நிலைநாட்டார் பெருமக்களின் பெருத்த ஈடுபாடுடன் நடைபெறுகின்றன.

இத்திருக்கோயில் முன்காலத்தில் இப்பகுதியில் எழுவன்கோட்டையை தலைநகராக கொண்டு ஆட்சி செய்த சிற்றரசனும் பாண்டியன் இராஜபிரதிநிதியுமான காங்கேயன் காலத்து கட்டுமானங்களுடன் தொடங்கி நகரத்தார்களில் திரு.எ.சா.சாத்தான் செட்டியார் உபய திருப்பணியாக 1920ல் கட்டப்பட்டது. வடக்கு வாசல் செல்வி அம்மன் கோயில் திருப்பணி தேவகோட்டை பெரி.செ.குடும்பத்தாரால் உபயதிருப்பணியாக செய்யப்பட்டது. பெரிய கோயில் கும்பாபிஷேகம் 24.4.1989, 31–8–2006ல் நடைபெற்றுள்ளது. அம்மன் திருப்பணி மொ.முத்து .க.குடும்பத்தினரால் செய்யப்பட்டது.



65. அமராவதி புதூர் : அருள்மிகு வாழவந்த அம்மன் சமேத அருள்மிகு வந்தருளிஸ்வரர் திருக்கோயில்

காரைக்குடி – தேவகோட்டை பெருவழிச்சாலையில் உள்ளது. புகழ்பெற்ற குருகுல பாடசாலை அமைந்த ஊர்.

அமைவிடம் : அமராவதி புதூர் வடக்கில் நிலவளம், நீர்வளம் மிகுந்த கண்மாய்க்கரையில் அமைந்தது. நீள் சதுர அமைப்பில் இறைவன் இறைவிக்கு கருவறையும், அர்த்தமண்டபமும், பிரகாரமும், நால்வர், விநாயகர், சுப்பிரமணியர், மகாலெட்சுமி சன்டேசர் பைரவரும்–கல்கரமான ஆலயம். வெளிப்பிரகாரம் செங்கல்கட்டு மதில் சுற்றுடன் கூடியது. சுற்றிலும் தென்னஞ் சோலையும், புளி முதலான பெருமரங்களும் கூடிய பகுதி.

வரலாறு: வரகுணபாண்டியன் தல யாத்திரை செய்து இப்பகுதிக்கு வந்த நாள்.... தன் பரிவாரங்களுடன் வருகை தந்த மன்னன் தேனாறு என்னும் மதுநதியை கடந்து வரும் போது, நதிநீரில் தத்தளித்தான். அந்நிலையில் மதுரை ஈசன் தோன்றி மன்னனைக் காத்தான். அதன் நினைவாக பாண்டியமன்னன் மகாலிங்கத்தை ஸ்தாபித்து வந்தருளிஸ்வரன் என்றும் நாமகரணம் செய்து வழிபட்ட திருத்தலம்.

தற்போது உள்ள திருக்கோயில் கட்டுமானம் புணரமைக்கப்பட்டது. இவ்வூரைச்சேர்ந்தவர்களும் மதுரை ஸ்ரீ மீனாட்சி திருக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்தவர்களுமான வயிநா'கரம் நகரத்தார் குடும்பத்தினரால் செய்யப்பட்டது.

உபகோயில்கள் : இத்திருக்கோயிலின் உபகோயில்களாக அருள்மிகு ஆதினமிளகி ஐயனார் கோயில், அருள்மிகு பெரியகருப்பர் என்றும் அழைக்கப்படும் பிரபலமான அமராவதி கருப்பர்,– மிக வரப்பிரசாதியாகவும் கம்பீரமான தோற்றத்துடன் காக்கும் தெய்வம். இத்திருக்கோயிலுக்கும் சிவாலயத்திற்கும் தனித்தனியே திருக்கோயில்கள் உள்ளன.

இத்திருக்கோயிலுக்கு வடமேற்கே அமராவதிக்கோட்டை. செம்புராண்கல் அமைப்பில் உள்ளது. கோட்டையின் தலைவாசலில் அருள்மிகு உலகநாயகி அம்மன் கிழக்கு நோக்கி இருகரங்களுடன் மீனாட்சி அம்மை போன்று நின்ற திருக்கோலத்தில் சிம்மவாகனம் எதிர்நிற்க காட்சிதருகிறார். ஊர் மத்தியில் சாலையின் வடபுறம் அருள்மிகு விளங்க வந்த அம்மன் திருக்கோயில் உள்ளது. இத்திருக்கோயில்களில் சிவராத்திரி விஷேசம், மறுநாள் மகேஸ்வர பூஜை குலதெய்வ வழிபாடுகள் பல பகுதி மக்களும் வருகை தர சிறப்புடன் நடைபெறுகிறது. நித்திய பூஜைகள் நடைபெறுகின்றன. ராஜமானியங்கள் விடப்பட்டும் நாட்டார் நகரத்தார்களின் ஈடுபாடுகளுடன் வழிபடப்படுகிறது. கும்பாபிஷேக நாள்: 10.2.1995

காளையார்கோவில் சரக திருக்கோயில்கள்

66. அருள்மிகு சொர்ண காளீஸ்வரர் திருக்கோயில். காளையார்கோயில்.

சிவகங்கை – தொண்டி பெருவழிச்சாலையில் சிவகங்கையிலிந்து 18கி.மீட்டர் தொலைவில் உள்ள பிரசித்தி பெற்ற சிவாலயம் கம்பீரமாக வானளாவிய கோபுரம் கண்பார்த்தவுடன் கை கூப்ப வைக்கும்.

அமைப்பு : மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மும்மைச் சிறப்புக்களும் கொண்டது. கானப்பேர்எயில் என்று அழைக்கப்பட்டதும் வேங்கை மார்பன் என்ற வீரம் செறிந்த மன்னனின் கோட்டை இருந்ததுமான இத்திருத்தலத்தில் இறை அடியார்களுக்கு அடைக்கலமான பெரு அரன்– மதில் சூழ்ந்த ஆலயம் மூன்று முக்கிய திருக்கோயில்களை ஒன்றாக்கி உள்ளடக்கியது.

மூர்த்தி : 1) அருள்மிகு சௌந்தரவல்லி அம்பாள் சமேத சோமேசர்
2) அருள்மிகு சொர்ணவல்லி அம்பாள் சமேத காளீஸ்வரர்
3) அருள்மிகு மீனாட்சி அம்பாள் சமேத சுந்தரேஸ்வார்

இம்மூன்று லிங்கத் திருமேனிகளை தனித்தனி கருவறைகளாகக் கொண்டு மூன்று சிவாலயங்கள் ஆகம முறைப்படி பரிவார, சிற்ப சிலா மூர்த்தங்களையும் எழுந்தருளும் திருமேனிகளையும் கொண்டுள்ளது.

பெரிய ராஜகோபுரத்தின் தரிசனத்துடன் முன்னிலையில் திருக்காட்சி தரும் அருள்மிகு சோமேசர்–பிரம்மா, சந்திரன், குபேரன் ஆகியோரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவரின் வலதுபுறம் சௌந்தர்ய வெள்ளமாக காட்சிதரும் அன்னை சௌந்தரவல்லி. இவ்வாலயத்தில் இந்திரனால் வழிபடப்பட்ட சகஸ்திர லிங்கமும் அருள் செய்கின்றது.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் – தனித்தனி கற்றளிகளுடன் கூடிய திருச்கோயில் வரகுணபாண்டிய மன்னனால் பிரதிஷ்டை செய்யப்பெற்றது.

திருக்கோயிலின் வடபுறம் தனித்தளியில் வீற்றிருப்பது அன்னை சொர்ணவள்ளி அம்பிகை.

சன்னதிக்கு வலதுபுறம் இருபிரகாரங்களை உள்ளடக்கி அருள்மிகு சொர்ணவள்ளி அம்மன் சமேத காளீஸ்வரர் திருக்கோயில் இது உமாதேவியாருக்காக பிரத்யட்சமான சுயம்பு லிங்க திருமேனி இத்திருக்கோயிலில் வருணணால் பூசிக்கப்பட்ட வருண லிங்கம் உள்ளது.

ஸ்தலம் : இது காளிதேவி பூஜித்ததால் காளிபுரி எனவும் ரிஷபம் பூசித்ததால் இடபபுரி எனவும் மகாகாளர் என்றழைக்கப்பட்டும் ஸ்ரீகருபர்சுவாமி பூஜித்ததால் கணபுரி என்றும் அழைக்கப்படுகிறது. தேவதாரு மரங்கள் அடர்த்த இப்பகுதி, தேவதாருவனம் என அழைக்கப்பட்டு தெய்வத்தன்மையும் விளங்கிய இப்பகுதியில் லிங்கத் திருமேனியாக சுயம்புவாக காட்சி தந்த அருள்நிலையை வழிபட்டார் சொர்ணவள்ளி என்ற திருநாமத்துடன் இறைவி.

இத்திருத்தலம் பிரம்மா, மகாலெட்சுமி, திருமால், குபேரன் இந்திரன், ஐராவதம் என்ற இந்திரனின் வெள்ளையானை, நித்திருபன் என்ற முனிவர், ஸ்ரீராமன் வேதகன், காம்பிலி நாட்டுமன்னன் நிராகன், சிங்கள மன்னன் ஆகியோர் பூசித்து பேறுபெற்ற திருத்தலம்.

தீர்த்தம்: லெட்சுமி, தீர்த்தம், சுதர்சண தீர்த்தம், அஷ்டதிக்பாலகர் தீர்த்தம், ருத்திரதீர்த்தம், சிவகங்கை தீர்த்தம் ஐராவத தீர்த்தம்.

பாடல்சிறப்பு : இத்திருத்தலம் சைவ சமயக்குரவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் தேவாரமும், கல்லாடர், கபிலர், பரணர், பெரியபுராணம், உமாபதி சிவம், பரஞ்சோதி முனிவர், அருணகிரியார், குமரகுருபரர் ஆகியோராலும் புறநானூற்றில் ஒளவையர், ஆகியோரால் பாடல்பெற்றது.

சேரமன்மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரபெருவழுதி, சோழன் ராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி மூவரும் சேர்ந்து சுந்தரமூர்த்தி நாயனாருடன் தரிசனம் செய்த பேறுபெற்றது. புறநானூற்றில் ஐயூர் மூலம்கிழாரால் பாடல் பெற்றது. திருநாவுக்கரசருக்கு காளைவடிவில் காட்சிதந்த திருத்தலம்.

கல்லெழுத்துக்கள்: 12,13ம் நூற்றாண்டு காலத்தை சேர்ந்த கல்வெட்டுக்கள் கல்லெழுத்து துறையினரால் படி எடுக்கப்பட்டு எண் 166–183 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளன.

கி.பி.640ல் மாறவன்மன் அரிகேசரி சோச்சடையான் வரகுணபாண்டியன் கி.பி.792 – கி.பி.1216 முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன், வானதி ராயர்கள், சேதுபதிகள், சிவகங்கை மன்னர்கள் தளபதிகள், பிரதானிகள் ஆகியோரால் திருப்பணிகள், நிவந்தங்கள் செய்யப்பட்டும் கிராமதனங்கள் விடப்பட்டும் திருக்கோயில் வளர்ச்சியுற்றுள்ளது. இராஜகோபுரம் இராஜபிரதிநிதி மாமருதுசகோதரர்களாலும் அம்பிகை இராஜகோபுரம் முதன் முதலாக வரகுணபாண்டியராலும்எழுப்பப்பெற்றவை.

திருக்கோயிலின் உபகோயில்கள் :

67. அருள்மிகு வாள்மேல் நடந்த அம்மன் திருக்கோயில்

காளையார்கோவில் பெரிய ஆலமரத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்த திருக்குளம் கூடிய அருள்மிகு வாள்மேல் நடந்த அம்மன் திருக்கோயில் பாண்டியனும், சோழனுக்கும் நடந்த போரில் பாண்டியர்களைகாக்க ஆற்றல் தந்து வாள்மேல் நடந்தாள் என்பது ஐதீகம் பொய்ப்பிள்ளையை மெய்ப்பிள்ளையாக அற்புதம் செய்தவள் இந்த அன்னை. "ஜெய் பவானி" முழக்கம் செய்த மாமன்னன் சிவாஜிக்கு, வீரத்தின் விளைக்களனை தந்த பவானியைப் போல சிவகங்கை சீமையின் வீர வரலாற்றில் ஆற்றல் மிக்க மறவர் சேனைக்கு அருந்துணை செய்தவள் இம்மகாசக்தி. பக்தர்கள் வேண்டுவோருக்கு மனமிறங்கி அருள் தருகிறாள்.

திருவிழாக்கள் :

வைகாசித்திருவிழா – சோமேசருக்கும்
ஆடிப்பெருவிழா – காளைநாதருக்கும்
நவராத்திரிவிழா – சங்காபிஷேகம்
திருவாதிரைருக்கும் – தைப்பூசபெருவிழா

காளைநாதருக்கும் மற்றும் ஆட்டவிஷேசங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. அம்மன் கோவில் குடமுழுக்கு நாள் 3.5.1995 பெரியகோவில் குடமுழுக்குநாள் 1.2.1998.

: கலைச்சிறப்பும், பண்டையநாகரீகத்தின் வரலாறும், அருளாற்றலும் மன நிம்மதியும் மகிழ்ச்சியும் தரும் சுற்றுலா தலமான இது வாழ்கையில் தரிசிக்க வேண்டிய திருக்கோயில் இத்தலத்தில் மங்கல நிகழ்ச்சிகள் திருப்பூட்டுதல் சாந்தி, சதாபிஷேகம், பூரணாபிஷேகம், பிதிர்க்கடன் நிறைவேற்றுதல், கிரகசாந்தி போன்ற பரிகாரங்கள் செய்ய சிறந்த தலமாக விளங்குகிறது. தேவகோட்டை AL.AR. அறக்கட்டளையும் தி.ராம.தி.அறக்கட்டளையும் திருக்கோயிலுக்கு சிறந்த சேவைகள் செய்வதுடன் அன்பர்களுக்கும் விடுதிகள், தங்கும் வசதிகள் செய்து வழிபாட்டை மனநிறைவு பெறச்செய்கின்றன.

68. ராதானூர் : அருள்மிகு தில்லைநாயக சுவாமி திருக்கோயில்

இருப்பிடம் : திருவாடானை வட்டத்தில் காளையார்கோவிலிருந்து 20 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

இறைவன் : தில்லைநாயக சுவாமி

இறைவி : சௌந்தர நாயகி அம்பாள்

கற்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் பிரகாரம் வலது கோடியில் உள்ளடங்கிய கற்றளி சுமார் 500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. சுவாமி கருவறை மேற்கு நோக்கியது அம்மன் தெற்குநோக்கி அருளும் நிலையில் உள்ளது. நித்திய பூஜைகளுடன் நடைபெறுகின்றன. பெருவிழாக்கள் இல்லை அமைதியான திருத்தலம் மகாகும்பாபிஷேக திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

69. கல்லல் : அருள்மிகு பகச்சால விநாயகர் சௌந்தர நாயகி அம்பாள் சமேத சோமசுந்தர் திருக்கோயில்

அமைவிடம் : காரைக்குடி – காளையார்கோவில் வழித்தடத்தில் நடுவில் உள்ளது கல்லல் மாநகர்.

அமைப்பு : திருக்குளத்துடன் கிழக்குநோக்கியுள்ள கல்காரமான சிவாலயம் ஆகம முறைப்படி பரிவார திருமேனிகளை தாங்கி நிற்கிறது.

புராணம் : சந்திரனால் பூசிக்கப்பட்டு அருள்மிகு சோமசுந்தரர் என பெயர் வழங்குகிறது. சந்திரனால் பூசிக்கப்பட்டு காளையார்கோவில் திருத்தலத்திலும் இறைவன் அருள்மிகு சோமநாதராக காட்சி தருகிறார். வானரவீரமதுரை என்னும் மானாமதுரையில் சந்திரனால் பூசிக்கப்பட்டு அருள்மிகு சோமநாதராக காட்சிதருகிறார். இறைவி இம்மூன்று திருத்தலங்களிலும் சௌந்தர வடிவம் தாங்கி சௌந்தரவல்லியாகவும் விளங்கிறார்.

வரலாறு : மாளவச்சக்கரவர்த்தியால் முதல் திருப்பணி செய்யப்பட்டு வளர்ச்சி அடைந்தது. பிற்காலத்தில் நகரத்தார்களால் பூரணமாக திருப்பணி முழுமை அடைந்துள்ளது.

திருக்குளம் சந்திரபுஸ்கரணி என அழைக்கப்படுகிறது. இங்குள்ள ஸ்கந்தர் சிலாவிக்கிரகம் சந்திர புஸ்கரணி தீர்த்த திருக்குளத்தில் தூர்வாரும் போது கிடைத்த திருமேனியாகும்.

திருவிழாக்கள் : நித்திய வழிபாடுகளுடன் ஆட்டவிஷேசங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. கும்பாபிஷேகநாள் **3.9.1998.** மாசி மாதத்பெருந்திருவிழா தேரோட்டம் சிறப்பாக நடைபெறுகிறது.

அருள்மிகு குன்னமாகாளியம்மன் :

பெரியகோயிலின் வடக்கே, வடக்குநோக்கி அமர்ந்த சிம்மவாகினியான ஜெகதாம்பிகை குன்னமாகாளியாக அருள்செய்கிறார். குன்னங்கோட்டை நாட்டார்கள் பிரதானமாக வழிபடும் அன்னைக்கு பூச்சொரிதல் விழா சிறப்பாக நடைபெறுகிறது. வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் சுமங்கிலிகளால் தொழுப்படும் இந்த அருட்சக்தி சகல புருஷார்த்தங்களையும் அருளும் அம்பிகை. “சதுர்வர்கேஸு சன்டிகாம்” என்பதை நிரூபிப்பவர்.

70. அரண்மனை சிறுவயல் : அருள்மிகு மும்முடிநாதர் திருக்கோயில்

கல்லல் – காளையார்கோவில் சாலையில் கல்லல் நகரிலிருந்து 5 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

இறைவன் : அருள்மிகு மும்முடிநாதர் சுவாமி

இறைவி : அருள்மிகு கருணாகடாச்சி அம்பாள்

மூவரசர்களும் சேவித்த பழமையான திருக்கோயில். சோழர்பாணி கட்டுமானங்களுடன் கூடிய திருக்கோயில். புதவடை, பீடம், உபபீடம், அதிஸ்டானம், பத்மம், ஜெகதி, குமுதம், கண்டம், வேதியல், கம்பு, பிரதிஸ்தானம், கபோதகம், கூர்மம், மகர வரிமானங்களுடன், அந்தராலயம், ஆகியன கலைநுணுக்கங்களை பறைசாற்றும். அதற்கு சற்றும் குறைவுபடாதவகையில் கருவறையைச் சுற்றிலும் 9 முதல் 12 நூற்றாண்டு கல்லெழுத்துக்கள் நிறைந்து வரலாற்றை அறிவிக்கும் திருக்கோயில்.

அமைப்பு: . கிழக்கு நோக்கிய இராஜகோபுரம் பிரகாரம், பள்ளியறை, அன்னை அருளாட்சி செய்யும் தனிக்கற்றளி – தெற்குநோக்கி நின்ற திருக்கோலத்தில் இருகரம் கொண்டு அருளும் கருணை திருவுரு.

அம்பாளின் அருகில் கொடிமரம், பலிபீடம் நந்திகேஸ்வரர் வடக்கே தனித்தளியுடன் பைரவர். துவாரபாலகர் அனுமதியுடன் உள்ளே செல்லும்போது மகாமண்டபம், அதிகார நந்தி, தெற்குநோக்கிய ஆடல்வல்லான் அர்த்தமண்டபம் – கருவறையில் காட்சிதரும் லிங்கத்திருமேனி அருள்மிகு மும்முடிநாதர். பிரகாரம் தேவகோஷ்டங்களில் நர்த்தன விநாயகர், ஆலமர்செல்வன், லிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை. சன்டேசநாயனார்–தனித்தளிகளில் கன்னிமூல கணபதி, வள்ளிதெய்வானைசமேத சுப்பிரமணியர், அருள்பெற்று மீண்டும் அன்னையின் பேரருளுக்கு அவள்முன் அமர்கிறோம்.

வரலாறு: அது கார்காலம்–கறங்குஇருள் மாலைப்பொழுது அடைமழை, அங்கும் இங்கும் மின்னல். அவ்வப்போது இடி. ஆட்டங்கானும் மனதுடன் தமிழ்பாட்டுப்பாடும் அவ்வை அருந்தமிழ் கிழவி அந்தோ!! வருகிறாள்.

தள்ளாத வயதில் தடியூன்றி தங்கும் இடம்தேடி வரும் அன்னைக்கு யார் அடைக்கலம்? – தூரத்தே சிறுவெளிச்சம். பெருவெளிகண்ட அவ்வை திண்ணையில் ஒதுங்குகிறாள். உள்ளே இருந்து ஒரு குரல்–வருக! அம்மையே வருக!! என வரவேற்றது. ஈரம் துவட்ட துணிகொடுத்தது, அன்புடன் உபசரித்து வயோதிகமாதுக்கு வணக்கம் செய்தது. அழகிய கன்னி, வந்தவள் அவ்வை என்பதை அறியாதவள். நீலசிற்றாடை வழங்கி அருசுவை உணவு தந்து ஆதரித்தாள். நன்றி மறவா நாடுபோற்றும் அவ்வை தன்னை உணர்த்துகிறாள். கன்னிவடிவில் நிற்கும் கருணைவடிவை கருணாகடாச்சியாகவே கருதுகிறார்.– கன்னிக்கேற்ற காளையை மூவேந்தர் முன்னிலையில் மணம்முடிக்கிறாள்.

மூவேந்தர் பூசித்த மூர்த்தி மும்முடிநாதரானார்.

71. புலிக்குத்தி அம்மன் திருக்கோவில்


அரண்மனை சிறுவயல் பெரியகோவிலுக்கு வடமேற்கே 500 அடி தூரத்தில் கோவில் கொண்டு அருளும் அன்னை புலிக்குத்தி அம்பாள் நாட்டுமக்களால் போற்றி வணங்கப்படும் சிம்மவாகினி எட்டுக்கரங்களுடன் மகாசண்டியாக காட்சி தருபவள் வடக்கு நோக்கிய திருமேனி. நித்திய பூஜைகளுடன் விஷேச வழிபாடுகள் பூச்சொரிதல் விழாக்கள் அன்னைக்கு உவகையைஊட்டுவன. சுவாமி, அம்மன் கும்பாபிஷேக நாள் 20.4.1999. அறம்பொருள் இன்பம் வீடு தரும் இவள் மேலான பராசக்தி.

“ வேதம் உணர்ந்தோர் நினைப் பாரதியாய் விளம்பிடுவர்
நாதம் முதல்வி! நினை இந்திரையாய் நவின்றிடுவர்
ஏதமில் சங்கரி! என்பர் நீ மூலத்தில் இலங்கு பரை
காதல்புவனம் மயக்கிடு சித்தாம் களிமயிலே”

– சௌந்தர்ய லகரி

இத்திருத்தலத்தின் அருகே அருள்மிகு வல்லநாட்டு கருப்பர் கோவில் உள்ளது. பெரிய கோவிலின் மிராசு கணக்கு, வைராவிகளின் குலதெய்வமாக திகழும் இத்திருக்கோவிலில் விளங்கும் மகாகாளி தனிச்சிறப்புடையவள். மண்விக்கிரகமாக இருதாள்களும் பத்திர ஆசனமாக பத்துக்கரங்களுடன் காட்சி தரும் மகாசக்தி

“ முத்து வதனத்தி முகம்தோறும் முக்கண்ணி
பத்துக்கரத்தி பராபரன் பைந்தொடி
சக்தி சதளி சடாதரி
வித்தகி என் உள்ளம் மேவிநின்றாளே” – திருமூலர் திருமந்திரம்



72. அரண்மனைக்கரை அருள்மிகு கருமேனி அம்மன் திருக்கோயில்

அமைவிடம் :–

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம். இளையான்குடி நகரிலிருந்து 15 கி.மீ. தொலைவுள்ள கிராமம் அரண்மனைக்கரை. இதில் அருளாட்சி செய்யும் அன்னை பராசக்திதான் அருள்மிகு கருமேனி அம்மன்.

கருவறை அர்த்தமண்டபம், மகா மண்டபம் கூடிய திருக்கோயில் மராமத்து திருப்பணிகள் தற்போது நடைபெறுகின்றன. புதிய கொடிமரமும் கொடிமர மண்டபமும் அன்னைக்கு ஆர்வமுடன் எழுப்பட்டுள்ளது.

வரலாறு :-

ஆதிபராசக்தியின் ஆக்குதல். காத்தல். அழித்தல். மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்கள், அவ்வப்போது இடைவிடாது இயங்கி வருகின்றன. அதர்மம் அதிகமாகி தர்மத்திற்கு தளர்வு நேரும் போதெல்லாம் துஷ்டநிக்ரகம் செய்து சிஷ்ட பரிபாலனம் செய்வதற்கு அவ்வப்போது அவதாரங்கள் எழுப்படுகின்றன. ஆதிசக்தியின் செயல்பாடு – தான் எவ்வித மாறுபாடு அடையாமல் தன் இச்சா மத்திரத்தால் செய்யப்படுவது, தன்னிலிருந்தே எல்லா சக்திகளையும் தோற்றுவித்து செயலை முடிப்பது என சாஸ்திரங்கள் பேசுகின்றன.

மகாமாயையின் மதுகைடபவதம் ஸ்ரீமன் நாராயணன் மூலமாக பிரம்மா மகாசத்தியை பிரார்த்தனை செய்த நிலையில் மகாமாயா சக்தியால் நடைபெற்றது எனவும், பல யுகங்களுக்கு பிறகு மகிஷாசுரவதம் எல்லாத் தேவர்களின் சந்திகளும் ஒருங்கு திரண்டு ஆதி மகாலெட்சுமியின் வடிவில் நடைபெற்றது எனவும், அதன் பின் பல கல்பங்கள் சென்ற பிறகு சண்டன், முண்டன், சும்பன், நிசும்பன் முதலான அசுரக்கூட்டங்கள் மகாசக்தியின் விருப்பத்திற்கிணங்க சக்தி பல்வேறு வகைகளில் வெளிப்பட்டு அவற்றின் மூலம் நடைபெற்றன எனவும் தேவி மகாத்திமியம் அறிவிக்கிறது.

சண்டன், முண்டன், சும்பன், நிசும்பர்களின் சேனாபதி ரக்த பீஜன். இவனுடைய ஒவ்வொரு ரத்த அணுக்கள் கீழே விழும்போது எல்லாம் புதிய அசுரர்கள் அவனைப் போலவே ஆற்றலுடன் தோன்றுவர். ரத்த பீஜனை நிர்மூலமாக்க ஆதிசக்தியின் விருப்பதால் தோற்றுவிக்கப்பட்டவளே கருத்த திருமேனியும் பயங்கர வடிவமும் உடைய மகாகாளி இவளே கருமேனி அம்மன் எனத்திருப்பெயர் கொண்டவள், இவளுடைய ஹூங்காரத்தில் அசுரர்களின் ரத்தம் பயத்தல் உறைவதுடன் அஸ்த்திர சஸ்த்திரங்களால் வெளிப்பட்ட குருதிச்சொட்டுகள் பூமியில் விழாபடி தன் பானபாத்திரத்தில் தாங்கி உறிஞ்சப்பட்டு அசுர மாயை முற்றிலும் தீர்க்கப்பட்டதாக தேவி மகாத்மியம் ஜெய கோஷமிடுகிறது. பாரத வழிபாட்டு முறையில் மகாகாளியின் வடிவமும் மந்திரபிரயோகங்கள் அவற்றின் தந்திரங்களும் உயர்ந்த இடத்தைப்பெற்றுள்ளன. மகாகாளியின் வழிபாடு இல்லாத கிராமங்கள் இல்லை எனலாம், பெண்மையின் வடிவமாக அன்னைச் சக்தியாக, துன்பங்களை நீக்கி இன்பம் தரும் சக்தியாக. தனக்கு வேண்டும் இஷ்ட வேண்டுதல்களை தயை நிறைந்த உள்ளத்தோடு நிறைவேற்றுபவள். சதுர்வர்க்கேசு சண்டிகாம்; என சாஸ்த்திரங்கள் கூறுகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு நல்கும் அன்னையின் வழிபாடு பக்தர்களின் கால அளவில் பலயுகங்களாக மகாகல்பங்களாக நடைபெற்றுவருகின்றன. கிராம தேவதையை திருப்திபடுத்தினால் கிராமத்தில் சுபிட்சம் உண்டு என்பதாகும். தன்னால் இயன்ற அளவில் சிறுபொங்கல் இட்டு படைத்து பலருக்கும் பகிர்ந்தளிப்பதில் ஆனந்தமும் திருப்தியும் அடைபவள் அன்னை பராசக்தி. எல்லை மீறிய ஆற்றலை உள்ளத்தில் அன்பு வடிவில் அடக்கும் முயற்சி.

காலம்தோறும் காக்கும் தெய்வமாக, கிராம தெய்வமாக, திகழும் அன்னை சக்தி அவ்வப்போது தன் அருளாற்றலை வெளிப்படுத்துவதில் மாறுதல் இல்லை. பேரிறைவன், துன்பட்ட நிலையில் பிரசவவேதனையில் துடிக்கும் தாய்க்கு பிரசவம் பார்த்த நிலையை தாயுமானவனாக கொண்டாடுகிறோம். அப்பனுக்கே இந்த இரக்கம் இருத்தால் பெற்ற தாய்க்கு? திருவிளையாடற் புரானத்தில் தாய்பன்றி இறந்தபின்பு பன்றிக்குட்டிகள் பசியால் துடிக்கும் அவலநிலையைக் கண்டு இரங்கி மதுரை சொக்கநாதர் பெண் பன்றிவடிவில் பாலுட்டிய காட்சி இன்றும் பன்றி மலையாக வானுயர நிற்கிறது. தகப்பனுக்கே இந்த கருணை என்றால் பெற்ற தாய்க்கு இல்லாமலா! இப்பகுதியில் பிரசவ வேதனைப்பட்ட ஒரு தாய்க்கு ஒரு யாதவ பெண் வடிவு கொண்டு கருமேனி அம்மன் பிரசவம் பார்த்து தாயையும் சேயையும் ரட்சித்த காட்சி தலத்தின் விசேஷ திருவிளையாடலாக மரபு வழி செய்தி தெரிவிக்கிறது. இத்திருத்தலத்தில் பிரசவவேதனை இல்லை. அனைத்தும் சுகப்பிரசவமாக கற்பரட்சாம்பிகை இங்கு கருமேனி அம்மனாக சுகப்பிரஸவ நாயகியாக வீற்றிருக்கிறாள். கோபமுள்ள இடத்தில் தானே குணம் இருக்கும். தந்திர நூல்கள் இவளின் வழிபாடு அனைத்து நன்மைகளையும் அருளுகிறது என்று தெரிவிப்பதில் ஐயமில்லை.

இத்திருத்தலத்தில் கருமேனி அம்மனுடன், முனீஸ்வரர். மகாகாளர் எனப்படும் கருப்பர் முதலான காவல் தெய்வங்கள் உள்ளன.

திருவிழா :–

மாசிமகம் வானியியல்படி கும்ப ராசியில் மகநட்சத்திற்கு உரியவனான கதிரவன் காட்சி தரும் நன்னாள். இன்னாளில் அன்னை கருமேனி அம்மனுக்கு சிறப்பு வழிபாடும், பால்குடம், காவடி, பூக்குளி மித்திதல் எனப்படும் நெருப்பில் இறங்குதல் முதலானவை சிறப்புடன் நடைபெறுகிறது. அன்னையிடம் விடும் வேண்டுதல்கள் நிறைவேறாமல் இருந்ததில்லை. நேர்த்திக்கடன்கள் நிறைவேற்றப்படுகின்றன. புதிய வேண்டுதல்கள் அன்னையின் அருள் தம்மக்களுக்கு என்றைக்கும் உண்டு.

அன்னையின் மகிமை உணர்ந்த மக்கள் கொண்டாடும் குல தெய்வம், மேன்மை தரும் என்பதற்கு இணங்க பிரம்மோத்ஸவம் நடத்துவதற்கு பெருமுயற்சி மேற்கொண்டும், மகாகுடமுழுக்கு செய்வதற்கும் உரிய வகையில் திருப்பணி செய்துவருகின்றனர்.

அன்னை மகாகாளியை உபாசிக்காத கவிஞன் இல்லை. வீரர்கள் இல்லை. அவளின் அருள் பெறாத பாக்கியசாலிகள் யார்?

“பின்னோர் இரவினிலே கரும் பெண்மை அழகு ஒன்று வந்தது
கண்முன்பு
கன்னி வடிவமென்றே களி கண்டு சற்றே அருகிற் சென்று
பார்க்கையில்

அன்னைவடிவமடா இவள் ஆதிபராசக்தி தேவியடா
இவள் இன்னருள் வேண்டுமடா பின்னர் யாவும் உலகில் வசப்பட்டு போமடா
செல்வங்கள் பொங்கிவரும் – நல்ல
தெள்ளறிவு எய்தி நலம்பல சார்ந்திடும்
அல்லும் பகலும் இங்கே இவை
அத்தனை கோடிப்பொருளின் உள்ளே நின்று
வில்லை அசைப்பவளே இந்த
வேலை அனைத்தையும் செய்யும் வினைச்சியை
தொல்லை தவிர்ப்பவளை நித்தம்
தோத்திரம் பாடி தொழுதிடுவோமடா – மகா பாரதி

73. திரப்பூங்குடி : ஸ்ரீ மார்க்கண்டேய சுவாமி திருக்கோயில்

அமைவிடம்: அரண்மனை சிறுவயல் கிராமத்திலிருந்து தென் கிழக்கே 3கி.மீ தொலைவு

இறைவன் : அருள்மிகு மார்க்கண்டேஸ்வரர் சுவாமி.

இறைவி: அருள்மிகு எலுவுடையாள் அம்மாள்.

அமைப்பு: அர்த்த மண்டபத்துடன் கூடிய சிறு கற்பகிரகம். அருகில் தெற்கு நோக்கி அர்த்தமண்டபம் கர்ப்பகிரகத்துடன் அன்னைக்கு தனித்தளி, சண்டேசர், பைரவர் இல்லாத திருக்கோயில். அனுக்ஞை விநாயகர், தண்டபாணி திருஉருவங்கள் – மதில் சூழ்ந்த பிரகாரம் உள்ளடக்கிய திருக்கோவில் சற்று தூரத்தே காலனை உதைத்த இறைவன் பெயரால் உதைந்தான் ஊரணி என்ற திருக்குளம். உதைந்தான் ஊரணி, மற்றும் பிடாரிகோவில் உள்ளது.

மூலவர் லிங்கத்திருமேனி சதுர ஆவுடையுடன் கூடியது. சதுர வடிவ ஆவுடை பழைய காலத்தைச் சேர்ந்தது. பிற்காலங்களில் ஆவுடை விருத்த வடிவில் அமைக்கப்பட்டன என்பது மரவு. அன்னை தெற்கு நோக்கி இருகரங்களுடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறாள்.

மார்க்கம் – ஒழுக்கம்; மாரகம் – மரணம்; என்பது பொருள். இறை ஒழுக்கத்துடன் மாரகம் நீங்கிய மகரிஷி பிருகு – நியாதி; தாதா. அயதி, மிருகண்டு வம்சாவழியில் தோன்றிய மார்க்கண்டேயர் சிறுவயதிலேயே இறை நாட்டம் கொண்டு விதியை வென்றவர் – சீரஞ்சிவி, – காலத்தை வென்றவர். காலத்தத்துவமே கடைசியானது. அதனையும் வென்றவர் இறைவன் அடியவர்.

அன்னையின் எழில்பெயர் எலுவுடையாள் அழகிய தமிழ்ப்பெயர் எலு–தோழமை; எலுவன்–தோழன், எலுவை–தோழி எலுநன்–சோழன் என தமிழ் அகராதி பேசும்.



சாக்கை அருள்மிகு உய்யவந்த அம்மன்
சாக்கோட்டை

தோழமையுடைய அன்னை இறைவனுக்கும் தோழி. அடியவர்களுக்கும் தோழி. தோழமை யோகத்தில் வேறுபாடு இல்லை. உயர்வு தாழ்வு இல்லை. காலவித்தியாசம் இல்லை. அன்பும் பண்பும் கூடிய பாங்கே தோழமைக்கு அடிப்படை. "குற்றம் செய்யினும் குணம் எனக் கருதும் கொள்கையால் மிகைபல செய்தேன்" என்னும் சுந்தரனும் தியாகேசனும் தோழர்கள் என்பது தெரிந்த கதை.

வரலாறு: கானகம் வந்தான் ஒரு காவலன்... அரசனுக்கு அயர்வு ஏற்பட்டது. மயங்கிய மன்னனுக்கு மரணபயம் ஏற்பட்டது. திடீர் நெஞ்சுவழி – அக்கம்பக்கத்தில் ஆஸ்பத்திரி இல்லையா? என்ற நிலை. தன் இறுதி நிலை இப்படியா! என நினைத்த மன்னன் இறைவனை சரணடைகிறான். அடியார்கள் அனைவருக்கும் அருள்வடிவில் காட்சி தரும் ஆண்டவன்– அடியார் வடிவில் மார்க்கண்டேயராக காட்சிதருகிறார். அஞ்சேல்! என அபயம் தருகிறார். மன்னனும் சிரஞ்சிவியாகிறான்.

"அரணம் பொருள் என்று அருள் ஒன் றிலாத அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என நின்ற நாயகி தன் அடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே"

–அபிராமி அந்தாதி

இறைவன் திருநாமம், இறை அடியார் திருநாமம், மரணத்தை நீக்கும் வல்லமை உடையவை. இயமன் தன் வலிய தூதர்களை பார்த்து இறைஅடியார்கள் இருக்கும் திசைக்கு போக வேண்டாம் என்பானாம்.!!

"ஐயநின் திருநாமம் நவில்வோரை நவில்வோரை அவர்தம் பாதம்
கையதானால் தொழுவோரைத் தொழுவோரைக் கண்ணில் கண்டால்
செய்ய அவர் இருந்த திக்கதுவும் செலவேண்டா எனக்காலன் தன்
திறல் தூதர்க்கு
பைய அழைத்து அவர் செவியில் உய்ய ஒரு கோடி உரை செய்வான்"

– கூர்மபுராணம்

"அந்த நாளுன் அடைக்கலம் புகுந்த அவனைக்காப்பது காரணமாக
வந்த காலன்தன் ஆருயிர் அதனை வவ்வினாய்க்கு உந்தன் வன்மை
கண்டடியேன்
எந்தை நீ எனை நமன் தமற்அணுகிற் இவன் மற்று என் அடியான் என
விலக்கும்
சிந்தையால் நின் திருவடி தொழுதேன் செழும் பொழில் திருப்புன்கூர்
உள்ளாளே"

–என்பது நமது தோழர் சுந்தர்மூர்த்தியின் மொழி. நமக்கும் சேர்த்துத்தானே!!

74. கற்குடி: அருள்மிகு அகஸ்தீஸ்வரர் திருக்கோவில்

கல்லலிலிருந்து சுமார் 18 கி.மீட்டர் தொலைவில் உள்ள கோவில். ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்திருப்பணி சுவாமி அகஸ்தீஸ்வரர் வரப்பிரசாதி. இத்திருக்கோவில் ஜீரணமடைந்த நிலையில் குடமுழுக்குக்கு தயாராகிறது.

75. உருவாட்டி : அருள்மிகு பெரியநாயகி அம்மன் திருக்கோயில்


அமைவிடம்: காளையார்கோவில் இருந்து கிழக்கே 14 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. சிவகங்கை தொண்டி வழிச்சாலையில் புலியடிதம்பத்திலிருந்து 3 கி.மீட்டர் தொலைவில் உள்ளது.

அமைப்பு: ராஜகோபுரம் மதில் சுவர் சூழ்ந்த பிரகாரம், மகாமண்டபம், அர்த்தமண்டபம், கர்ப்பகிரகம், அம்பாள் நின்ற திருக்கோலத்தில் வடக்குநோக்கி அருளும் திருமேனி.

காலம்: மிக பழமையானதும் கிராம மக்கள் குலதெய்வமாக வழிபட்டு வருவதுமான இத்தலம் காளையார்கோவிலில் தோன்றிய காலம் முதல் உள்ளதாக தெரிகிறது.

பூஜைகள்: யாதவர் வகுப்பைச்சேர்ந்தவர்கள் மிக்க சிரந்தையுடன் தலை முண்டகம் செய்து. ஆசாரத்துடன் பூஜைசெய்கிறார்கள் பூஜை செய்பவர்கள் தாங்கள் முறை முடியும் வரை வீட்டுக்குச் செல்வதில்லை ஆலயத்திலேயே தங்கி இருப்பது வழக்கம். இத்திருக்கோயிலுக்கு மேற்கே 1 கி.மீட்டர் தொலைவில் சோணைக்கருப்பர் கோயில் உள்ளது.

திருவிழா : பங்குனித்திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பிரார்த்தனை ஸ்தலமாக உள்ளது. திவட்டி, கொட்டு, குளவை சப்தங்களுடன் தன் பக்தர்களுக்கு காட்சி தருவதாக அம்பாளை குலதெய்வமாகக் கொண்ட பக்தர்கள் தன் அனுபவங்களை தெரிவிக்கிறார்கள். குடமுழுக்கு நாள் 6.7.1998.



76. சேத்தூர்: அருள்மிகு சுந்திரசேகர சுவாமி திருக்கோவில்

அமைவிடம்: சிவகங்கை வட்டம் பரமக்குடியிலிருந்து 22 கி.மீட்டர் தொலைவு

இறைவன்: அருள்மிகு சந்திரசேகர சுவாமி லிங்கத்திருமேனி

இறைவி: அருள்மிகு மரகதவள்ளி அம்பாள்

அமைப்பு: கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், வெளிமண்டபம் பிரகாரம் கூடியது.

கல்லெழுத்துக்கள்: பாண்டிய அரசன் நின்ற சீர் நெடுமாறன் காலத்தவை நித்திய பூஜைகள் நடைபெறுகின்றன. உபகோயிலான அருள்மிகு கலியுக நாயகி அம்மன் திருக்கோயிலுக்கு திருப்பணிகள் நடைபெற்று 8.9.2003 மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

77. திருவேகம்பத்து: அருள்மிகு ஏகாம்பர நாதர் திருக்கோயில்

அமைவிடம்: காளையார்கோயிலிருந்து தொண்டிச்சாலையில் சுமார் 15 கி.மீட்டர்

அமைப்பு: கல்காரம்

இறைவன்: அருள்மிகு ஏகாம்பர நாதர் லிங்கத்திருமேனி

இறைவி: அருள்மிகு காமாட்சி அம்பாள்

சிறப்பு: நாரீசு ரம்பா, நகரேசு காஞ்சி

புஷ்பேஸுஜாதி புருஷேஸு விஷ்னு என்பது –பாரவியின் பாடல். காஞ்சிபுரம் பல்லவமாமன்னர்களின் ஆட்சிதிறனுக்கு எடுத்துக்காட்டான நகரம் ஆடலும், பாடலும், சிற்பமும், ஓவியமும், பரதக்கலையின் பண்பாடும் பாரத தேசம்மட்டும் அல்லாது உலகம் முழுதும் பரவும் வண்ணம் வளம்நிறைந்த நகரம்.

இறைவன் ஏகாம்பரனாக – எல்லாஇடத்திலும் நிறைந்தவனாக காட்சி தரும் இறைவனுக்கு அருளரசியாக அன்னை லலிதாம்பிகை காமாட்சி வடிவில் மக்களுக்கு அனைத்து இச்சைகளும் நிறையத்தரும் வகையில் மண்ணால் வடிவம் உருவாக்கி வழிபடும் அழகை ஆன்றோர்கள் கண்டுமகிழ்ந்தார்கள்.

“மனக்கோல் நினக்கு என வடிவுவேறு இல்லையே”

–என்பது பழந்தமிழ் பரிபாடல்.

நாம் நினைக்கும் உருஅல்லாது தனக்கென உருக்கொண்டானா? என அறிய இயலாத மானிடவர்க்கம் அவரவர் தாம்தாம் அறிந்தவாரேத்தி கல்லிலும் மண்ணிலும் கலைவடிவமாக்கி வழிபடுவது மானிட மரபு அவ்வண்ணமே இத்திருத்தலத்திலும் அருள்மிகு ஏகாம்பரர்–காமாட்சி அன்னையை வழிபடுகின்றனர். காஞ்சி பீடாதிபதிகளும் இத்திருத்தலத்திற்கு வந்து அன்மையிலும் அருள்செய்தனர் என்றால் இதன் பெருமையை எவ்வாறு இயம்புவது?

நித்தியபூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றன கும்பாபிஷேகநாள்15.7.1998

இத்திருத்தலத்தில் ஸ்ரீ லலிதா சகஸ்த்ரநாமம் அர்ச்சனை செய்வது ஆயுஸ்விருத்தியைத்தருகிறது.



78. மாராத்தூர்: அருள்மிகு மூர்த்தி நாயனார் திருக்கோயில்

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் இருந்து 9.கி.மீட்டர்

இறைவன்: அருள்மிகு மூர்த்தி நாயனார் என்ற கிழக்கு நோக்கிய லிங்கத் திருமேனி

இறைவி: அருள்மிகு சௌந்தர நாயகி தெற்கு நோக்கிய சன்னதி மூலஸ்தானம் அர்த்த மண்டபம், மகாமண்டப கல்த்திருப்பணி

ஸ்தல விருட்சம்: கடுக்காய் மரம். இம்மரம் ஒரு பக்கம் பட்டும் மற்றொரு பக்கம் பசுமையுடையதாக காட்சி தரும்.

63 மூவரில் மூர்த்தி நாயனாரும், முருக நாயனாரும் இத்திருத்தலத்திற்கு வருகைதந்து வழிபாடு செய்துள்ளதாகத் தெரிகிறது. மூர்த்தி நாயனார்: இறைவனுக்கு சந்தனம் அரைத்துக் கொடுப்பதை வழிபாடாக கொண்டவர். இந்நிலையில் அடியாரை சோதிக்க நினைத்த ஆண்டவர் சந்தன மரம் கிடைப்பதை தட்டுப்பாடு வரச்செய்தார் செய்வதறியாத மூர்த்தி நாயனார் சந்தனக்கட்டை கிடைக்காத நிலையில் தன் கையையே கல்லில் மனவைராக்கியத்துடன் தேய்த்தார். அடியார் துணிவு அறிந்த இறைவன் அருட்காட்சி தந்து ஆட்கொண்டார். பின்னாலில் மதுரை மாநகரை ஆட்சி செய்யும் மன்னர் குலத்தில் அரசரை தேர்ந்தெடுக்கும் நிலையில் பட்டத்துயானையால் மாலையிடப்பட்டு பாண்டியமன்னரானார். என்பது புராணம்.

முருக நாயனார்:

மானோச்வரம் என்ற திருக்கோயிலில் உறையும் இறைவனுக்கு அன்பனாய் வாழ்ந்து, திருஞான சம்பந்தருக்கு நண்பனாக திகழ்ந்து அவர் திருமணத்திற்கு சென்று பேரின்பம் பெற்றவர்.

இவ்விரு நாயன்மார்களின் சிலா விக்கிரகங்கள் இத்திருத்தலத்தில் உள்ளன.

காலம் : கி.பி. ஏழாம் நூற்றாண்டு

ஊர்ச்சிறப்பு: மாறாத ஊற்று கோயிலின் மேற்கே மூன்றடி ஆழத்தில் வற்றாத ஊற்றாக வளம் சுரந்தது. எனவே இவ்வூர் மாறாத ஊற்று ஊர் என வழங்கப்பட்டு மாராத்தூர் என மருவி வழங்கப்பட்டு வருகிறது.



79. மானாமதுரை : அருள்மிகு ஆனந்த வல்லி உடனுறை சோமநாதர் திருக்கோயில்

மதுரை – இராமேஸ்வரம் சாலையில் புகழ்பெற்ற மானாமதுரை பெருவழிச்சாலையாலும், புகைவண்டிச்சாலையாலும் இணைப்புபெற்றது. நீதிமன்றங்களும், தொழில் கூடங்களும், அமைந்த வானர வீர மதுரை மானாமதுரையாக வளம் கொளிக்கிறது.

இறைவன் : அருள்தரு சோமநாதசுவாமி "லிங்கத்திருமேனி"

இறைவி : அருள்தரு ஆனந்தவள்ளி அம்பாள்

அமைப்பு: வைகை நதி கிழக்குநோக்கி ஓடி பின்பு தென்திசையில் திரும்பும் நிலை. நதிக்கரையில் அமைந்த இவ்வாலயம் பெருங்கோயில் தெட்சிணவாகினி எனப்பெயர் கொண்ட இத்திருக்கோயில் மிகப்பழமையானது. சந்திரனால் அமைக்கப்பட்ட திருக்கோயில்.

புராணம் : பிரம்மாவின் மானத புத்திரனாகிய தட்சப்பிரஜாபதி தன் மக்களாகிய 27 நட்சத்திரக்கூட்டங்களை சந்திரனுக்கு அளித்தான்.

"அண்டப் பகுதியி னுண்டைப் பிறந்த
அளப்பெருந் தன்மை வளப் பெருங்காட்சி
ஒன்றனுக் கொண்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின்று உன்னணப் புரைய
சிறிய வாகப் பெரியயோன் றெரியின்
வேதியன் தொகையோடு மால்அவன் மிகுதியும்

தோற்றமும் சிறப்பும் ஈற்றொரு புணரிய" – மாணிக்கவாசகரால் அண்டப்பகுதி என வியந்து போற்றப்படும் இயற்கையின் வனப்பைபெற்ற "வான்மதி". அருகில் உள்ள ரோகினியின் ஈர்ப்பால் உச்சம் பெரும் நிலை–இயற்கைநிலை உணரா தட்சன், அனைத்தையும் சமநிலையில் கொள்ள வான்மதி தவறிவிட்டான் என ஆதங்கம் கொள்கிறான் – சாபம் இடுகிறான்.

குருவருள்: அருந்துணை நாடி அகத்திய முனிவரை தேடி சாபம் தீர வழிகேட்கிறான் சந்திரன். சித்தரும் முத்தரும் சேவித்திடும் வில்வவன திருத்தலத்தில் பாகர் என்ற திருமூர்த்தியை வழிபட்டு மேன்மை அடைய வழிகாட்டுகிறார், சிவனை நிகர் பொதியமுனி. இத்தலத்தில் இறைவனை வழிபட்டு சாபம் தீர்ந்து இறைவன் திருமுடியில் நிரந்தரமான கலையுடன் பூரண நிலை அடைகிறான் சந்திரன். மங்கை பாகனால் வளம் பெற்ற சோமன், அன்னை ஆனந்த வல்லியின் அருளால் ஆனந்த வெள்ளத்தில் அழுந்திய புராணச்செய்தி.

ஸ்ரீராமதெரிசனம் :

இலங்கை நோக்கி சென்ற சக்கரவர்த்தி திருமகன் தன் வாணர வீரர்களுடன் இப்பகுதிக்கு வந்து சேர்ந்தான்.

சதா சிவபிரமேந்திராள் சுகமுனிவர் போன்றவர். இவர் தனது தூல சரீரம், சூக்கும சரீரம், குணசரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரம், ஆகிய ஐந்து சரீரங்களையும் பாரதகண்டத்தில் நதிகளின் தெற்கு நோக்கிய பிரபாவகத்தில் கிடத்தி ஜீவசம ஆதிநிலையை அடைந்து ஜீவித்திருப்பவர். இம்மகான் மானாமதுரையிலும் திருவடிபதித்து சிறப்பு செய்தவர். இம்மகானுடைய அதிஷ்டானம் இத்திருக்கோயிலுக்குள் அமைந்துள்ளது. ஆண்டு தோறும் ஆராதனை விழா இசைவாணர்களால் சிறப்புடன் நடைபெறுகிறது.

"சிவம் சிவகரம் சாந்தம் சிவாத்மானம் சிவோத்தமம்
சிவமார்க்கப் பிரனேதாரம் பிரண தோஸ்மி சதாசிவம்"

–என்பது இம் மகான் அருளிய மகாமந்திரம்.

மதுரை சொக்கேசன் :

மதுரை ராணி மீனாட்சியின் நாயக்க வம்சத்திற்கு பின் திண்டுக்கல் முகமதிய தளபதிகள் மதுரையை கைப்பற்ற முனைந்தனர் சிவகங்கை மன்னர் சசிவர்ணரும், சேது காவலரும் துணுக்குற்றனர். சேது சேனை – வீரத்திற்கு இலக்கணம் வகுத்த தளவாய் வெள்ளையன் சேர்வைக்காரன் தலைமையிலும், சிவகங்கை மறவர்படை – விவேகத்தின் விளக்கமாக திகழ்ந்த பிரதானி தாண்டவராயபிள்ளை தலைமையிலும், எழுந்தது. போர்முரசு ஆர்பரித்தது. அவர்கள் ஆலவாய் அண்ணலையும் அங்கயற்கண்ணியையும் தக்க பாதுகாப்புடன் மானாமதுரைக்கு கொண்டுவந்து சோமநாதர் திருக்கோயிலில் பாதுகாப்பு செய்தனர். நாயக்க மன்னருக்கும் வெள்ளிக்குறிச்சி என்ற இடத்தில் அடைக்கலம் கொடுத்தனர். மதுரை தம்பதிகள் இரண்டு ஆண்டுகாலம் இவ்வாலயத்தில் இனிது வீற்றிருந்தனர்.

ஸ்தலதோத்திர மலர்

சோமநாதர் :

மாமறையின் முடிமீதிற் பேரறிவே வடிவாகி மன்னினானை
நாமகள்கா தலன் முதல் ஐவகைய கருத்தர்களாய் நன்னி னானை
தாமரையும் கயிரவரும் சங்கினமு மன்னரும் சேர் தடங்கள் சூழும்
சோமபுரி அதனில் உரை சோமநாதனை தினமும் தொழுதல் செய்வாம்.

ஆனந்தவள்ளி :

"பானந்து திகழ்கரத்தான் வசுதேவன் தேவகிதன் பால்வந்து ஆயர்
கோனந்தன் மனைவளர்ந்தோன் தங்கை ஐயன்தன் பலருக்கு அருள்செய் குணத்தி னானை
வாணந்தி மதி முடித்த சோமேசன் வலப்பாகம் மகிழ்ந்து வைகும்
ஆனந்த வல்லியம்மை தன்னையெம துளக்கமலம் அதனுள் வைப்பாம்"

"நாரணமே நான்முகமே நண்ணார் புரமெரித்த
காரணமே ஞானக்கடலே அருட்சுடரே
பூரணமே ஒன்றை புராதனமே மெய்ப்பொருளே
ஆரணமே அம்சொல் ஆனந்த நாயகமே"

–ஆனந்த நாயகிமாலை

80. திருப்பாச்சேத்தி: அருள்மிகு திருநோக்கிய அழகிய நாதர் திருக்கோயில்

அமைவிடம்: மானாமதுரைத்தாலுகா, மானாமதுரையிலிருந்து 25கி.மீட்டர்

அமைப்பு: சாளாகாரம், கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், பிரகாரம்.

இறைவன்: அருள்மிகு திருநோக்கிய அழகிய நாதர் பானலிங்கம்

இறைவி: அருள்மிகு மருநோக்கும் பூங்குழலி அம்பாள் – வலது திருவடி முன்நோக்கி நின்ற திருக்கோலத்தில் அருள்செய்கிறார்.

விஷேசம்: தனி மரகத லிங்கம் - மகாலெட்சுமி, நளச்சக்கரவத்தி பூசித்த தலம்.

வரலாறு:

தெய்வத்தமிழையும், சைவ சமயத்தையும் காக்கத் தோன்றிய திருஞானசம்பந்தப்பெருமான், பாண்டிய பேரரசி மங்கையர்கரசியார், முதல் அமைச்சர் குலச்சிறை நாயனார் ஆகியோர் வேண்டுதல்படி அப்பர் பெருமானின் ஆசியுடன் மதுரைக்கு எழுந்தருளும் காலம்: மதுரை கூன் பாண்டிய மன்னனை “நின்ற சீர் நெடுமாறன்”எனஆக்கிய பிறகு சமணர்களுடன் புனல்வாதம், அனல்வாதம் செய்யப்பட்டது.

புனல்வாதம்: இரு சமயத்தாரும் தத்தம் கொள்கைப்பாக்களை எழுதி வையை ஆற்றில் விட வேண்டும். வலிமையுள்ளது, ஆற்றை எதிர்த்து வரும் என்பதே மன்னன் தீர்ப்பு. அவ்வாறே அனல் வாதத்தில் இரு சமயத்தவர்களும் தத்தம் கொள்கை எழுதிய ஏடுகளை நெருப்பில் இடும் போது அது நீற்றுப்போகாமல் எஞ்சி இருக்க வேண்டும் என்பதே.

எரியும் தீயில் சம்பந்தரின் பாடல் எஞ்சி நின்றது. நெருப்பில் இட்ட ஏடு எரியாமல் பச்சையாக இருந்ததால் அது பச்சை பதிகம் என போற்றப்பட்டது.

அவ்வாறே நீரில் இட்ட சம்பந்தப்பெருமானின் ஏடு ஆற்றை எதிர்த்து திருவேடகம் என்ற திருத்தலத்தில் கரையேறி. பச்சை பாசுரம் என போற்றப்பட்டது.

கொல்லாமை என்ற அகிம்சையின் கொள்கைகளை பறைசாற்றிய சமணர் ஏடுகள் திருப்புவனம் அருகில் உள்ள திருப்பாச்சேத்தி என்ன திருத்தலத்தில் கரைசேர்ந்தன. தன்னேர் தமிழ்பண்பாடுடைய சான்றோர் அதனை “**திருப்பா**” என அழைத்துப்போற்றினர். தமிழ் மொழிக்கு அரிய சேவைகள் செய்த சமண பெருமக்களை நினைவில் போற்றினர். என்பதற்கு சான்றாக அமைந்த திருத்தலம்.

திருப்பணி: ஸ்ரீ வல்லவதேவ பாண்டியன் சடையவர்மன், குலசேகர பாண்டியன், மாரவர்மன், விஜயநகர அரசர்கள், சிவகங்கை அரசர்கள் ஆகியோர் திருப்பணி. சதாசிவராயரால் மானிபம் விடப்பட்டும், இராமராஜ விட்டல தேவமகாராயரால் வரிவிலக்குகள் பெறப்பட்டும் சிறப்புபெற்றது.

விழாக்கள்: நித்தியபூஜைகளுடன் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறுகிறது.

கல்லெழுத்துக்கள் :

இக்கோயில் கல்லெழுத்துக்கள் கல்வெட்டு துறையினரால் 438முதல் 446 எண்ணிடப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளன.

திருவிழாக்கள்:

சித்திரை திருவிழா 10 நாட்கள்
ஆடிதவசு விழா 10 நாட்கள்
மற்றும் ஆட்டவிஷேசங்கள்
குடமுழுக்கு நாள் 31.3.1994, 30-6-2004

81. மானாமதுரை : அருள்மிகு வீரஅழகர் திருக்கோயில்

பெருமாள்:அருள்தரு வீரஅழகர் சுந்தரராஜப்பெருமாள் சுந்தரத்தோளர்

தாயார்: அருள்தரு சௌந்தரவல்லி தாயார்

அமைப்பு : மாவலி வானதிராயரால் கட்டப்பட்ட திருப்பணி

வரலாறு : அழகர்கோவில் சுந்தரராஜப்பெருமாளிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவர் வானதிராயர். சுந்தரத்தோழர் இவர் கனவில் தோன்றி வைகையாற்றின் கீழ்க்கோடியில் எனக்கு ஒரு கோவில்கட்டு வழிபட்டுவா என ஆணையிட்டார். கோவில் எழுப்ப இடம் தேடி எங்கே கோயில் கட்டுவது என இறைவனை வேண்டினார் வானதிராயர். கோவில் கட்டும் இடத்தை குறிப்பால் உணர்த்தினார் இறைவன். ஒரு எலும்மிச்சம் பழத்தை சிலம்பாற்றில் விட அது மானாமதுரையில் அலங்காரகுளம் என அழைக்கப்படும் குளத்தில் வந்து மிதந்து விட அங்கேயே கோயில் எழுப்பப்பட்டது என்பது வரலாறு.

வானதிராயரின் சகோதரி அலங்காரத்தம்மாள் அலங்கார குளத்தை புதுப்பித்து ஆழப்படுத்தினார் என்பதும் வரலாறு.

வீர ஆஞ்சனேயர் : இத்திருத்தலத்து ஆஞ்சனேயர் மிகுந்த சக்தி வாய்ந்தவராக போற்றப்படுகிறார்.

கல்லெழுத்துக்கள் : இத்திருக்கோயில் கல்லெழுத்துக்கள் கல்வெட்டு துறையினரால் 447 முதல் 451 என கல்வெட்டுக்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. பாண்டியன் சடாவர்மன், மாறவர்மன், குலசேகரபாண்டியன், மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலங்கலான 11 - 12 நூற்றாண்டை சேர்ந்தது.

இத்திவ்விய திருத்தலத்தில் தியாக விநோத திருக்கோயிலாக அப்பன் திருப்பதி, சோணையா கோயில், சங்கு பிள்ளையார் கோயில் மாரியம்மன் கோயில்கள் சிறப்புடன் திகழ்கின்றன.

திருவிழாக்கள் :

சித்திரை உத்ஸவம் 10 நாட்கள்
ஆடி உத்ஸவம் 10 நாட்கள்



அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன்
மானாமதுரை

82. நரிக்குடி அருள்மிகு நாகவல்லி அம்பாள் சமேத விருப்பாட்சிநாதர் சுவாமி திருக்கோயில்

சிவகங்கை மாவட்டம் பரமக்குடி நகரிலிருந்து 10 கி,மீ, தொலைவில் உள்ளது பார்த்திபனூர். இதன் தென்மேற்கே 6 கி.மீ. தொலைவில் உள்ள வளர் நகர்தான் நரிக்குடி நகருக்கு சற்று 1 கி.மீ. தொலைவில் வயல்கள் சூழ்ந்த வழித்தடம் சாலைக்கு வெகு அன்மையில் கோயில் கொண்டு அருளும் இறைவன் விருப்பாட்சிநாதர் காட்சி தருகிறார்.

மதுரையிலிருந்து மானாமதுரை வழியாக இராமேஸ்வரம் சென்றுவரும் தீர்த்தயாத்ரீகர்கள் வழிநடை களைப்புத்தீர உணவும், இறைஉணர்வும் தந்ததுதான் மதகுபட்டி சத்திரம் இந்த சத்திரத்தின் போசனையில் யாத்ரீகர்களுக்கு உண்ண உணவும் இருக்க இடமும் அளித்துள்ளது.

உணவு தேடுவதோடு உணர்வு தேடு
இரையைத்தேடுவதோடு இறையையும் தேடு

என்ற ஆன்றோர் வாக்குப்படி அயர்வு அடைந்த அடியார்கள் உயர்வைத் தேட அமைக்கப்பட்ட இத்திருக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபவம் அமைந்த கற்றடி சுற்றுப்பிரகாரம் சூழ்ந்த மரங்கள் கொண்டது, காரண ஆகம முறைப்படி நித்திய பூசைகள் நடைபெறுகின்றன. சுமார் 300 ஆண்டுகளுக்கு உட்பட்டது. பிற்காலத்தில் கோதண்ட தம்பிரான் சுவாமி என்பவரால் இத்திருக்கோயிலைச்சுற்றி அதிக அளவில் வேம்பு, புளியமரங்கள் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் வழிநடை பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் பரமன் அடியார்களின் வருகையை எதிர்நோக்கி வீற்றிருக்கிறார்.

83. மானூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

தமிழ் பெருந்தெய்வமான முருகவேள் குடிகொள்ளாத தமிழ் உள்ளங்கள் இல்லை. குறிஞ்சி நிலக் கொற்றவன் என சிறப்பித்து புகழப்படும் செம்மாமகளை திருடும் திருடன் – வள்ளிமான் கணவன்.

யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங்கடம்பும்
மன்றலும் பொதியலும் கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியோடு மன்னி அமைவர

என்கிறது திருமுருகாற்றுப்படை.

நாற்சந்தி, ஆறு, குளம், புதுவெள்ளம், நீதிநிலைக்கும்மன்றம், பூத்துக்குளுங்கும் கடம்ப மரம், அடியவர் உள்ளம் ஆகியவற்றில் நிலைத்துநிற்பவன் என அறிவு நூல்களாலும், அனுபவத்தாலும் அடையப் பெற்ற முருகப்பெருமான் விரும்பி உறையும் மருதநில மருகன். மானூர் திருத்தலத்தில் கோயில் கொண்டு அருள்கிறான்.

இருப்பிடம் :-

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி வட்டம் மகரிஷி ரமணர் அவதார தலமான திருச்சுழி, பாண்டி 14ன் சிறப்பிடம் பெற்றதுமான தமிழ்த்தாயின் கொப்புள் என சிறப்பிக்கப்படும் திருச்சுழியிலிருந்து வடகிழக்கே 25 கி.மீ. தொலைவிலும், பார்த்திபனூரிலிருந்து வடமேற்கே 10 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது தான் மானூர் எனப்படும் சிற்றூர்.

காலம் :-

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பஞ்சபூதங்கள் தோன்றுவதற்கு காரணமான வெற்றிடம், அண்டம், அதிலிருந்து ஆதி விச்வேஸ்வரன் ரூபமாக நீர், தீ, காற்று, நாதம், விந்து முதலாக இப்பிரபஞ்சம். தோற்றத்தை வியந்த அறிவுள்ளம் தம்மை வளர்த்தெடுத்த இறைமையை நன்றி பாராட்டும் விதமாகவும் தமக்குப் புகலிடமாகவும் கொண்டு வழிபாடு இயற்ற தொடங்கிய காலம்.

சுவாமி அருள்மிகு அனாத ரட்சகர்

அம்மன் அருள்தரு சௌந்திர நாயகி

என்ற திருப்பெயரிட்டு கல்ஹாரமாக அமைக்கப்பட்ட திருக்கோயில் கால வெள்ளத்தால் கரையுண்டது. பிற்காலம் இன்றைக்கு சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் தொண்மையும், நன்மையும் அறிந்த துறவி வேலாயுத சுவாமி இத்திருத்தலத்தில் தோன்றினார்.

செவ்வேளின் சீரடியாரரான துறவி வேலாயுத சுவாமி தன் தவ வலிமையால் முருகபிரானின் அருள் வயப்பட்டு இப்பகுதியில் முருகபிரானின் அருள்நோக்கம் பிரகாசிப்பது அறிந்து. தனிக்கோயில் கட்டுவதற்கு திருவுள்ளம் கொண்டார். மானூர், மரையூர் என இப்பகுதிகள் வள்ளியம்மையின் வழித் தொடர்பு உள்ளது கருதியும் அருள் வழிப்பாடு காரணமாகவும் திருப்பரங்குன்றத்து செவ்வேளின் நினைவாக ஆலயம் அமைத்தும் திருநீற்றையே கூலியாக கொடுத்து சிறந்த ஆலயம் எழுப்பினார்.

அமைப்பு :-

மூலஸ்தான திரிதள, சாளகார விமானத்துடன் குடவரை வடக்கு நோக்கிய வாயிலுடன் கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் கூடிய கற்றளி சுற்றுப்பிரகாரம். கிழக்கு நோக்கிய வாயில்.

கருவரையில் சுவாமி சுப்ரமணியர் மயில் வாகனத்தில் வீற்றிருக்கும் திருக்கோலம். சதுர்புஜங்களுடன் வலது திருவடி அர்த்த பத்மாசனத்தில் இடது திருவடி தொங்கலாகவும் புன்னைகை தவழும் திருமுக மண்டலத்துடன் இருபக்கங்களிலும் தேவியர்கள் நின்ற திருக்கோலத்தில் ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ளது.

மகா மண்டபத்தில் சுவாமி அனாத ரட்சகர் லிங்கத்திருமேனி சதுர ஆவுடையுடன் உள்ளார். அம்மை சௌந்திரநாயகி நின்ற திருக்கோலத்தில்

இருகரங்களுடன் அன்னை மீனாட்சியாக காட்சி தருகிறார். நந்தி, சண்டேஸ்வரர் ஆகிய பூர்வ ஆலயத் திருமூர்த்திகள் காட்சி தருகின்றனர். மகாமண்டபம் கீழ் பகுதியில் வியக்க வைக்கும் கலை அழகுடன் திருமால் சங்கு சக்கரம் அபயம் கடக ஹஸ்தத்துடன் வீராசனத்தில் வீற்றிருக்கிறார். கம்பீரமாக காட்சி தரும் தண்டாயுதபாணி வீரபத்திரர், நவ வீரர்களின் வீரபாகு, வீரமகேந்திரர் ஆகியோர் உள்ளனர். பிராகரத்தின் மேற்கு பகுதியில் சுவாமி அம்பாளுக்காக எழுப்பப்பட்ட தனித்த கற்றளி சிதிலமடைந்துள்ளது. கீழ் பகுதியில் ஏகாந்தமாக சனீஸ்வரர் உள்ளார். பலிபீடம் இரட்டை மயில் வாகனம் கொடி மரத்துடன் கூடிய இல்வாலயம் விரைவில் மராமத்து செய்து பெருஞ்சாந்தி செய்யப்பட உள்ளது.

உபகோயில்கள் :–

இவ்வாலயத்தின் உபகோயிலாக அருள்மிகு வாழவந்தம்மன் திருக்கோயில் திருக்குளத்துடன் பரிவார தேவதைகளுடன் காட்சி தருகிறது, அம்பாள் மகா சந்தியாக எண் கரங்களுடன் அசுர வதம் செய்யும் மறக்கருணை வடிவாக சர்வ பிரகரனாயுதஹ –எவ்வாயுதத்தையும் பயன்படுத்தலாம் என்ற நிலையில் ஓங்கிய திருக்கரத்துடன் அருள் பாலிக்கிறார். அம்மைக்கு மகா கும்பாபிஷேகம் விரைவில் நடைபெறவுள்ளது. சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமைகொண்ட தெய்வபடிமங்கள் உடைய திருக்கோயில்.

திருவிழா :–

அருள்மிகு வாழவந்த அம்மனுக்கு பங்குனி மாதத்தில் புனர் பூச நட்சத்திரத்தில் ஏகதின உற்சவம் நடைபெற்று ஸ்ரீசுப்ரமணியசுவாமிக்கு பங்குனி பூச நட்சத்திரத்தில் கொடியேற்றம் செய்து சுவாதி நட்சத்திரத்தில் திருக்கல்யாணம் விசாகநட்சத்திரத்தில் திருத்தேர் பவனி வர பிரம்மமோற்ஸவம் வெகு சிறப்பாக நடைபெருகிறது. குமாரதந்திரப்படி நித்திய நைமித்திய பூஜைகள் நடைபெருகின்றன.

கல்லெழுத்து :–

மானையூர் என கல்லெழுத்த சாசனம் கொண்ட திருக்கோயில் வெளிப் பிரகாரத்தின் மேற்குபகுதியிலும் தனிக் கற்றளி அதிஷ்டானப் பகுதியிலும் பனிரெண்டாம் நூற்றாண்டு கல்லெழுத்துகள் சிதிலமடைந்து காணப்படுகின்றன.

சாலிவாகன சகம் 1681 ஆவணித்திங்கள் 9ம் நாள் பூர்வபட்சத்து திரயோதசி பூச நட்சத்திரம் சுபயோகம் சுபகரணம் கூடிய நன்நாளில் எழுதப்பட்ட தாமிர சாசனம். உலகத்தோற்றம் முதற் கொண்டு இறைவன் மெய் கீர்த்தி அருளப்பட்டு சிவகங்கை அக்கசாலை விநாயகர் திருக்கோயிலில் கைவினைஞர்களும் தொழிலாளர்களும் இப்பெருமாள் மீது மேற்கொண்ட காதலால் கூடிக் குழுமி விழா செய்ய முன்வந்த விபரம் தெளிவுபடுத்தப்படுகிறது.

இப்பகுதி மக்களால் விரும்பி வணங்கப்படும் இவ்வாலயம் செவ்வேள் பரமன் விரும்பிக்குடி கொண்ட ஸ்தலம் என்பதில் ஐயமில்லை.

வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
யாண்டாண்டு உறைதலும் அறிந்தவாறே
ஆண்டாண்டு ஆயினும் ஆகக்காண்தக — திருமுருகாற்றுப்படை

84. மேலநெட்டூர் அருள்மிகு திருவாலங்காடர் என்ற சொர்ண மூர்த்தீஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் :-

சிவகங்கை மாவட்டம். இளையான்குடி வட்டம், மானாமதுரையிலிருந்து கிழக்கே 18 கி.மீ. இளையான்குடி நகரிலிருந்து மேற்கே 12 கி.மீ. பரமக்குடியிலிருந்து 16 கி.மீ. இதன் நடுவே அமைந்த சிற்றூர்தான் நெட்டூர். இச்சிற்றூரே மேலநெட்டூர், கீழநெட்டூர் என பிரிக்கப்பட்டுள்ளது. சிறு சாலை அமைப்பு பேருந்திலும் சிற்றுந்திலும் சென்று வர முடியும்.

பெயர்க்காரணம் :-

நெட்டூர் – நெடிய ஊர்; பழைய ஊர் – பழையூர், மூதூர் எனச் சொல்லாட்சி பெற்று பழமையான திரு ஆலங்காட்டை கோயில் கொண்ட சிவனார் தங்கும் ஊராக, மக்கள் வாழும் ஊராக மருவி இருக்கிறது. இத்திருக்கோயிலுக்கென்று கைங்கர்யம் செய்வதற்காக 23 1/ 2 கிராமங்கள் இதனைச் சூழ்ந்திருக்கின்றன. இத்திருக்கோயிலின் வடமேற்கே பாண்டியன் அரண்மனை இருந்தது எனவும் நீண்டகாலம் மதுரைக்கு திரும்பாத மன்னனைப் பாண்டிமாதேவி மன்னன் எங்கே என்று கேட்க? அமைச்சர் மன்னன் நீண்ட தொலைவில் உள்ள ஊருக்குச் சென்றுள்ளார் எனவும் மீள இயலாத ருத்ர கன்னிகையுடன் தங்கியுள்ளார் என்றும் பொருள் பட நெட்டூருக்குச் சென்றுள்ளார் என்றாராக இதுவே நெட்டூர் என மருவியது என்பார்கள்.

வரலாறு :-

அன்று ஒரு நாள் இன்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன் ஆயிரக்கணக்கான படை வீரர்கள், யானை, புரவி புடை சூழ சோழ மாமன்னனின் வருகை படையெடுத்து வந்தானா? பரமேசனை தரிசிக்க வந்தானா? தெரியவில்லை. சுற்றிலும் ஆலமரங்கள் சூழ்ந்த ஆலங்காடு. விரைந்து வந்த மன்னன் இடரி விழுந்தான். ஆறுதலாக தங்கி ஆலமர நிழலில் அயர்ந்தான் மாமன்னன். வெள்ளை வெள்ளேர் என்று ஜடாமுடி தாடி மீசையுடன் கம்பீரமான தூய தோற்றம். அமைதி தவளும் புன்னகை அருட்தோற்றம் தான் அருட்கோயில் கொண்டருளும் ஸ்தலம் என்பதைக் காட்டி அருள் செய்தார் இறைவன். எழுந்த மன்னன் எம்பெருமானின் தரிசனம் பெற்ற நிலையையும் தான் விரும்பி இறைஞ்சும் திருவாலங்காட்டு ஈசனே தம்முன் தரிசனம் தந்ததையும் வியந்துதான் தடுக்கி விழுந்த இடத்தை அகழ்ந்து பார்த்தபோது அற்புதமான லிங்கத்திருமேனி ஆள்உயர ஆகிருதியுடன் கம்பீரமான தோற்றம் காட்சியளித்தது.

"சிவம் சிவகரம் சாந்தம் சிவாத் மானம் சிவோத்தமம்
சிவமார்க்க ப்ரனேதாரம் பிரணதோஸ்மி சதாசிவம்"

வியந்து வணங்கினான். தம்மை நீண்ட தொலைவில் வந்து ஆட்கொண்ட நிலையில் ஊர் உண்டாக்கி நெட்டூர் எனப் பெயரிட்டு திருவாலங்காட்டில் தனக்கு உகப்புடன் அருள் செய்த இறைவனே இவர் என்று உணர்ந்தான் "திருவாலங்காட்டீஸ்வரர்" என்றே திருப்பெயரிட்டு திருக்கோயில் அமைத்தான். தன் சோழ நாட்டு முறைப்படி மூலஸ்தானம் உருவாக்கினார். பைந்தமிழ் மன்னன் பாண்டியன் இதனைப் பராமரிக்க அநேக நிபந்தங்களையும் கிராம தானங்களையும் செய்தார். ஆகமமுறைப் படி மண்டபங்களும் திருமதில்களும் உண்டாக்கி பூசனை குறைவின்றி செய்வதற்கு வழிவகுத்தான். அக்கால முறைப்படி லிங்கத் திருமேனியிலேயே சக்தியின் அம்சமாக ஆவுடை உள்ளது கருதி ஏகாந்தமாக லிங்க வழிபாடு இருந்தது, பின் நாளில் பாண்டி மன்னன் கனவில் அம்பிகை தான் தஞ்சை நகரில் சிவாலயக்குளத்தில் இருப்பதாகத் தெரிவிக்க மன்னன் படையுடன் போய் தான் கனவில் கண்ட தஞ்சைக்குளத்தில் அம்பிகையின் சிலாவிக்கிரகம் இருப்பதை எடுத்த வந்து பிரதிஸ்டை செய்ததாக வரலாறு.

திருக்கோயிலின் அமைப்பு :-

மதில் சூழந்தது மூலவரின் விமானம் எண் கோன அடித்தளத்தில் உயர்ந்த கம்பீரமான சதுரச திரிதள விமானம், கருவறை அர்த்த மண்டபம், மகா மண்டபம், சுற்று பிரகாரம் கொண்ட உண்ணாழி உள் திருமதில் கொண்டது.

சந்நிதி மேற்கு நோக்கியது. மகா மண்டபத்தில் துவார பாலகர்கள், கணேசர், உண்ணாழியின் ஈசான்யத்தில் பைரவர், அக்னி மூலையில் வள்ளி தேவயானை சமேத சுப்பிரமணியர் சம்பந்தர், திருமடப்பள்ளி, உண்ணாழி முகப்பு மண்டபத்தில் கன்னிமூல கணபதி, வள்ளி தேவயானை சமேத சுப்பிரமணியர் நவக்கிரஹகங்கள் மற்றும் ஆதி ரத்தின மணி மன்றம் அமைந்த திண்ணைகள், அதிகார நந்தி உள்ளனர்.

உள்திருமதிலை அடுத்த வடக்கில் கிழக்கு நோக்கியவாறு கருவறை, அர்த்த மண்டபம் கூடிய கற்றளியில் அன்னை சாந்தாதேவியின் நின்ற திருக்கோலம் பரந்த வெளியுடன் கூடிய மதில் பிரகாரம். சன்னதியின் முன் மண்டபத்தில் கம்பீரமான காளை, கொடிமரம், பலிபீடம், கொடி மரத்திற்கும் சாந்தநாயகிக்கும் இடையில் உயர்ந்த பீடத்தில் (கொறடு) காளிதேவி வீற்றிருப்பதைக் காணலாம். கோயிலின் வெளிப்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் களஞ்சியக் கட்டிடம் உள்ளது.

கோவிலின் முகப்பில் வரவேற்பு மண்டபமும் திண்ணைகளும் உள்ளன. கோவிலின் முன்புறமும் கோவில் திருக்குளமும் திருத்தேர்தளம், திருவீதிகள் கோயில் குடிகளாகிய பெருமக்களின் வாழ்விடங்கள் சூழ்ந்த புராதணச் சிவாலயம் பெரும் கோட்டை போல் காட்சியளிக்கிறது.

திருவாலங்காடர் :-

மணி மன்றில் ஆடும்பிரான் அச்சம் தரும் ருத்ர பூமியில் ஆனந்த கூத்தாடும் ஐயன் அகோரன் வியக்க வைக்கும் ஆள் உயரத் திருமமேனி ஆவுடையுடன் 188 செமீ உயரமும் 99 செமீ சுற்றளவும் கொண்ட மகாலிங்கம் சதுர ஆவுடை 134 செமீ அகலமும் 94 செமீ உயரமும் கொண்டது. அகோர மந்திரத்தின் தீட்சன்யத்தில் அருள் செய்யும் அற்புத தோற்றம்.

"நுணங்கு மறைபாடி யாடி வேடம் பயின்றாரும்
இணங்கு மலைமகளோடு இருகூரு ஒன்றாய் இசைந்தாரும்
வணங்குஞ் சிறுதொண்டர் வைகலேத்தும் வாழ்த்துக்கேட்டு
அணங்கும் பழையனூர் ஆலங்காட்டினரே" – சுந்தரர் தேவாரம்

ஆலங்காடரும் அன்னை சாந்தா நாயகியுடன் ஒன்று சேர்ந்து விழாக் கொண்டாடி இப்பகுதி மக்களின் வாழத்துக் கேட்டு அருள் செய்கிறார் என்பதில் ஐயமில்லை.

சாந்தா நாயகி :-

திருவாலங்காட்டிஸ்வரர் ஆன ஈசனின் திருபாகமான சாந்தாநாயகி வெளிப்பிரகாரம் வடபகுதியில் கிழக்கு நோக்கிய சந்நிதி கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் கூடிய கற்றளி அம்மை பத்மபீடத்தில் நின்ற திருக்கோலமாக ஆள் உயரமாக (182செமீ 63செமீ) கிரீடம் தரித்து சதுர்புஜஙகள் கொண்ட வளாக அட்ச மாலை, குமுதமலர் அபயம், கடிஹஸ்தமாகக் கொண்டு அருள் செய்யும் அன்னை, தடைபெற்ற காரியங்களை உடன் நடத்தி வைக்கும், மனதிற்கு அமைதி தரும் தெய்வத்திருவுரு, ஞானம், அன்பு, அருட்கடாட்சம், அச்சம் நீங்கிய கம்பீரமம் ஆகியவற்றின் வடிவமாக காட்சி தருபவள். வேண்டியவர்களுக்கு வேண்டியதற்கும் மேலாகத் தரும் சக்தி மனச்சாந்தி வடிவானவள். பெண் என்றால் பேயும் இரங்குமே பேயோடு ஆடும் பித்தன் இந்த அன்னையின் சொற்படி ஆடுபவன் தானே பித்தனாம் இறைவனை வசப்படுத்த மேருமலையில் தவம் செய்து விரதம் கொண்டவள். ஒருபுறம் சனகாதியர்களுடன் மோனநிலையில் தவம் செய்த இறைவன் சக்தியின் ஈற்பால் எதிரும் புதிருமாக எதிர்வர ஈருருவமும் ஒருருவமானார்கள் என்பது வழிவழி செய்தார்.

காளிதேவி :-

ஆடல் வல்லானுக்கு சாட்சியாக வந்தமர்ந்த காளி, ருத்ர அம்சமாக ஆடல்புரியும் ஆண்டவனுக்கு இணையாக ஆடல் புரிந்தவள். இங்கு மூன்றுமுகம் கொண்டு அர்த்த பத்மாசனத்தில் சூலம், பத்மம், அபயம், கபாலம் கொண்டு வடதிசை நோக்கி அருள்பாலிக்கிறாள். இவளை காயத்ரிதேவியாக இப்பகுதி மக்கள் கருதுகின்றனர். முக்கண்களும் மூன்றுமுகமும் கொண்டவளாக, மகாசக்தி வடிவமாகவும், ருத்ராணியாகவும் காட்சிதருபவள்.

திருநந்திகேஸ்வரர் :–

இறைவனுக்கு எதிரே கம்பீரமாக கழுத்தை உயர்த்தும் தோற்றம் உடைய காளை. எழுத்து நிற்க எத்தனிக்கும் எழுச்சியூட்டும் வடிவம். உயர்ந்த அணி ஆபரணங்கள் சூடிய நந்தீஸ்வரர் (149 ஒ 49)செமீ

"பெற்றமே உகந்து அங்கேறும் பெருமையை உடையார் போலும்
மற்றங்கள் அறிவார் போலும் ஆலங்காட்டிகளோரே"

என்று அப்பர் பெருமான் பாடுவது போல இறைவனுக்கேற்ற தகுதியுடைய வாகனம்.

பிரதோச காலங்களில் அபிஷேக ஆராதனைகள் காண்பதற்கு மனம் விரும்புகிறது.

வழிபட்டுச்சிறந்தோர் :– சோழ மன்னன், பாண்டியர், வானதி ராயகர்கள், தஞ்சை மன்னன், சேதுபதிகள், சிவகங்கை மன்னர்கள் சேவித்து பேறு பெற்றனர். 12ம் நூற்றாண்டில் குலசேகர பாண்டியன், ராஜராஜன் சுந்தரபாண்டியன் துலா மாதத்தில் அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்து இவ்வாலய இறைவனை தரிசித்து சிறந்த பேறு பெற்று தொண்டூரில் 4 வேலி நிலம் தானம் செய்துள்ளார் என கல்வெட்டு செய்தி அறியமுடிகிறது. வானதி ராயர்கள் பிற்கால திருப்பணி செய்துள்ளனர். குலோத்துங்கச் சோழன், சடைவர்மன், குலசேகர பாண்டியன், ராஜராஜன் சுந்தரபாண்டியன் ஆகியோர் நிபந்தங்கள் வழங்கி சிறந்தனர். பிற்காலத்தில் சகம் 1662–ல் திருவாடுதுறை மடத்து மகேஸ்வர பூசைக்கு நெட்டூர் குறிச்சி கிராமம் தானமாக சிவகங்கை மன்னர் முத்துவடுக நாத பெரிய உடையாத் தேவரால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சதுரகிரி குழந்தை ஆனந்த பண்டார மடத்திற்கு சகம் 1682–ல் மேல நெட்டூரில் நிலம் தானம் செய்யப்பட்டது. திருவாடுதுறை மடத்ததிபர்கள் இவ்விறைவனை கொண்டாடிய செய்தியும் தெரியவருகிறது.

உபகோயில்கள் :– சிவாலயத்தின் வடமேற்கே சிவாலயமும், மேற்கு ரதவீதியில் விநாயகர் திருக்கோயில்களும் வடக்கே அருள்மிகு அரியநாயகி அம்மன் திருக்கோயிலும் அமைந்துள்ளன. கிழநெட்டூரில் அருள்மிகு ஆலம் அளித்த பெருமாள் திருக்கோயில் உள்ளது. பாற்கடலைக் கடந்த போது ஆலகால விஷம் வெளிப்பட முதலில் வந்த விளைச்சல் உடையவனுக்கே வழங்க வேண்டும் என திருமால், ஆலால சுந்தர் மூலமாக விஷம் சிவபெருமானுக்கு வழங்கப்பட்டதை நினைவு கூறும் வகையில் நீல கண்டனான சிவன் ஆலவிடத்தை தன் கண்டத்தில் அடக்கி உயிர்த்தொகுதிகளைக் காத்த வரலாறும் இவ்வாலய வரலாற்றுடன் பேசப்படுகிறது.

வழிபாட்டின் பேறு :– சொன்னவர் அறிவார் ஈஸ்வரர் என கல்லெழுத்து செய்திகளால் சிறப்பிக்கப்படும் திருவாலங்காட்டீஸ்வரர் தென் திருவாலங்காடாக கோயில் கொண்டவர் என்பதால் திருவாலங்காட்டுக்கு உள்ள சிறப்பு அனைத்தும் இந்த ஆலயத்திற்கு அமைகிறது.

பத்ரகாளி அம்மனிடம் மரப்பொம்மைகள் பிரார்த்தனையாக சேர்க்கும் மக்களுக்கு மக்கள் செல்வம் தருகிறது. தீராத வியாதிகள். வழக்குகள்

தீர்க்கப்படுகின்றன. சாந்தாநாயகி அம்மனின் வழிபாடு கணவன் மனைவியர் குடும்ப ஒற்றுமை குடும்ப உயர்வு, நிம்மதி உண்டாக்குபவை.

திருப்பணி : –

ஆனிப் பிரமோஸ்வத்திற்கு இத்திருக்கோயிலை சேர்ந்த 231.2 கிராமத்தினர்களின் பங்கு மிகச்சிறப்பான பெரு முயற்சியுடன் மகாரதம் செய்யப்பட்டு 1–7–1998ல் வெள்ளோட்டம் சிறப்பாக நடைபெற்றது.

85. சாத்தனூர்: அருள்மிகு திருவாளீஸ்வரர் திருக்கோவில்

அமைவிடம்: தேவகோட்டையிலிருந்து 35கி.மீட்டர் திருவாடானை வட்டம்.
சுவாமி: அருள்மிகு திருவாளீஸ்வரர் லிங்கத்திருமேனி
காலம்: 500 ஆண்டுகள் பழமையானது.

86. பார்த்திபனூர்: அருள்மிகு அழகிய மணவாள பெருமாள் திருக்கோயில்

அமைவிடம்: பரமக்குடி நகருக்கு அருகில்
இறைவன்: அருள்மிகு அழகிய மணவாளப் பெருமாள் ஸ்ரீ தேவி பூதேவி சகிதாராமர்காட்சி தருகிறார்.
வாமனாவதார பெருமாள் இத்தலத்தின் சிறப்பு – வைகான ஆகமப்படி பூஜைகள் நடைபெறுகின்றன.

87. நாகமுகுந்தன்குடி: அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில்

அமைவிடம்: இளையான்குடி வட்டம் இளையான்குடியிலிருந்து 7கி.மீ மேற்கில் உள்ளது.
அமைப்பு: கருவறை, அர்த்தமண்டபம், பிரகாரம், கல்காரம், சுரங்கவழிகள் இருந்ததற்கு சான்று.
இறைவன்: அருள்மிகு நாகநாத சுவாமி சுயம்புலிங்கம்
இறைவி: அருள்மிகு சௌந்தர நாயகி
சிறப்பு: முகுகுந்த சக்கரவர்த்தியால் கட்டப்பட்டு பிற்காலத்தில் ராணி காத்தம்மை நாச்சியரால் புதுப்பிக்கப்பட்டது. கும்பாபிஷேக நாள் 22–3–2004

88. விஜயன்குடி: அருள்மிகு சௌந்தர நாயகி சமேத அருள்மிகு திருக்காலிங்கேஸ்வரர் சுவாமி திருக்கோயில்

அமைவிடம் இளையான்குடி வட்டம் இளையான்குடியிலிருந்து 9 கி.மீ.
இறைவன்: அருள்மிகு திருக்காலிங்கேஸ்வரர்
இறைவி: அருள்மிகு சாந்தா நாயகி
காலம்: பாண்டிய காலம்
அமைப்பு: கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், பிரகாரம் கூடிய கல்திருப்பணி.

89. ஆனந்தூர்: அருள்மிகு திருமேனி நாத சுவாமிகள் திருக்கோயில்

அமைவிடம்: திருவாடானை வட்டம், ஆனந்தூர் கிராமம் தேவகோட்டையிலிருந்து தொண்டிச்சாலையில் 30 கி.மீட்டர்
அமைப்பு: கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டம், பிரகாரம்
இறைவன்: அருள்மிகு மணிகண்டீஸ்வர்
இறைவி: அருள்மிகு திருக்காமவல்லி அம்பாள்–தெற்கு நோக்கிய திருவுரு. கோயில் தென்புரம் திருக்குளம் உள்ளது.
காலம்: ஐநூறு ஆண்டு பழமையுடையது.
பூஜைகள்: நித்தியபூஜைகள் நடைபெறுகின்றன.

90. தெ.புதுக்கோட்டை: அருள்மிகு வண்ண மயூர முடைய ஐயனார் கோயில்

அமைவிடம்: பரமக்குடியிலிருந்து 8 கி.மீட்டர் தொலைவில் உள்ள தென்னவராயன் புதுக்கோட்டை.

இறைவன்: பூரனை புஷ்கலை சமேத வண்ண மயூர முடைய ஐயனார் அருள்மிகு கருப்பர், ராக்காயி, இருளப்பர், இருளாயி சோனையர்.

சிறப்பு: புராண வரலாறு மற்றும் ஆன்றோர் மரபு வழிச்செய்திகளில் கணபதிக்கு வாகனமாக மயூரம் அமைந்துள்ளது. திருமுருகன் சிறுகுழந்தையாக இருந்து முழுமுதற்கடவுளான விநாயகரை வழிபடுகிறார். சுத்த சத்துவ, குணத்துடன் கூடிய பொன்னிர மாமயிலில் மயூரேசனாக விநாயகர் காட்சிதருகிறார். குழந்தை, மயிலைக்கண்டதும் குதுகளிக்கிறது. தம்பிக்கு வாகனமாக தந்தார் தமையனர். இது சத்துவமயில். பொன்மேனி கொண்டது.

சூரபதுமனை அழிக்க தேவர்கள் வேண்டுதலை ஏற்று வேலவன் புறப்படும்போது இந்திரனே வாகனமாக மாமயிலாக உருவெடுக்கிறான். இது இரஜோகுணமயில். பாலசுப்பிரமணியனின் பச்சைமயில்.


சூரபதுமனுக்கு கதிர்வேல் காட்சிதந்தபோது அசுரன் சேவலாகவும் மாமயிலாகவும் மாறுகிறான். அவனுக்கு கருணை செய்து வாகனமாக கொண்ட மயில் தாமசகுணம்கொண்ட மயில் "நீலச்சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும் கோலக்குறத்தியுடன் வருவான்". அன்பர் மனத்தை மாமயிலாக கொண்ட இறைவன் உளப்பாங்கிற்கு உரியவகையில் நமக்கு அருள் செய்வான் என்பதற்கு ஐதீகம்.

மயில்மலையான குன்றக்குடி திருத்தல கருவறையில் சண்முகநாதர் தம்பதிகளுடன் இம்மூன்று மயில்வாகனத்துடன் காட்சிதருவதை கண்டுகளிக்கலாம்.

மனநிலையாம் மயில்கள் நடனம்மாடும் வளம்சிறந்த மன்னில் காத்தருளும் இறைவன் வண்ணமயிரமுடைய ஐயனாராக காட்சி தருகிறார்.

காலம்: சுமார் 900 ஆண்டுகள் பாண்டியர் காலக்கோயில்

வரலாறு: இப்பகுதிகள் வேட்டையாட வந்த மன்னனுடைய துப்பாக்கி குண்டு சிறு குழந்தையின் மீது பட்டு இறந்தது. அழகப்பன் என்ற திருக்குலத்து மனிதன் இங்கு இறைவனிடம் ஐக்கியமானார். குழந்தையும் அழகப்பனும் தெய்வமானார்கள் அருகில் அழகப்பன் சமாதி உள்ளது. சிவகங்கை மன்னர் குலதெய்வமாக உள்ள கோயில் 61 பந்தி 21 சேனைகள் கொண்ட கிராமதெய்வமாக உள்ளது. மாசி மாத களரி விழா சிறப்பாக நடைபெறுகிறது. மகா கும்பாபிஷேகம் 25.10.1996ல் நடைபெற்றது.



91. இளையான்குடி : அருள்மிகு இராஜேந்திர சோழீஸ்வரர் திருக்கோயில்

சிவகங்கை நகரிலிருந்து 27 கி.மீட்டர் தென்கிழக்கே உள்ளது.

இறைவன் : அருள்மிகு இராஜேந்திர சோழீஸ்வரர்

இறைவி : அருள்மிகு ஞானாம்பாள்

பெரியபுராணத்தில் சிறப்புபெற்ற சிவனடியார்களுள் இளையான்குடி மாறநாயனாரும் ஒருவர். அவர்மட்டும் மல்ல. கணவருக்கு இசைந்த மனைவி–சிறப்பு என்பது சொல்லவும் வேண்டுமோ.

"இளையான்றன் குடி மாறன் அடியாருக்கும் அடியேன்"

என சுந்தரர் சுந்தரத்தமிழால் தம் திருத்தொண்டர் தொகையில் அடிபணிகிறார்.

புராண வரலாறு :

இத்திருத்தலத்திற்கு தலவரலாறு பாடிய சீர்வளர்சேர் சிவானந்த அடிகள் இத்திருத்தலத்தை இந்திரன் வழிபட்டதால் ஐராவத நல்லூர் என வழங்கப்பட்டதாகவும் உரோமபாத முனிவர் வழிபட்டதாகவும் கோச்சடையப்பர் என்ற அரசன் வழிபட்டதாகவும் இம்மன்னனுக்கு இந்திரனே மகனாக பிறந்து இந்திரதத்தன் அரசு செய்தான் எனவும் இவ்வரசன் மக்களுள் ஒருவரே மாறநாயனார் என சிறப்புற்றார் எனவும் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்தில் முடி அரசர்களும் நிலத்தரசர்களும் திருமண உறவு கொண்டு பெரு நிலம் ஆண்டனர் என்பதற்கு வரலாறு உண்டு.

பெரியபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வேளாளர்குலத்தில் பிறந்த மாற நாயனார் செல்வச்சிறப்பில் சிறந்து சிவனடியார்க்கெல்லாம் திருத்தொண்டு செய்தார். பெரும் குபேர வாழ்வு வாழ்ந்த பெரியார் சிவனடியார்களுக்கு திருவமுது செய்து திரண்ட செல்வம் எல்லாம் செலவு செய்தும் வறுமையுற்ற காலத்தும் மனம் கோனாது செய்யும் இவரது திருத்தொண்டை சோதிக்க நினைத்த இறைவன் மேலும் வறுமையில் வாடச்செய்தார். இருந்த செல்வம் எல்லாம் நீங்கி அடுத்து என் செய்வோம்! என்ற நிலையில், தன்னிடத்திருந்த விதை நெல்லையும் நிலத்தில் விதைத்து அயர்ந்து வீட்டுக்கு வந்து அமர்ந்தார் நாயனார். அந்தோ! காரிருளுடன் சூழ்ந்த காற்றும் மழையும் கூடியது.

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் சிவனடியார் வேடத்தில் நள் இரவில் வந்து கதவைத்தட்டினார். வந்த அடியாரை வரவேற்று முகமன் செய்து உபசரித்தார் நாயனார். சிவனடியாருக்கு திருஅமுது செய்திட தன் வீட்டில் ஒன்றும் இல்லாதறிந்தும் மிகவும் வருந்தி தன் இல்லத்தரசி உரைத்தபடி விதைத்த நெல்லை அரித்து சிரமத்துடன் கூடையில் கொண்டு வந்தார். வீட்டில் அடுப்பெரிக்க விறகு இல்லாது

கண்டு தன் வீட்டுக் கூரை மரங்களை வெட்டிக் கொடுத்தார். கறி அமுது செய்ய பின்புறத் தோட்டத்தில் கீரை அறிந்து சமைத்து சிவனடியார் பசியுற்றபோது உடன் பசியாற்ற இயலாத நிலை எண்ணி ஏக்க முற்று சிவனடியாரை எழுப்ப முயன்றனர். எல்லாம் அறிந்த இறைவன் உறங்கியது போலும் பசியால் களைப்புற்று உறங்காதது போலும் கண் வளர்ந்து கண்விழித்தார்.

ஒளி பொருந்திய இடபவாகனத்தில் உமையோடும் கூடி காட்சி தந்து இளையான்குடி மாற நாயனாரையும் அவர்தம் துணைவியையும் ஆட்கொண்டார்.

மாறநாயனாரின் வாரிசுகள் இன்றும் உள்ளன. அவர் வாழ்ந்த வீடும் நிலமும் உள்ளன. மாறநாயனார் திருமடம் உருவாக்கப்பட்டு ஆண்டு தோறும் அவர்தம் திருநட்சத்திரம் விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்னதானம் செய்யப்பட்டு வருகிறது. அமரர் வா.கடம்பனம் பிள்ளை அவர்களால் 1908ம் ஆண்டு தொடங்கியும் 1909ல் மானாமதுரையிலும் 1915ல் இளையான்குடியிலும் மடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 94 வருடங்களாக தொடர்ந்து மாற நாயனாரின் வழித்தோன்றல் நாயனாரின் திருத்தொண்டை இயன்றவரை செய்து வருகின்றார். மடத்துடன் கூடிய விநாயகர் கோயிலையும் புதுப்பித்து நாயனாருக்கு தனிக்கோயிலும் எழுப்பவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு ஆவணி மாதமக நட்சத்திரத்தில் குருபூஜை அன்னதானம் நடைபெறுகிறது. கும்பாபிஷேக நாள் 7-4-2004.

உபகோயில்கள் : இவ்வூரில் அருள்மிகு வேணு கோபால பெருமாள் திருக்கோயிலும் அருள்மிகு வாள்மேல் நடந்த அம்மன் திருக்கோயிலும் உள்ளது. கோயில் தீர்த்தமாக தேவபுஷ்கரணி திருக்குளம் உள்ளது. வேதாந்தமடம் ஒன்றும் உள்ளது இத்திருக்கோயில் சமணர்களின் செல்வாக்கிலும் இருந்தது என்பதற்கு சான்றாக தீர்த்தங்கரர் திருவுருவம் இத்திருக்கோயிலின் முன்பு உள்ளது.

92. இளையான்குடி: அருள்மிகு மதன வேணு கோபால சுவாமி திருக்கோவில்

இருப்பிடம்: இளையான்குடியிலிருந்து 10கி.மீ

இறைவன்: அருள்மிகு பாமா ருக்மணி சகித மதன வேணு கோபால சுவாமி, விஸ்வக்சேனர், பெரிய திருவடி, சிறிய திருவடி, காலிங்க நர்த்தனர், சக்கரத்தாழ்வார், சீனிவாசப்பெருமாள் சிலாவிக்கிரகங்கள் உள்ளன.

விழாக்கள்: சித்திரை உத்ஸவம், ஜேஸ்டாபிசேகம், புரட்டாசி சனிக்கிழமை வைகுண்ட ஏகாதசி விழாக்கள். முக்கிய திருவிழா சித்திரா பௌர்ணமி.

காலம்: 1000 ஆண்டுகள் பழமையானது. கும்பாபிஷேக நாள் 24-6-2005.

93. திருப்பூவனம் : அருள்மிகு பூவணநாத சுவாமி திருக்கோயில்

அமைவிடம்: மதுரை – இராமேஸ்வரம் பெருவழித்தடத்தில் மதுரையிலிருந்து தென்கிழக்கே 19கி.மீ தொலைவில் வைகை ஆற்றின் தென்கரையில் உள்ள பிரமாண்டமான திருக்கோயில்.

அமைப்பு : நான்கு மாட வீதிகளில் கிழக்கு மாட வீதி மத்தியில் கிழக்கு நோக்கியதும் மேல்புறம் சுவாமியின் பெரியராஜ கோபுரமும், கிழ்புறம் இறைவியின் ராஜகோபுரம், பெரிய ராஜ கோபுரத்தை அடுத்து கொடிமர மண்டபமும், இறைவன் இறைவி தனித்தளிகள், இணைந்தும் மணிகர்ணிகை தீர்த்தம், லெட்சுமி தீர்த்தம், சூரிய தீர்த்தம், உள்ளடக்கிய 2ம் பிரகாரமும், பெரிய ராஜகோபுரத்தின் நேராக நடராஜர் சன்னிதி மண்டபம் கூடிய முதல் பிரகாரமும், மகாமண்டபமும், உள்பிரகாரம் அர்த்த மண்டபம், கருவறை கொண்ட அருள்தரு பூவணநாதர் லிங்கத் திருமேனியும், நடராஜர் சன்னதி மண்டபம் வழியாக தெற்கே. அம்பாள் கொடிமர மண்டபம், சந்திர தீர்த்தம், மகாமண்டபம் – அம்பாள் திருத்தளி அர்த்த மண்டபம் கருவறை கூடியதுமான கல்கார பெருங்கோயில்.

இறைவன் : அருள்தரு பூவண நாதர் (இலிங்கத் திருமேனி)

இறைவி : மின்னம்மை என்ற சௌந்தர நாயகி

புராணவரலாறு :

உமையம்பிகைபால் வளர்க்கப்பட்ட பாரிஜாத மரத்தடியில் தோன்றிய இலிங்கத் திருமேனி – கம்பீரமான தோற்றம் உடையது. உளிபடாத திருமேனி.

சூரியன், திரணாசனன், துன்மனன், தருமஞ்சன் உத்பலாங்கி, நளன், பிரமன், திருமால் ஆகியோர் பூசித்து பேறுபெற்ற திருத்தலம்.

வைகைநதி, சந்திர தீர்த்தம், மணிகர்ணிகை, லெட்சுமி தீர்த்தம் சூரிய தீர்த்தம் ஆகிய புண்ணிய தீர்த்தங்கள் தீவினை நீக்கும் திருவினை உடையவை.

திருவிளையாடல் புராணம் :

இத்திருத்தலத்தில் வாழ்ந்து மின்னம்மை உடன்னுறை பூவண நாதரைப் பொழிந்த அன்பால் வழிபட்டுவந்தாள் பொன்னனையாள் என்ற நடனமாது. தான் கலை வளத்தால் ஈட்டிய பொருள் எல்லாம் சிவனடியார்களுக்கு திருஅமுது செய்வதை கடமையாகச் செய்து வாழ்ந்து வந்தாள் பூவண நாதரை பொன் திருமேனியாக உருவாக்கி வழிபட உள்ளம் கொண்ட அவ்வம்மை இறைவனை இறைஞ்சி தேவையான பொருள் இன்றி ஆவல் – அபிலாசையாக ஏக்கம் கொண்ட அம்மை முன்பு, ரசவாதியாக உருக்கரைந்தான் மதுரை சொக்கேசன். பொன்னனையாள் வைத்திருந்த இரும்பு, பித்தளை, ஈயம் எல்லாம்

இமைப்பொழுதில் உருக்கி அவள் உள்ளமும், உயிரும் உருக. மான் மழு ஏந்திய, மால் அறியா நன்முகனும் காணா மலையினை, பொன் உருவாக சமைத்தான். ரசவாதியாக, சித்தனாக வந்த செம்மல்—அழகு திருவுருக்கண்டு அதிசயித்த அந்த அம்மையார் அத்திருவுருவத்தை அள்ளினாள்— ஆசைபொங்க கன்னத்தை கிள்ளினாள்—முகம் பதித்தாள்— முத்தமிட்டாள் "அச்சோ அழகு" — என்று ஆர்ப்பரித்தாள். அது முதல் அப்பெயரும் இறைவனுக்கு ஆயிற்று. அவள் கிள்ளிய நகக்குறி இன்னும் சிலையில் இருக்கிறது 64 திருவளையாடல்களில் 36ம் திருவிளையாடலாக பாடல் பெறுகிறது.

பாடல் பெரும் பாங்கு : திருவிளையாடல் புராணம், கந்த புராணம், பெரிய புராணம் ஆகியவற்றில் இடம் பெறுகிறது.

திருஞான சம்பந்தரால் 1ம் திருமுறை, 3ம் திருமுறையிலும் திருநாவுக்கரசரால் திருத்தாண்டகத்திலும், சுந்தர மூர்த்தி நாயனாராலும் கருவூரார் திருவிசைப்பாவிலும் பாடல் பெறுகிறது.

மணிவாசகப் பெருந்தகையால்
"பூவண மதனிற் பொழிந்து இனிதிருந்து
தூவண மேனி காட்டிய தொண்மையும்" என போற்றப்படுகிறது. கந்தசாமி புலவரால் திருப்பூவணப் புராணம் என தலபுராணம் பாடல்பெற்றது.

கல்லெழுத்து: திரிபுவனச் சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான் திருப்பூவனத்து தண்டல் நாயகம் செய்வர்களுக்கு திருப்பூவண முடைய நயனார் தேவதானம் என மகுடமிட்டு, வாடாக் கடமை இருத்த துஞ்சலூர் உடையான், சுந்தரபாண்டிய பல்லவராயன் எழுதிய சாசனம் — மற்றும் நம்பிள்ளை பராக்கிரமபாண்டியத் தேவர்க்கு யாண்டு ஒன்பதாவது நாள் சிங்க ஞாயிற்றுப் பூருவ பக்கத்து அட்டமியும் புதன் கிழமையயும் பெற்ற அனுட்டத்துநாள் .... நாடாக்கடமை நிறுத்துவித்த ....சைவாபரணபட்டர் எழுத்துடன் கூடிய கல்வெட்டு, முதலாம் சடாவர்மன் குலசேகரன் கி.பி. 1090ம் யாண்டு பட்டயங்கள் இதன் வரலாற்றை விளம்புகின்றன.

பெருமை : பிதிர்கடன் செய்வதற்கு காசியிலும் மேலான திருத்தலம் அஸ்த்தி பூவனமாகக்காட்சி தந்த தலம். வேந்தர் மூலவரும் சுந்தர மூர்த்திகளுடன் தரிசித்த ஸ்தலம். வையை ஆற்று மணலெல்லாம் சிவலிங்கமாக காட்சி தந்த திருத்தலம்.

திருவிழாக்கள் :

நித்திய நைமித்ய வழிபாடுகளுடன் ஆட்டவிஷேசங்கள் ஆடி முளைக்கொட்டு விழா 10 நாட்கள், பங்குனி பிரம்ம உத்ஸவம் 20 நாட்கள், ஐப்பசி கோலாட்டத் திருவிழா 6 நாட்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. குடமுழுக்கு நாள் 27.6.2002.

94. மதுரை : அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில்

தொன்மையும், புகழும் மிக்க மதுரை மாநகர் தமிழ்மொழிக்கும், தமிழர் மாண்புக்கும், பண்பாட்டுக்கும் உறைவிடமானது என்பது அறிந்த உண்மை. மாடமதுரை நகன்மாடக் கூடல், கன்னிபுரம், ஆலவாய் என பல்வேறு பெயர்களால் போற்றப்படும் மாமதுரை வியக்கத்தக்க நகரஅமைப்பு உடையது.

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரை
பூவொடு புரையுஞ் சீரூர் பூவின்
இதழகந்(து) அனைய தெருவம் இதழகத்
அரும் பொருட்டனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண் பறவை யனையர் பரிசில் வாழ்நர்
பூவினுட் பிறந்தோ னாவினாட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
வேம வின்றுயி லெழுத வல்லதை
வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியின் எழாதெம் பேரூர் துயிலே – பரிபாடல்

மாலோன் கொப்புலாகிய, மலர்ந்த தாமரையாகிய–மதுரையில் அதன் பொகுட்டாக அண்ணல் ஆலவாய் இறைவன் கோயில் கொண்டுள்ளதாக பழங்கால பரிபாடல் கூறுகிறது.

அமைப்பு : "அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் ஆலயம் மதுரை" மேலமாசி வீதியில் அமைந்துள்ள இந்த ஆலயம் மேற்கு நோக்கியது ராஜகோபுரம் பிரகாரம். கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், உள்நாழி கொண்ட இறைவன் கற்றளியும், – தெற்கு நோக்கிய கருவறை, அர்த்தமண்டபம் உள்நாழி கொண்ட இறைவியின் கற்றளியும் – மாடமதிலுடன் கூடியதாக சிவாலய திருமேனிகள் கொண்டு விளங்குகிறது.

வரலாறு : "மலையத்துவஜ பாண்டியன்" விற்கொடி, புலிக்கொடி மீனக்கொடியுடைய மூவேந்தர்கள். பாண்டிய வேந்தர்களுக்குக பர்வதம் "மலை" கொடியாக இருந்தது. பர்வதராஜன் மகளாக பார்வதி தேவி மீனாட்சியாக அவதாரம் செய்து மலையத்துவஜ பாண்டியனுக்கு மகளாக தடாதகைப்பிராட்டி என்ற திருநாமத்துடன் அரசு செய்து, அனைத்தும் வென்று இறைவனுடன் போரிடுகிறான். உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரிய பிரான் (பிரியாதவன் என்பதன் மருஉ) சுந்தரபாண்டியனாக பாண்டிய மன்னனாகவும் தடாதகை பிராட்டி அரசியாகவும் ஆட்சி செய்தனர்.

அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய் அண்ணல் அரசுப்பணிகளை மானிட முறைப்படி செய்து செங்கோல் செலுத்தினர்

மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள் என்பதற்கு இணங்க, மானிடனாகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா என்பதற்கு இணங்க, உயர்நிலையை உணர்த்தும் பொருட்டு நான்மாடக்கூடலின் நடுவில் ஆலயம் உண்டாக்கி இறைவழிபாடு செய்தான் மன்னவனாய் அவதரித்த மாமணிச்சோதி.

இறைவனே நிறுவிய இந்த ஆலய லிங்கத்திருமேனி" இம்மையிலும் நன்மை தருவார் எனவும் இறைவி நடுவூர் நாயகி என்ற மத்யபுரி அம்பாள் எனவும் திருநாமம் கொண்டுள்ளனர்.
இதனை கல்லாடம் என்ற பழந்தமிழ்பாடல்

"முலை மூன்று அனைந்த சிலைநுதல்
திருவினை அருமறை விதிக்கத் திருமணம் புணர்ந்து,
மதிகுலம் வாய்த்த மன்னவனாகி மேதினி
புரக்கும் விதியுடைய நன்னாள்
நடுவூர் நகர் செய்து அடுபவம் துடைக்கும் அருட்குறி நிருவி
அர்ச்சனை செய்த தேவர் நாயகன் கூடல் வாழிறை"–**எனவும்**

திருவிளையாடல் திருமணப்படலத்தில்

"தென்னவன் வடிவம் கொண்ட சிவபதன் உலகம் காக்கும்
மன்னவன் சிவனைப் பூஜை செய்வது மறைஆறு என்று
சொன்னது மன்னர் எல்லாம் துணிவது பொருட்டுத் தானும்
அந்நகர் நடுவூர் என்றோர் அணிநகர் சிறப்பக் கண்டான்" –
எனவும்

"மெய்மை நூல் வழியே கோயில்
விதித்த அருள்குறி நிறீஇ பேர்
இம்மையே நன்மை நல்கும்
இறை என நிறுவி பூஜை
செம்மையாற் செய்து நீப
வனத்துறை சிவனைக் காலம்
மும்மையும் தொழுது வையம்
முழுவதும் கோல் நடத்தும்"

– எனவும் – பரஞ்சோதி முனிவர் பாடல் செய்துள்ளபடி இறைவனே லிங்கத்திருமேனி நிறுவியும் இம்மையிலும் நன்மை தருவார் என திருநாமம்யிட்டும் கடம்பனத்து மன்னிய சிவனாகிய தன்னையே தானே பூஜகனாகவும், பக்தனாகவும் இருந்து வழிபட்டார்.

ஆகமம் அருளிய அண்ணல் கருவறையிலேயே லிங்கத் திருமேனியுடன் அம்மை அப்பனாக உருவத்திருமேனி காட்டி அருளுகிறான்.

லலிதா சகஸ்திரநாமம் - "தியான தியாத்ரு தியேய ரூபா, தர்மா

தர்ம விவர்ஜிதா" – என உரைத்தபடியும் மகாவிஷ்னு ஸகஸ்த்திர நாமம் "ஸ்தோத்திரம் ஸ்துதிர் ஸ்தோதாரணப் பிரியா"என்றபடியும் துவாத சாந்தப்பெருவெளியாக உள்ள சதாசிவன் இதய கமலத்தில் நடுவூர் நாயகியான அன்னை மீனாட்சியுடன் இணைந்து தியான முறைப்படி, பந்தனுக்கு முன்னிலையில் காட்சிதரும் நிலையில் உள்ளது. – சிறப்புடையது. வடலூர் வள்ளல் பெருந்தகை கண்ணாடியில் கண்ட தன் உருவத்திலேயே முருகப்பெருமான் திருவுருவத்தைக் கண்டதையும் "தன்னை அறிந்து இன்ப முற வெண்ணிலாவே ஒரு சங்கதி நீ சொல்ல வேனும் வெண்ணிலவே" என்று பாடியதும் நினைவிற் கொள்ளத்தக்கது. ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர் பரவச சமாதிகளில் தன்னையே வழிபட்ட செய்தி அறியலாம்.

பட்டாபிஷேகப் பெருவிழா:

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் ஆவணி மூலத்திருவிழா 7ம் நாள் காலையில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் இத்திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடுகள் செய்து அன்று இரவு முடிசூடுவது மரபு. இது கண்கொள்ளாக்காட்சி.

திருப்பணி : மன்னர் திருப்பணியுடன் 1963ம் ஆண்டு புதிதாக ராஜகோபுரம் கட்டி விமான புனருதாரணப்பணிகள் நடைபெற்றுள்ளன.

திருவிழாக்கள் :

ஐப்பசி கோலாட்ட உத்ஸவம், கந்தர்சஷ்டி மற்றும் ஆட்டவிஷேசங்கள் சிறப்புடன் நடைபெறுகின்றன. பிரதோசம் மிகச்சிறப்புடன் நடைபெறுகின்றது.


மாசி பிரம்மோற்ஸவம் 12 நாட்கள்
மார்கழி அஷ்டமி பிரதட்சிணம்

"மறுமையில் மட்டுமின்றி இம்மையிலும் நன்மை தரும் இறைவன் கருணையை வியந்து."-

"இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
ஐயுற(வு) இல்லையே"

என சுந்தரர் அழகுற பாடி வைபத்து வாழ்வாங்கு வாழ இப்பிறவியிலேயே அனைத்து பொருள் வாழ்வும் அருள்வாழ்வும் தருகிறான் என்பதை உறுதி செய்கிறார்.

மகாகும்பாபிஷேகம் 7.2.1990, 14–7–2006ல் நடைபெற்றது.





அருள்மிகு இம்மையில் நன்மை தருவார் மத்தியபுரி அம்மன்
இம்மையில் நன்மை தருவார் மதுரை.

திருவெற்றியூர் சரக திருக்கோயில்கள்

95. திருவெற்றியூர் : அருள்மிகு வன்மீகநாத சுவாமி சமேத பாகம்பிரியாள் திருக்கோயில்

சிவகங்கை – தொண்டி நெடுஞ்சாலையில் திருவாடானை வட்டம் திருவாடானை நகரிலிருந்து 15கி.மீட்டர் தொலைவிலும் தொண்டிக்கடல்கரையிலிருந்து 12கி.மீட்டர் தொலைவிலும் உள்ளது. பாண்டி 14 திருத்தலங்களில் ஒன்றானதும் சேது சமஸ்தான் நிர்வாகத்திற்கு உட்பட்டதுமான அருள்மிகு சினேகவல்லி அம்மாள் சமேத ஆதி ரெத்தினேஸ்வரர் திருக்கோயிலுக்கு கிழக்கே உள்ள திருத்தலம்.

இறைவன்: அருள்மிகு வல்மீகநாத சுவாமி என்ற பழம்புற்று நாதர்

இறைவி: அருள்மிகு பாகம்பிரியாள் அம்பாள்

விநாயகர் நினைத்ததை முடிக்கும் விநாயகர் என்ற பெயர்.

அமைப்பு: திருவீதியும், வாசுகிதிர்த்த திருக்குளம் முன்னிற்க புதிதாககட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் மண்டபமும், குடவறையும், உள்பிரகாரமும், கொடிமர மண்டபமும், தென்பிரகாரத்தில் ஸ்தல விருட்சமான வில்வமரம் பழம் புற்றுடன் கூடிய காரண ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்ட பரிவாரமூர்த்திகளும் சூழ கிழக்கு நோக்கி அருள்பாலிக்கும் லிங்கத்திருமேனி அருள்மிகு வல்மீக நாதர்சுவாமி– கற்பகிரகம், அர்த்தமண்டபம் கூடிய மாமண்டபத்தில் தெற்குநோக்கி கருவறையில் காட்சி தரும் அன்னை அருள்மிகு பாகம்பிரியாள். தெற்கு நோக்கிய குடவறைவாயில், மண்டபங்கள், அலுவலகம், களஞ்சியம் சூழக்காட்சிதரும் இத்திருக்கோயில் அருளாற்றல் ஒளிரும் சக்தித்திருத்தலம். தேவார வைப்புத் திருத்தலமாக கொள்ளப்படுகிறது.

புராணம்:

மகாபலி சக்கரவர்த்தியான சிவபக்தன் தலையில் தன் பாதத்தை அழுத்திய திருமாலுக்கு திருப்பாதத்தில் புற்றுநோய் ஏற்பட்டது. நோய் தீர திருமால் இத்திருத்தலத்தில் வழிபட்டு புற்றுநோய் நீங்கப்பெற்றார்.

"அறைதரு சக்தி நான்காம் அரன் தனக்கு ஐயை, காளி
முறைதரு கௌரி இன்னோர் மும்மையும் பெற்றார் ஏனைப்
பெறலரும் சக்தியான் இப்பெற்றியும் மறைகள் பேசும்" –
என்று மகாவிஷ்னு கூர்மபுராணத்தில் விளம்புகிறார்.

அரன் என்ற ஆணுக்கு இணை அரி: இறைவன் – இறைவி: போர்ச்சக்தி, கோபசக்தி, இன்பசக்தி, புருஷசக்தி என்ற நால்வகை சக்திவடிவங்களில் துர்க்கை போர்சக்தியாகவும், கோபசக்தியாக காளியும் இன்ப சக்தியாக கௌரியும், புருஷ சக்தியாக மகாவிஷ்னுவும் சிவசக்தி ஐக்கிய நிலையில் திகழ்வர் என்பது சாஸ்திர கோட்பாடு.

வாசுகி தீர்த்தம் : தேவர்களும், அசுரர்களும் அமுதம் வேண்டி திருப்பாற்கடல் கடைந்த போது வாசுகியை, தாம்புக்கயிறாக பயன்படுத்தி தேவர்களும், அசுரர்களும் அமுதம் கடைந்தனர். வலி பொறுக்க இயலாத வாசுகி ஒத்துழைக்கமறுத்தது – சாபம் பெற்றது. சாபம் நீங்க திருவெற்றியூர் வந்தடைந்தது. ஒரு பழம் புற்றில் குடியேறி பாகம்பிரியாளை பூசித்து அருள்பெற்றது. வாசுகி தீர்த்தமாக அருள் செய்தது.

அருள்: சாதி மத வேறுபாடுகள் இல்லாது தரிசிக்கும் ஆலயங்களில் தலைசிறந்தது. இங்கு வழிபட்டு நன்மைகள் அடைகிறவர்கள் அனேகம் நம்பி வந்தவர்களை கைவிடாது, அவர்கள் நோய்தீர்த்தும், வாழ்வுக்கு வசந்தம் அளித்தும் வருவது இத்திருக்கோவிலில் நடைபெறும் உண்மை நிலவரம். பெற்ற குழந்தைகளுக்கு நன்மை செய்யும் தாயுள்ளம் கொண்ட இப்பராசக்தி – பாகம்பிரியாள் தன் பக்தர்களையும் பிரிவது இல்லை.

வேண்டுநர்க்கு வேண்டியாங்கு அருளும் அன்னை கண் கண்ட தெய்வம். இவள் அருள் வெளிப்பாடு கண்ணில் கானக்கூடியவை. தீராத நோய் எல்லாம் தீருகின்றன. ஆத்தாளிடம் வேண்டி வெறுங்கையுடன் திரும்பியவர்கள் கிடையது. பூரண மகிழ்ச்சியுடன் தன் குறை நீங்கி நிறைவுடன் திரும்ப இத்தாயை தரிசிக்க வரவேண்டும் என்ற வரத்துடனே திரும்புகின்றனர். இவள் அருளுக்கு எத்தனையோ நிகழ்ச்சிகளை நினைவு கூறலாம்.

விடநாகம் கடித்து மரண நிலையில் உள்ள ஒருவனை நம்பிக்கையுடன் கொண்டு வந்து வாசுகித் தீர்த்தத்தில் முக்கி எடுத்து ஆத்தா முன் கொண்டு வந்து அவன் வாயிலில் வேப்பிலையை திணிக்கிறார்கள். – திருநீற்றை பூசுகிறார்கள் – அவன் பிழைத்து எழுகிறான். பாம்பு கடித்தவர்கள் விஷம் இங்கு ஆத்தாள் கருணையாள் பஞ்சாய் பறக்கிறது.

தீரா நோய் உள்ளவர்கள், அருவருக்கத்தக்க நிலையில் வியாதியால் வருத்தமடைந்தவர்கள் – இங்கு வந்து அன்னையிடம் வேண்டி நிவாரணம் பெறுகிறார்கள்.

இங்கு வந்து வியாழக்கிழமை தங்கி வெள்ளிக்கிழமை வழிபாடு செய்து வீடு திரும்புவது இங்கு மரபு.

ஆந்திர மாநில காவல் அதிகாரி ஒருவர் மகள், படித்துப்பட்டம் பெற்றவள்.– இவளுக்கு சித்தபிரமை ஏற்பட்டது. எத்தனையோ மருத்துவங்கள் செய்தும் பயனில்லாத நிலையில் திருவெற்றியூர் வந்து பூரண குணம் அடைந்தாள் அந்தபாக்கியசாலி பெண்.

ஊமையும் இங்கு பேசியது – இக்காலத்திலும் இது நடக்கிறது என்பதற்கு சான்றாக கூப்பிய கரத்துடன் அச்சிறுவனுக்காக பதுமை செய்து வைத்திருப்பதை காணலாம்.

– பூபாளம்

அம்மா உன்மஞ்சள் அபிஷேகத் தீர்த்தம்
அன்போ(டு) அருந்தும் அடியார்
எம்மா யநோய்கள் என்றாலும் என்ன
எளிதாக நன்மை பெறுவார்
செம்மேனி மஞ்சள் திருநீறு தந்து
தேனே என் துன்பம் தவிராய்
சிவனார்தம் பாதம் பிரியாது வாழும்
திருவெற்றி யூரின் உமையே!

கொடுசூர் பிசாசு கெடு நோய்களோடு
கொலைபாதகங்கள் அகலும்
விடநாகம் மற்றும் தலையேறும் நஞ்சு
விரைவாய் இறங்கி மறையும்
திடமான பக்தி உடையார் நினைந்த
செயல்யாவும் பெற்றி அடையும்
சிவனார்தம் பாகம் பிரியாது வாழும்
திருவெற்றியூரின் உமையே!

யான்பெற்ற மக்கள் மனை வாழ்வு கீர்த்தி
யாவும் நின் தாளிற் சரணே
ஊன்பெற்ற நோயை உடனே அகற்றி
உதவுவாய் நீ தேக நலனே
தேன்பெற்ற வண்ண மலரேஎம் இல்லம்
சீர்பெற் றிலங்க அருளே
சிவனாந்தம் பாதம் பிரியாது வாழும்
திருவெற்றியூரின் உமையே!

பேராசிரியர் அருட்கவி கு.செ.ராமசாமி

இத்திருத்தலத்திற்கு தேவகோட்டை சின்னையாசெட்டியார் என்பவர் தலபுராணம் பாடியுள்ளார். அன்மையிலும் இவள் அருளால் பாடப்பெற்ற பூபாளம் என்னும் சந்தக்கவி அருட்கவி கு.செ.ராமசாமி அவர்களால் பாடப்பெற்று அனைவர் குடும்பங்களிலும் ஆத்தாளின் புகழ் மணக்கவும் தன் குடும்பம் நல்வாழ்வு பெறவும் வேண்டி பாடப்பட்டு வருகிறது.

1விஷேசநாட்கள்: இத்திருத்தலத்தில் வியாழக்கிழமை தங்கியிருந்து வெள்ளிக்கிழமை வழிபடுவது இங்கு ஒவ்வொருவாரமும் திருவிழாக்கோலம் தான்.

முக்கிய திருவிழாக்கள்: சித்திரைத் திருவிழா 10 நாட்கள் ஆடி பூச்சொரிதல் 1 நாள் குடமுழுக்குநாள் 15.9.1999.

உபகோயில்கள்: அருள்மிகு பாகம்பிரியாள் திருக்கோயிலின் வடகிழக்கே அருள்மிகு வாழவந்த அம்மன் திருக்கோயில் அம்பிகை பத்ரகாளியாக கருணை செய்யும் இவனுக்கு முன்னதாக திருவிழாக்கள் செய்தபின்பே பெரியகோயிலுக்கு திருவிழக்கள் நடைபெறுகிறது.

96. வழிபாடும் பயனும்:

"உலகை படைத்து உடையவனாகி எங்கும் நிறைந்த இறைவன் உள்ளன்பினால், அறிவினால், எண்ணங்களினால் வரையறை செய்யப்படுகிறவனாய் இதயத்தில் எப்பொழுதும் வீற்றிருப்பவன் இதை யார்அறிகிறார்களோ அவர்கள் அமிர்தமயமாகிறார்கள்"

– என்பது உபநிடத வாக்கியம்.

"கோயில் முழுதும் கண்டேன் கோபுரம் ஏறிக்கண்டேன்
தேவாதி தேவனையான் தோழி! தேடியுங் கண்டிலனே!
உள்ளத்தில் உள்ளானடி அதை நீ உணர வேண்டுமடி
உள்ளத்தில் கண்டுவிட்டால் கோயில் உள்ளேயும் காண்பாயடி"

– கவிமணி

"உணர்ந்த உணர்தலின் ஆன்மா" – என்கிறது சிவஞான போதம். பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல், – நோக்கமும் போக்கும் நன்முறையில் அமைந்தால், அதன் பயன் உடனே கைகூடும். இறைவழிபாட்டில், வழிபாடே பயனாக அமைகிறது. இறைவழிபாடு அவரவர் அறிவு, உள்அன்பிற்கு இணைந்தபடி மேன்மையடைகிறது. தனிவழிபாடாகவும், மானிட சமுதாயத்திற்கு ஏற்றம் தரும், சாதிசமய வேறுபாடு கடந்த, எதையும் எதிர்பார்க்காத, எதிர்ப்பு இல்லா கூட்டு வழிபாடாகவும், வழிபடப்படுகின்றன. தியானம், ஜெபம், யோகசாதனைகள், முதலான தனித்தவழிபாடாகவும், மற்றும் பல்லோராலும் கலந்து பழகி பண்பட்ட முறையில் நடைபெறும் திருவிழாக்கள், விஷேச வழிபாடுகள் ஆகியவற்றை நம் முன்னோர்கள் முறைப்படுத்தியிருக்கிறார்கள். இவ்வழிபாடுகள் மகிழ்ச்சியாக நடைபெற்றால் நாம் அனைவரும் பக்குவபட்டோம், பண்புடையோம் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்திகழும் – அமுத நிலை என்பது அதுவாகத்தான் இருக்க இயலும்.

தனிமனித ஒழுக்க நிலையே சமயங்களுக்கு எல்லாம் அடிப்படை. பல்வேறு பிரச்சனைகளில் கலந்து வாழும் மனிதன் இறைமையை மிக நெருக்கம் கொண்ட தாயாக, தோழனாக, ஆசானாக, தலைவனாக கொண்டு தன் எண்ண அலைகளை முறைப்படுத்தி முன் வைப்பது பிரார்த்தனை. அதற்கு பலன் நம் சான்றோர் அனுபவமாக அடைந்திருக்கிறார்கள். மற்றவரும் அத்தகைய நலனை அடையமுன் மாதிரியாக, கைங்கர்யம் – செயல்வடிவில் செய்தனர். அவைகளால் திருக்கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும் உருவானது. இதனை ஏற்றம் பெறச்செய்வது நமது கடமை.

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மன மணி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறையசீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனைக்கும் போற்றுவீர் காட்டினோமே"

– என்பது அப்பர் தேவாரம்

"நின் அளந்து அறிதல் மண்ணுயிர்க்கு
அருமையின் நின் அடி உள்ளி வந்தனன்.
நின்னொடு பொறையுனர் இல்லா புலமையோய்"

– என நக்கீரர்

திருமுருகாற்றுப்படையில் ஆற்றுப்படுத்துவதுபோல், உனது புகழ் புலவர் பலரால் பரவப்பெற்று பாடப்பெற்று எம்மால் முறைபிறலக் கூறுவதே என்று பூரண சரணாகதி செய்வதே முழுமையான வழிபாடாகும். அகப்பூஜை முடிந்து புறப்பூஜை தொடங்குகிறது.

பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்த இறைவனை தன் எண்ணங்களை நிலைநிறுத்தி அதன் செயல்பாட்டை (reflection) திரும்பப் பெற நினைந்த மனிதன் மண்ணிலும், மரத்திலும், ஆயுதங்களிலும் வாழ்வாங்கு வாழ்ந்த சான்றோர் வடிவாகவும் ஆலயங்களிளுமாக பதிவுசெய்த நிலையில் உலக சமுதாயம் ஆன்ம நேய ஒருமைப்பாடு அடைவது நோக்கமாகக் கொண்டால் கருணைவடிவான இறைவன் அறம், பொருள், இன்பம் இம்மையிலேயே நன்மை தந்து வையத்துள் வாழ்வாங்கு வாழச்செய்வான். அதுவே வழிபாட்டின் பயன்.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவில்லை
கண்ணின் நல்லஃதுரும் கழுமல வளநகர்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"





அருள்மிகு

கண்ணுடைய நாயகி அம்மன்

நாட்டரசன்கோட்டை